

MADRAS

★ கிருமியை கொல்லுகிறது

காயத்தை ஆற்றுகிறது

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட்.,

சென்னை-2.



BURMAH-SHELL... IN INDIA'S LIFE AND PART OF IT

பலமும், ஆரோக்கியமும் பெருக

உங்கள் சிற்றுண்டி வகைகளை ஓ. கே. வனஸ்பதியில் தயாரியுங்கள். அதில் ஒரு அவுன்ஸிற்கு 700 I.U. வைட்டமின் 'A' சத்து இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறது.

OK ஓ.கே. வனஸ்பதி

இப்பொழுது ஏர்-டைட் லீவர்-லிட் டின்களில்கிடைக்கும். இதனால் அது கடைசி அவுன்ஸ்வரை புதுமை மணம் கெடாமலும், சுத்தமானதாகவும் இருக்கிறது

காலியானதும், ஏர்-டைட் 'ஓ. கே.' லீவர்-லிட் டின்களை உங்கள் அடுப்பங்கரையில் சுகாதாரமான முறையில், சாமான்களைப் பத்திரப்படுத்திவைக்க உபயோகியுங்கள்.

தயாரிப்பவர்கள்

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி

(இந்தியா) பிரைவேட் லிமிடெட்,

மதருஸ்.

நான்
விரும்பி வாங்குவது
உம்மிடியார்
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல்
பாத்திரங்களே
VUMMIDIARS
Stainless Steel
வெள்ளி
ஸ்டெயின்
லெஸ் ஸ்டீல்
பாத்திரங்களை
சைஷனே
விஞல்
துலக்குங்கள்
உம்மிடியாரின் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களையே நான் பொறுக்கிஎடுப்பதற்கு பலகாரணங்கள் உண்டு. உம்மிடியார், உடையாத, நொறுங்காத துருஏருதமுதல் தாமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீலையே உபயோகிக்கிறுர்கள். பெண்மணிகளால் பெரு மதிப்பைப் பெற்ற இந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் வெகு காலம் உழைக்கக் கூடியவை. ஆனுலும் மிக மலிவானவை.
உம்மிடியார்ஸ்
(மான்யுபாக்சரர்ஸ்) லிமிடெட்.
சென்னை-2.
VRZ-32

இந்தியன் பாங்க்

லிமிடெட்

(ஸ்தாபிதம் :  1907)

தலைமை ஆபீஸ்:

இந்தியன் பாங்க் கட்டிடம், வடக்கு பீச்ரோடு,
மதருஸ்-1

சென்னை நகர ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், சௌகார்பேட்டை, எழும்பூர், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, மவுண்டு ரோட், ராயப்பேட்டை, ஆள்வார் பேட்டை—தேனும்பேட்டை, மைலாப்பூர், காந்திநகர், தியாகராய நகர், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம் பெரியமெட், ராயபுரம் & தாம்பரம் (சுற்றுப்புறம்)

தென்னிந்தியா முழுவதிலும், பம்பாய், கல்கத்தா மற்றும் புதுடில்லியில் கிளை ஆபீஸ்களும் சப்-ஆபீஸ்களுமிருக்கின்றன.

வெளிநாட்டு பிராஞ்சுகள் :

கொழும்பு, கோலாலம்பூர், மலாக்கா, பினங்கு & சிங்கப்பூர்.

மூலதனம்

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	60,20,000
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	77,50,000
டிபாசிட்டுகள் (31-12-55வ அன்றுள்ளபடி)		ரூ.	29.44 கோடி

லண்டன் ஏஜண்டுகள் :—வெஸ்ட்மின்ஸ்டர் பாங்க் லிமிடெட்
நியூயார்க் ஏஜண்டுகள் :—நேஷனல் சிடி பாங்க் ஆப் நியூயார்க்.

வெளிநாட்டு பரிவர்த்தனை வியாபாரம் உள்பட சகலவிதமான பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

என். கோபால அய்யர்,
காரியதரிசி.

எனது இனப்பெயர்—தமிழன் எனது கொள்கை—சமதர்மம்
எனது தாய்நாடு — தமிழ்நாடு எனது குடும்பம்—இந்திய சமுதாயம்
எனது கோரிக்கை—தமிழரசு எனது பண்பு—தெய்வீகக் கலாசாரம்
எனது சமரசநெறி — சர்வதேச சகோதரத்துவம்

உமா

ஆசிரியர். ஜி. உமாபதி

துணை ஆசிரியர்:
பூவை எஸ். ஆறுமுகம்

செடி 4 மலர் 1	மே, 1956	துன்முகி ஞு வைகாசி மீ

பொருளடக்கம்

என் நன்றி	(தலையங்கம்)	....	9
இலங்கை இந்தியர்கள்	—	....	10
இளங்கோ திருநாள்	—	....	10
மாதவியின் மாண்பு	ம. பொ. சிவஞானம்	....	11
தம்பிக்கு (கடிதம்)	'பதி'	....	14
உங்களுடன் ஒரு கணம்	—	....	16
எஸ். ஏ. பி. (பேட்டிக் கட்டுரை)	பூவை எஸ். ஆறுமுகம்	....	17
பள்ளி எழுச்சி (அந்தாதிக் கவிதை)	ச. ய. சுப்ரமணியம்	....	18
சமர்ப்பணம் (,, ,,)	டி. வி. சுவாமிநாதன்	...	19
ஜாதி ரோஜா (புதிய தொடர்கதை)	'பூவை'	....	23
வேழமும் வேல்விழியும்	'சௌமி'	....	33
எங்கள் இதயங்கள் பேசுகின்றன	—	....	34
நடமாடும் தெய்வங்கள்	பி. எஸ். ஏ.	....	35
'சீக்கிரம் வாருங்கள்!'	கிஷோர் ஸாஹு	...	36
ஆசி கிடைத்தது!	ஏ. வி. ஆர். கோகிலா	....	39
இரண்டாம் தாரம்	வீர. பழனியப்பன்	....	40
அமர நிலை	'பாலா'	....	46
ரங்கூன் கமலம் (தொடர் கதை)	'எல்லார்வி'	....	47
நீ யார்?	'ஆழி'	....	54
எதிர்பாராதது!	'ரஜனு'	....	55
ஏன் இந்தப் புனைபெயர்?	'ஜடாதரன்'	....	56
காதலின் கண்கள்	கி. ரா. கோபாலன்	....	57
பாப்பா உமா	'வாண்டு மாமா'	....	66
மரகதச் சிலை மர்மம் (சித்திரத் தொடர் கதை)	'வாசுகி'	...	64
பஞ்சதந்திரம்	ஆர். ஸி. மணி	....	67
ஐந்து நிமிடச் சித்திரங்கள்	'பெனடிக்ட்'	....	64
கண்ணைக் கட்டி நில்லு!....	ராகுலன்	...	71
பட உலகம்	பைரவி	....	76

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம்
கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

மே 11-ந் தேதி முதல் சென்னை,
ஸ்ரீ கிருஷ்ணா, வெலிங்டன்
& உமா தியேட்டர்களில் ஆரம்பம்

197215

உமா

என் நன்றி

தெய்வத் தமிழ் வளர்க்கும் அருமைத் தாய் தந்தையர்களே! அன்பும் அறமும் பேணித் தமிழ்ப் பண்பைக் காத்து வரும் பெரியோர்களே! அன்புச் சகோதர சகோதரிகளே!

இன்று என்னுடைய நான்காவது பிறந்தநாள் விழா விமரிசையாகக் கொண்டாடப் படுகின்றது.

'தமிழ் முழங்கும் எல்லாப் பகுதிகளிலும் 'உமா' என்ற இரண்டெழுத்துப் பெயர் முழங்குகிறது; தமிழ் மனைகளிலே 'உமா'வின் இலக்கியச் சுடர் அற்புதமாக ஒளி வீசி வருகிறது' என்றெல்லாம் உமா வாசகர்கள் தங்கள் நல்லெண்ணங்களைத் தெரிவிப்பதைக் கேட்கும் போது, நான் மட்டுந்தானா ஆனந்தக் கூத்தாடுகிறேன்?—நீங்களும் கூடத்தான்!

நீங்கள் அறிவீர்கள்—கண்ணையும் கருத்தையும் கவரும் கலையழகோடு, பண்பு நிறைந்த பாவாடை அணிந்து, தமிழ்க் கலாசார அணிகலன்கள் பூண்டு, நெறி நிறைந்த அரசியல் ஞானம் பெற்று, தெய்வீகத் தமிழ் மணம் கமழ, உங்கள் இல்லங்களிலே நான் வெற்றிநடை நடந்து பவனி வந்து கொண்டிருக்கிறேன்.

நான் அறிமுகப்படுத்திய ஆரம்ப எழுத்தாளர்கள், இளங் கவிஞர்கள் பலர் இன்று பிரபலமாகி யிருக்கின்றனர். எழுத்துலகின் ஜாம்பவான்கள் பலரை ஒன்று சேர்த்து வைத்து எழுதச் செய்த பெருமையும் எனக்கு உண்டு. பயனுள்ள புதிய புதிய பகுதிகளையெல்லாம் ஆரம்பித்தும் சேர்த்தும் வருகிறேன், எழுத்தாளர்—வாசகர்களாகிய உங்கள் இலக்கிய உள்ளங்கள் நிறையும் அளவிலே.

கல்லூரி மாணவ மாணவிகளுக்கெனச் சிறுகதைப் போட்டியொன்று நடத்தினேன். அதிலும் எனக்கு வெற்றிதான். அதோ, வெற்றி பெற்ற ஐந்து மாணவ மாணவிகள் பரிசு பெறக் காத்திருக்கின்றனர். தமிழ் வளர்க்கும் காவலர்கள் தமிழ் முழக்கம் செய்யத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். என் விழாவில் இனியும் நான் பேசிக் கொண்டே போக மாட்டேன்.

என்னை வாழ்த்த, தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களாகிய திருவாளர்கள் ம. பொ. சிவஞானம், சோமு, அண்ணாமலை, மகாதேவன், கி. வா. ஜகந்நாதன், சீனிவாசராகவன், சேதுப்பிள்ளை, இராமநாதன் செட்டியார், திருமதி இந்திரா ஆகியோர் புன்னகையுடன் காத்திருக்கின்றனர். என் பிறப்புக்கு இதைவிடச் சிறப்பு வேறு என்ன தேவை? 'தமிழன்னை அரியாசனம் வகிக்க வேண்டும்; தமிழன் தலை நிமிர்ந்து வாழ வேண்டும்; தமிழ்நாடு என்ற பெயர் நிலைத்து, புகழ் மண்டித் திகழவேண்டும்,' என்பதுதான் என் பிரார்த்தனை.

எனக்கு வாழ்த்துக்கள் வழங்கக் கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும் என் உண்மை அன்பு கலந்த பணிவு மிக்க வணக்கத்தையும் நன்றியையும் காணிக்கை செலுத்துகிறேன்.

"உமா"

இலங்கை இந்தியர்கள்

இலங்கைச் சரித்திரத்திலே திரு ஸாலமன் பண்டார நாயகா அவர்களின் முதலமைச்சர் பதவி அதிசய நிகழ்ச்சி மாத்திரமல்ல; குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியுங் கூட. இரண்டு சேனநாயகாக்கள், ஒரு கொத்தலாவலை—இவர்களை அடுத்து பண்டார நாயகா வந்திருக்கிறார் செய்தித்தாள்கள் கூறுகின்றன, இப்போதைய முதலமைச்சர் பாரதத்தின் சோஷலிஸ அமைப்பில் பற்றுக் கொண்டவர் என்று. இந்தியப் பிரதமரின் சுவட்டைப் பின்பற்றுபவர் இலங்கைப் பிரதமர் என்றும் கேள்விப் படுகின்றோம். ஆனால், பண்டார நாயகாவின் பேச்சுக்கள் சிலவற்றிலிருந்து, இலங்கை வாழ் இந்தியர்கள் விஷயத்தில் அவர் கவனம் எடுத்துக் கொண்டதாகத் தோன்றவில்லை. அவர் சிங்களவர்; சிங்கள மொழிக்குத்தான் பிரதானம் கொடுப்பார். என்றாலும், தமிழ் மொழிக்குரிய சம அந்தஸ்து உரிமையை அளிக்க, இலங்கையில் வாழும் இந்திய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைக் கொடுக்க இவர் முன்வந்தால்தான், இவரது 'ஜனநாயக சோஷலிஸ' வழிக்கு அர்த்தம் இருக்கும்; மதிப்பு இருக்கும்!

இளங்கோ திருநாள்

'அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாவதும், பத்தினியை உயர்ந்தோரேத்துதலும், ஊழ்வினை தானே உருவெடுத்து வந்து செய்தோனை உண்பித்தலும்' ஆகிய மூன்று உயரிய குறிக்கோள்களைச் சிலம்பு வாயிலாக முழங்கிய பெருமை சிலப்பதிகாரக் காப்பியம் படைத்த இளங்கோவடிகளைச் சாரும். அண்மையில். இளங்கோ திருநாள் தமிழ்ப் பகுதிகளில் தமிழ் விழாவாகக் கொண்டாடப்பட்டது. தமிழறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்த செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன. இந்த இளங்கோ விழா நடைபெற ஆதிகாரணமானவர் திரு ம. பொ. சி. அவர்களே என்பது தமிழுலகம் நன்கறிந்த சேதியேயாகும்.

'உலகமே வியக்கக்கூடிய அற்புதச் சித்திரத்தை இளங்கோவடிகள் கொடுத்தார். இந்நாட்டில் வீடுதோறும் கண்ணகி விழா நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது. இவ்விழா பயன்பட வேண்டும். நமது இதயத்தில் இளங்கோ, கண்ணகி ஆகியவர்கள் இடம் பெற வேண்டும். சிலப்பதிகாரத்தை எல்லோரும் படிக்க வேண்டும். படித்தால் புரியக் கூடிய நூல்தான் அது' என்றார் சிலம்புச் செல்வர். ஆம்; அவரது கனவும் வேண்டுகோளும் வெற்றி பெற்றுக் கொண்டு வருவதற்கு, இவ்விழாவின் சிறப்பே நல்லதொரு எடுத்துக்காட்டு.

அடுத்த இதழில் :

உமா கல்லூரி மாணவர்–மாணவிகள் சிறுகதைப் போட்டிப் பரிசுக் கதையும், பரிசு பெற்றவர்களின் புகைப் படங்களும், விழா நிகழ்ச்சியின் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

பேட்டி:
சி. என். அண்ணாதுரை

தம்பிக்கு:
ஜி. உமாபதி

அந்தாதிக் கவிதை வரிசை: **கொத்தமங்கலம் சுப்பு, தமிழ் நெஞ்சன்**

சிறுகதைகள்: **ஸி. ஆர். ராஜம்மா, டி. ராஜன், ருக்மணி சாம்ராஜ், அனஸ். ஏ. எம். மீரான், டர்பன் ச. மு. பிள்ளை.**

மாதவியின் மாண்பு

ம. பொ. சிவஞானம்

மாதவி, ஒருத்திக்கு ஒருத்தன் என்ற கொள்கைக்கு விதிவிலக்கான கணிகையர் குலத்தில் பிறந்தாள்; தாய் சித்திராபதியின் விருப்பப்படி நடனக்கலை பயின்ருள்; அந்நாளைய முறைப்படி, மன்னன் முன்பு தான் கற்ற ஆடல் பாடலை அரங்கேற்றினுள். காவலன் தந்த பச்சை மாலையின் மூலம் கோவலனைப் பரிசாகப் பெற்ருள். ஆம்; அறிவு முதிர்ச்சி பெருத கன்னிப் பருவத்தில் — பன்னிரண்டாவது வயதில், கோவலன் மாதவியை அடைந்தான்; மாலையை விலை கூறு முன்பு கோவலனைக் கண்டதில்லை மாதவி. கோவலனும், அரசவையில் நடனமாடுவதற்கு முன்பு மாதவியைச் சந்தித்ததாகச் செய்தி இல்லை. சுருங்கச் சொன்னல், மாதவியும் கோவலனும் முன்னரே சந்தித்து ஒருவரை யொருவர் காதலித்தவர்கள் அல்லர் — திடீர்ச் சந்திப்புத்தான்!

தனக்கு முன்பே கோவலனை உரிமையாக்கிக் கொண்ட ஒருத்தி உண்டு என்பதை உணராத நிலையில், தனது மாளிகையில் புகுந்த கோவலனை வரவேற்ருள் மாதவி. ஆகவே, கோவலன் பிரிவால் கண்ணகி அடைந்த இன்னல்களுக்கு மாதவி காரணமல்லள்.

கோவலனும் கண்ணகியும் உருவத்தால் ஒத்தவர்கள். இருவருக்கும் திருமணம் நிகழ்ந்த போது, அவளுக்கு வயது பன்னிரண்டு; அவனுக்கு வயது பதினறு. செல்வச் செழிப்பிலும் குடிச்சிறப்பிலும் இணையானவர்கள்; அழகில் அவன் முருகனுக்கு நிகரானவன்; அவள் வள்ளி நாயகியை ஒத்தவள்.

மணம் முடிந்த பின்னர், மாசு மருவற்ற மனத்தினராய், ஒருவரை யொருவர் மனதார நேசித்து வாழ்ந்தார்கள். அக்காதலர்களின் பெற்ருேர் அவர்களை ஏழு அடுக்குகள் உடைய வானளாவிய மாளிகையில் தனிக்குடி வைத்து வாழ்வாங்கு வாழ வழி செய்தார்கள். வாணிபம் செய்து வளம் பல பெருக்க மூலதனம் போன்று பொருளுதவியும் புரிந்தார்கள்.

பள்ளியறையில், முதல் நாள் சந்திப்பில், கோவலன், கண்ணகியின் பேரழகையும் பிஞ்சுப்பருவத்தையும் கண்டு தீராக் காதலுற்ருன். அவளது திருமுகம் நோக்கி,

மாசறு பொன்னே
வலம்புரி முத்தே!
காசறு விரையே
கரும்பே தேனே!
அரும்பெறற் பாவாய்
ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன்
பெருமட மகளே!
மலையிடைப் பிறவா
மணியே என்கோ!
அலையிடைப் பிறவா
அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா
இசையே என்கோ!
தாழிருங் கூந்தல்
தையால் நின்னை!'

என்றெல்லாம் காதல் வெறியில் தனது கற்பனைத் திறன் முழுவதையும் காட்டி கண்ணகி தேவியை வருணித்தான் கோவலன்.

ஆம்; மாதவியைக் காணு முன்பு, அவளது ஆடல் பாடல் அழகினை அனுபவிக்கு முன்பு, கண்ணகிப் பெண்ணுள் கோவலனுக்கு மாசற்ற பொன்னுனாள்; கிடைத்தற்கரிய வலம்புரி முத்தானுள். நுகர்தற்குரிய வாசனைப் பொருளானுள். இனிக்கும் கரும்பானுள், தின்னத் தெவிட்டாத தேனுனுள்; ஆருயிர்ப் பிணி தீர்க்கும் அரு மருந்தானுள்.

மற்று, மாணிக்க மணியினும் மதிப்புடையவளாக, திருப்பாற் கடலிடைப் பிறந்த அமிழ்தினும்

இனியவளாக, யாழிடைப் பிறக்கும் இசையினும் அதிக இன்பம் தருபவளாக இருந்தாள். இதெல்லாம் மாதவியைக் காணும் முன்பு கண்ணகிபால் கோவலன் கொண்டிருந்த மனநிலை. கண்ணகியோடு வாழ நேர்ந்தது தனக்கு வாய்த்த பெருமையாக எண்ணினுன். தாரும் மாலையும் மயங்க அப் பொற்றெடியைப் புணர்ந்து மகிழ்ந்தான். ஆம்; கோவலனும் கண்ணகியும் காமனும் ரதியும் போல கை கலந்து காதலின்பம் துய்த்தனர். யாக்கையின் நிலையாமை அறிந்தாற்போல ஊடலும் கூடலும் புரிந்து, ஒன்றி வாழ்ந்து, உலக வாழ்வின் இன்பங்கள் அனைத்தையும் ஒருங்கே அனுபவித்தனர்.

எல்லாம் சில ஆண்டுகள் தான்! அதற்குள், மாதவி தோன்றி விட்டாள்!

மனைக் கிழத்தியாம் கண்ணகியை மறந்து தன்னை அடைந்த கோவலனோடு பல ஆண்டுகள் வாழ்க்கை நடத்துகிருள் மாதவி. இடையே ஒரு நாள், சித்ராபௌர்ணமியன்று, புகார் நகரத்து மக்கள் இந்திர விழா கொண்டாடுகின்றனர். அந்நகரிலுள்ள பல்வேறு மதங்களைச் சார்ந்த கடவுளர் கோயில்களிலெல்லாம் வாழ்த்தும் வழிபாடும் நிகழ்கின்றன. சிறப்பாக, இந்திரன் கோயிலில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

இளம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1|15. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Nakodar. (Pb.)

சிறையில் அடைபட்டுக் கிடந்த குற்றவாளிகளெல்லாம் இந்திர விழாவை யொட்டி, மன்னனால் மன்னிக்கப்பட்டு விடுதலையாகின்றனர். புகார் நகரில் எங்கு நோக்கினும் இசை முழக்கம்; கலைக் காட்சிகள்!

மக்கள், கூட்டம் கூட்டமாகக் கூடி, சோழ வளநாடு பசியும் பிணியும் பகையும் அற்றதாய், வசியும் வளமும் சுரந்து வாழ்க என வான் அதிர வாழ்த்தொலி செய்கின்றனர். போர் வீரர்கள், "எமது வேந்தன், போர் முனையில் வெற்றி மேல் வெற்றி பெறுவானாக!" என மன்னனுக்கு வாழ்த்து கூறுகின்றனர்.

இப்படி, புகார் நகரம் முழுவதும் விழா ஆரவாரத்தில் மூழ்கியிருக்கையில், கலையரசியான மாதவி மட்டும் விழாவுக்கு விலக்காக இருப்பளோ?

இந்திர விழாவை யொட்டி, நகர மக்கள் கண்டு களிக்க, நாடாளும் காவல் வேந்தன் போற்றிப் புகழ, மாதவி நல்லாள் நாட்டியம் ஆடுகின்றாள். அவளது ஆடலைக் காண வடக்கே யிருந்து வானவரும் புகார் நகருக்கு வருகின்றனர்.

மாதவி நாட்டியமாடிய போது, அவளது அருகிலிருந்த கோவலன், தனது காதலியின் ஆடலையும் பாடலையும் மற்ற ஆடவர்களும் கண்டுகளிப்பது பற்றி வெறுப்புற்று அவளோடு ஊடல் கொள்கிறான்.

கோவலனின் ஊடல் உள்ளம் அறிந்த மாதவி, தன்னை என்றுமில்லாதவாறு அலங்கரித்துக் கொண்டு யாழைக்கையிலெடுத்து வாசித்து, கோவலனின் உள்ளத்துக்கு மகிழ்ச்சி யூட்டி, ஊடலைப் போக்க முயல்கின்றாள்.

கோவலனோடு ஆடிப்பாடி மாதவி சிற்றின்ப வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கும் இதே தருணத்தில், கவலைக் கடலில் விழ்ந்து, துன்ப அலைகளோடு போராடிக் கொண்டிருந்தாள் கண்ணகி தேவி.

அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
மங்கல அணியில் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள் வாள்நுதல் திலகம் இழப்பத்
தவள வாள்நகை கோவலன் இழப்ப
மையறுங் கூந்தல் மெய்யணி மறப்ப

கையறு நெஞ்சத்தினளாகக் கண்ணகி தேவி காலங்கழிக்கின்றாள்.

கோவலன் கண்களுக்குக் களிப்பூட்ட, தன்னை அலங்கரித்துக் கொள்கின்றாள் மாதவி. கண்ணகியோ, தனது திருமேனி அழகைக் கண்டுகளிக்க வேண்டிய காதலன் மாதவியின் இல்லத்தில் சிறைப் பட்டிருப்பதால், அணிகலன்களைத் துறந்து, அலங்காரங்களை வெறுத்து, கோவலனின் வரவை எதிர்நோக்கி நாளைக் கடத்துகிறாள்.

(வளரும்)

தம்பிக்கு

'பதி'

இன்றைய நிலை!

அன்புள்ள தம்பி!

நான் உனக்கு எப்போது கடிதம் எழுதினுலும், அது ஏதாவது ஒரு துறையில் பயன்படும் என்ற ஆசையில் தான் எழுதுகிறேன். அது தமிழினத்தின் சிறப்பிற்காகத்தான் இருக்கும் என்பதையும் நீ அறிவாய். தமிழரின் காவியத் திறனையும் கலைத் திறனையும், அவன்கண்ட கலாச்சார ஆட்சியின் சிறப்பையும் பார்த்துப் பார்த்துப் பெருமை கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ''இமிழ் கடல் வேலித் தமிழகம்'' என்று இளங்கோவடிகள் அறுதியிட்டுக் கூறியிருக்கிருர். அக்காலத்தில் தமிழன் வாழ்ந்தது, வாழ்ந்து காட்டியது, வரவேற்புக் கூறியது எல்லாம் முன்னே தன் இனத்தை வாழ்த்தி, அதற்கப்பால் ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்!'' என்ற தாரக மந்திரத்தை உலகத்திற்குத் தந்துதான். இங்கு பிறந்த புலவர்கள் எல்லாம் நகைச் சுவைக்காகக் காவியங்களைப் படைக்க வில்லை. நாடு நலமடையப் பொருள் செறிந்த காவியங்களைப் படைத்துத் தந்தார்கள். அந்த ஒரு பெருமை பாரதத்திலுள்ள தமிழகத்திற்குத்தான் உண்டு. இன்று அத்தகைய ஐக்கியத் தமிழகத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து நம் சக்தியைக் குறைத்து விட்டார்கள். அத்துடன் நாம் மொழியால் ஒன்றுபட்டவர்கள் என்பதையே மறந்து, ஐயர், ஐயங்கார், முதலியார், ரெட்டியார், நாயக்கர், நாயுடு, பறையன், பள்ளி, தமிழ் பேசும் முஸ்லிம், கிறிஸ்தவன்.... ஐயோ இப்படிக் கணக்கில் அடங்காப் பல பிரிவுகள் கிளம்பியுள்ளன. இப்படித்தான் மலையாளத்திலும் கன்னடத்திலும் ஆந்திராவிலும் பல பிரிவுகளுண்டு. ஆனல் தம்பி, மொழியைப் பற்றியோ இனத்தைப் பற்றியோ பொதுப் பிரச்னை வந்தால் அவர்கள் ஒன்றுபடும் புதுமையைப் பார்க்கிறோம்.

இந்த மாபெரும் உப கண்டத்தைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலியை அறுக்க மொழி வழி மாகாணங்களை அமைப்போம் என்ற உயரிய தத்துவக் கொள்கையை வைத்து எல்லா இனத்தவரையும் ஒன்று சேர்த்து, விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கி அதிலே கணக்கற்றவர்கள் தியாகத் தீயிலே மறைந்து போனுர்கள். அதற்குப் பின்னே வெற்றி கிடைத்தது. துரதிர்ஷ்டவசமாக மகாத்மா நம்மிடையே வாழக் கொடுத்து வைக்கவில்லை. இப்போது இருப்பவர்கள் அந்த ஒற்றுமையின் வெற்றிச் சின்னத்தையே உடைக்க ஆரம்பித்திருக்கிருர்கள்.

அந்தமட்டும் அந்தப் புனிதனின் செயல்களைக் கண்டிக்காமலாவது இருக்கிருர்களே? அவர்கள் இதயத்திலே மகாத்மா இன்னும் இருக்கிருர் என்பது புலனுகிறது. அவரவர் மொழிகளிலேயே அந்தந்த மாகாண அரசு இயக்கப்பட வேண்டும் என்று மகாத்மா சொன்னதைத்தானே சொல்லுகிறோம் என்று நாம் திருப்பிச் சொன்னல், தேசத்தை துண்டுபோடத் துணிந்தவர்களாம் நாம் என்று துணிந்து சொல்லுகிருர்கள். அந்த பயம் இவர்களுக்கு உதிப்பதற்குக் காரணம் மத்திய ஆட்சி என்ற ஒன்று! அதற்கு குறிப்பிட்டசில அதிகாரங்கள் இருக்கவேண்டும், அதற்குரிய சில பொதுச்செயல்களைச் செய்ய வேண்டும். அவை எல்லா மாகாண மக்களுக்கும் இணைப்பாக இருக்கச் செய்யவேண்டும். இவைகளை மற்ற மற்ற முன்னேற்ற நாடுகளைப் பார்த்துச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம். ஆனல், இங்கு சர்வாதிகார ஆட்சியிலுங்கூட இத்தகைய ஆதிக்க அதிகாரங்கள் இருந்ததாகத் தெரியவில்லையே?

நமது தமிழகத்தின் அரசவையிலே அங்கம் வகிக்கும் அங்கத்தினர்களும், ஆட்சி நடத்தும் அமைச்சர்களும், பொது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்கள் யாவரும் ஒன்று கூடித் தமிழகத்தின் பொதுப் பிரச்னையான தேவிகுளம், பீர் மேடும், தமிழகத்தைச் சார்ந்த எல்லைகளும், தமிழகத்தைச் சேரவேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். ஆம்! சொந்தத் தாயகத்தின் நிலைகளைப் புரிந்தவர்கள் நாட்டை ஆளுபவர்கள். அவர்கள் சொல்லையும், தீர்மானத்தையும் மதிக்கவில்லை நமது மத்திய ஆட்சி. கட்சிப் பாகுபாடின்றி, தமிழினம் ஒன்றுபட்டுக் குரல் கொடுத்தும் கூட அதற்குப் பொதுத் தேர்தல் ஒன்றை ஏன் நடத்தவேண்டும்? அதற்கு மத்திய ஆட்சியே பல பட்டதாரிகளை இங்கு அமைத்து ஆட்சியை நடத்தலாம். ஆனால் ஜனநாயக ஆட்சி இல்லை என்று மக்களுக்கு உடனே தெரிந்துவிடும் அல்லவா? இதற்குத்தான் இதை ஜனநாயக ஆட்சி என்று சொல்லுவது பொருந்தாது என்று நம்மைப் போன்றவர்கள் கூறுகிறோம். இந்தியாவை விட்டுப் பிரிந்து போவோம் என்று சொல்லுவோரின் வாய் அடைக்கப்பட வேண்டுமே! அத்தகைய தீயசக்திகளை வளர விடாமல் பாதுகாக்கவேதான் பயனுள்ள படை வீரர்களாக இந்தியாவின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டு வருகிறோம். அதே நேரத்தில், செய்யும் தவறுகளைத் திருத்தவும் உரிமையோடு கூறுகிறோம்.

பல துறைகளுக்குத் தகுதியுள்ள ஆட்களெனப் புரிந்து தமிழ் நாட்டின் அரசாங்கம் மத்திய ஆட்சிக்குச் சிபாரிசு செய்தால், அதையும் நிராகரித்து விடுகிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் சிபாரிசு செய்வதை நாம் ஒப்புக் கொண்டால், நாளை அவர்கள் நம்மை மதிக்காமல் போய் விடுவார்களோ என்ற அச்சம்தான். அதே தவறைத்தான் நமது அரசாங்கமும் செய்கிறது. நகர சபையில் நல்ல தீர்மானங்களையும் அவர்கள் சிபாரிசு செய்யும் திறனுள்ள ஆட்களையும் நிராகரித்து விடுகிறார்கள். தம்பி! அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஞாபகப் படுத்துகிறேன். ஏழைகளின் வாகனமாகிய சைக்கிள்களுக்கு இடப்பட்டு வரும் அவ்வரியை ஒழிக்கச் சென்னை நகரசபையார் ஏகமனதாகத் தீர்மானித்தார்கள்.

ஆனால் அது, அரசாங்க அனுமதிப்புக்குப் போய் நிராகரிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு ஏன் பல இலட்சக் கணக்கான ரூபாய்களை அரசாங்கம் செலவு செய்து தேர்தலை நடத்தவேண்டும்? அந்தத் தேர்தலில் நிற்பவர்கள் பல ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து பொதுமக்களுக்குச் சேவை செய்ய பெருவாரியான மக்களால் ஓட்டுப் பெற்று அவையிலே அமர்ந்து ஆவன செய்ய முற்படுகிறார்கள். அது பயன் பெறுததைக் கண்டு அவர்கள் பரிதாபப் படுவதாகத் தெரியவில்லை. அல்லது தெரிந்து கொண்டு வருங்காலப் பதவி பறிபோகுமே என்ற பயத்தினால் சும்மா இருக்கிறார்கள் போலும்!

இவர்களென்ன? அரசவையிலே நாடே பறி போயிற்று. நாட்டின் எல்லைகள் பறிபோய் இருக்கின்றன. அவைகளைப் பற்றியே சிந்திக்காமல் காவியங்களைக் காட்டிக் கடந்தகாலத் தமிழகத்தின் பெருமையைச் சொல்லிப் பேசியவர்கள் எல்லாம் வாய் மூடி மௌனிகளாகி இனத்தையே காட்டிக் கொடுத்து விட்டாமே என்ற அச்சம் கொஞ்சம்கூட இல்லாமல் மக்கள் மன்றத்திலே உலாவுகிறார்கள். அப்படி நீதியை எடுத்துச் சொல்லியவர்கள் எல்லாம் இன்று பதவிப் பேராசை, போலிச் செல்வாக்கு பெற்றவர்களால் மக்கள் மன்றத்திலே இருந்து சிறிது சிறிதாக மறைக்கப்பட்டு வருகிறார்கள்.

உன் அன்புள்ள,

தமையன்.

உங்களுடன் ஒரு கணம்...

இவ்விதழ் அட்டைப்படத்தை உங்கள் கற்பனைக் கண்களுக்குக் காட்டி, அவை எழுதித் தரும் கதையை இரண்டே இரண்டு பக்கங்களில் அமைத்து எங்களுக்கு மே 15-ஆம் தேதிக்குள் அனுப்பிப் பரிசு ரூபாய் இருபத்தைந்தைப் பெற முயலுங்கள்!

'ஜாதிரோஜா'வின் தொடக்க அத்தியாயங்களில் பல திரும்பு முனைகள் தலைகாட்டுகின்றன.

போட்டிக்கு வந்த 1017 கதைகளில் எதுவுமே முதற் பரிசுக்குத் தகுதி பெறவில்லையாதலால், இரண்டாம் பரிசுக்குரிய தொகையுடன் மூன்றாம் பரிசையும், புதிதாக நான்காம் பரிசு ஒன்றையும் இணைத்து, அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகை ஐநூறு ரூபாயை கீழ்க்காணும் வகையில் பிரித்து வழங்கியிருக்கின்றோம்.

பரிசு பெற்ற இந்த ஐவரையும் மனம் நிறைய வாழ்த்துகிறோம்; போட்டியில் கலந்து கொண்ட அத்தனை மாணவர்-மாணவிகளுக்கும் எங்கள் பாராட்டுக்கள் உரியவை. போட்டிக் கதைகளைப் பொறுமையுடன் படித்துத் தேர்ந்தெடுத்து முடிவு வழங்கிய பஞ்சாயத்தினருக்கு எங்களுடைய அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இரண்டாம் பரிசு:

'மனிதனாகி விட்டேன்!' ரூ. 150

கு. ச. ராஜாராமன்.
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

மூன்றாம் பரிசு:

1. **கூடைக்குள்ளே** ரூ. 100
எஸ். என். பழனிச்சாமி.
இலயோலாக் கல்லூரி, சென்னை-31.

2. **நீதியின் ஆணை** ரூ. 100
தி. குமாரி.
சாரா தக்கர் கல்லூரி,
பாளையங்கோட்டை.

நான்காம் பரிசு:

1. **மகிழம்பூ** ரூ. 75
ச. கலியாண ராமன்.
அரசினர் கல்லூரி, கும்பகோணம்.

2. **அவன் மனிதன்** ரூ. 75
க. இராசாராம்.
அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

பரிசுக்குரியன தவிர, மிகுதிப் பட்டதில் அடியிலுள்ள சில கதைகளை மட்டும் 'உமா'வில் வெளியிடத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். கதைகளின் தரம் சிபாரிசு செய்யும் அளவிலே அவற்றுக்குச் சம்மானம் வழங்கப் பெறும்.

1. **அந்திவானம்**
இரா. மாத்தாம்பாள்
ஸ்காட் கிருஸ்தவக் கல்லூரி,
நாகர்கோயில்.

2. **இரகசியம்**
தி. வ. மெய்கண்டான்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

3. **கார்த்திகை விளக்கு**
மு. வை. அபரஞ்சி
எஸ். வி. ஒ. கல்லூரி, திருப்பதி.

4. **உள்ளமும், உருவமும்**
டி. எஸ். வெங்கடரமணி
தேசியக் கல்லூரி, திருச்சி.

5. **பாலும், பாவமும்**
டி. எஸ். ராஜாமணி.
அர்ச் சூசையப்பர் கல்லூரி, திருச்சி.

6. **கலைக்கண்கள்.**
எஸ். டி. பெலிசியா பத்மினி.
டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை.

7. **காதலா, உறவா?**
க. இராமமூர்த்தி
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

— ஆசிரியர்.

பேட்டிக் கட்டுரை : **பூவை எஸ். ஆறுமுகம்**

எஸ். ஏ. பி. அண்ணமலை

1. பழமும் சுவையும்

'பழத்தைச் சுவைப்பதுபோல, ஒயினை ருசிப்பதுபோல ஒருவன் புத்தகத்தைச் சுருக்காக – சுருக்கமாகப் படிக்க வேண்டும்'—ஹால்ப்ரூக் ஜாக்ஸன் என்ற சிந்தனையாளரின் கருத்து இது. முதலாவதற்கும் நமக்கும் தான் கட்டுபடி ஆகும். காதலிப்பதைப்போலவும் நட்புரிமையைப் பேணுவதைப் போலவும் புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்றும் அதே ஆசிரியர் அபிப்பிராயம் தெரிவிக்கிருர்.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்தது படிப்பதென்பது. அது ஒரு கலை. அது வளர்க்கும் கண்ணேட்டம் தனி. கிடைக்கும் அமைதியும் ஆனந்தமும் அலாதிப் பட்டது. இப்படிப்பட்ட தொண்டில் ஈடுபாடு காட்ட பத்திரிகைகள் மட்டும் போதாது; பத்திரிகாசிரியர்களும் வேண்டும்.

திரு எஸ். ஏ. பி. அவர்கள் 'குமுதம்' பத்திரிகையின் ஆசிரியர் – சிறந்த பத்திரிகாசிரியர்.

திரு எஸ். ஏ. பி. குறைந்த அளவில்தான் சிறுகதைகள் புனைந்துள்ளார். அவற்றுள் 'பாட்டியின் புன்னகை' என்பது ஒன்று. கல்லூரி நாட்களில் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் வாசித்தது. இன்னமும் என்னுள் புனையா ஓவியமாகவே காட்சியளிக்கிறது. அது போதும்.

நாவலாசிரியர் எஸ். ஏ. பி.

அண்ணமலை அவர்கள் எழுதிய தொடர் கதைகள் மூன்று. அவை: 'பிரம்மசாரி'; 'காதலெனும் தீவினிலே'; 'நீ', பத்திரிகையின் ஆசிரியராக அமைந்து, பத்திரிகைச் சந்தையின் நாடி பிடித்துப் பார்த்து அதற்கேற்பத் தன் பேனவைத் திருப்பி எழுதி முடித்த கதைகள் இவை. ஒன்றும் சோடை போகவில்லை. மூன்றில் 'நீ' என்பது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பெண் உள்ளம், காதல் புதிர், சந்தர்ப்பங்களின் விபரீத விளையாட்டு–இவை அழகாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன, 'நீ'யில். ''நீ வாழ்கிருய்; நாங்கள் இறந்து விட்டோம்,'' என்று ராஜேந்திரன் கூறுகிற வரிகள் இந் நாவலுக்கே சிகரமாக ஒலிக்கின்றன; வாசிப்பவர்களின் சிந்தனையைத் தூண்டுகின்றன. கதையம்சத்தில் அதிகக் கவனம் செலுத்துபவர் ஆசிரியர். மூன்றிலுமே இது நிறைய இருக்கிறது. 'பிரம்மசாரி'யில் சாம்பசிவம், வேணு இருவரும் மறக்க முடியாத நபர்கள்.

'மனித இயல்பு' என்ற ரேடியோப் பேச்சுத் தொடரில் எஸ். ஏ. பி. அவர்களின் பேச்சு நினைவுக்கு வருகிறது. ''ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையிலும் ஒவ்வொரு நாவல் அடங்கி யிருக்கிறது. இது சத்திய வாக்கியம். தனக்குள்ளேயும் தன்னைச் சுற்றியும் அடங்கி யிருக்கும் விஷயங்களை எழுத்தாளன் நாவலாக எழுதுகிருன். அப்படியானல், மனித வாழ்க்கையில் நடப்பதெல்லாம் நாவலாகி விடுமா? ஆகாது. சாற்றைப் பிழிந்துகொண்டு சக்கையைத் தூர வீசி எறிய நாவலாசிரியனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்,'' என்று தானே கேள்வியை கேட்டுவிட்டுப் பதிலையும் கூறுகிருர்.

உமா பேட்டி வரிசையில் இடம் பெற்ற இலக்கிய நண்பர்கள்: **தி. ஜ. ர, கல்கி, ரா. பி. சேதுப் பிள்ளை, பெ. தூரன், மாயாவி, ம. பொ. சி, அகிலன், தேவன், சோமு.**

அந்தாதிக் கவிதை வரிசை: 1

பள்ளி எழுச்சி

மாலால் மயங்கினுன் மாதேவன் பித்தாகி,
ஆலாலம் உண்டுன்பால் ஆடிவர—
காலமெனும்
வெள்ளம் கடந்தவளே, வீரத் தமிழ்மகளே,
துள்ளி எழுவாய் துயில்.

கோழியும் கூவிற்று கோகிலமும்
நின்பெயரை
வாழி யெனச்சொல்லி வாழ்த்திற்று—
தாழாதே
பூபாளம் பாடிப் புவியோர்கள் ஏத்துகிருர்
காபாலி காதலியே காண்.

முக்கண் உமைபோல முத்தமிழாங்
கண்கள்
மிக்க அழகுடையாய் மென்மகளே—
இக்கணமே
பள்ளி எழுந்து பலர்க்கும் முகங்காட்ட
மெள்ளவா மேடை மிசை.

இன்னம் உறங்குதியோ எந்தாயே,
கோமகளே?
அன்னம் சிறகார்த்து ஆசையுடன்—
கன்னிநினை
மேலேற்றி ஊர்ந்துவர மேதினியில்
பற்பலவாம்
நூலேற்றுத் திகழ்வாய் நுதல்

வாழி தமிழ்மகளே! வண்ணமுறு
மேனியுடன்
ஊழி முதலாக உள்ளவளே—ஏழிசையும்
நாடகமும் நல்லியலும் நாற்றிசையும்
தாம்பரவ
சூடினேம் உந்தாள் தலை!

ச. ய. சுப்ரமண்யன்

'தமிழ் நாட்டின் பெயரைத் திருத்துவதற்கு, நாம் மந்திரிகளின் தயவை எதிர்பார்ப்பானேன்?.... அரசாங்கத்தார் நமது பகுதியைச் சென்னை ராஜ்யம் என்று அழைத்தாலும் சரி, வேறு எந்தப் பெயர் கொண்டு அழைத்தாலும் சரி, நாம் கூடிய மட்டிலும் 'தமிழ் நாடு' என்ற பெயரையேஉபயோகிக்கமுயல வேண்டும். இறந்து போன சரித்திரத்திலிருந்து அரசாங்கம் ஆதாரம் கேட்டால், அதைக் காட்டிலும் பன்மடங்கு வலுவுள்ள நிகழும் சரித்திரத்திலிருந்து நாம் அத்தாட்சி காட்டுவோம்...!'

சென்னை ராஜ்யத்துக்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடப்படவேண்டிய அவசியத்தைப்பற்றித் துணிந்து எழுதியதுடன் நிற்கவில்லை – சென்ற இதழில் சென்னை – 'தமிழ் நாடு' என்று தானே வெளியிட்டுக்காட்டி, இவ்வகையில் பத்திரிகாசிரியர்களின் முன்னேடியாகவும் ஆகிவிட்டிருக்கிருர் ஆசிரியர்.

'தமிழ் நாடு' பெயர் சூட்டு விழாவில் 'உமா'வும் பங்கு பெறுகிறதென்பதையும் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

'இவரே என் தலைவர்'– 'திராவிடஸ்தான் வேண்டுமா? வேண்டாமா?' என்பன போன்ற போட்டிகளினுல் தமிழ் வளர்வது மட்டுமல்ல; புதியதொருஎழுத்தாளர் பரம்பரையே தோற்றுவிக்கப் படுகிறதென்றும் சொல்லவேண்டும். பரலி நெல்லையப்பர் அவர்களுக்கு நிதி திரட்டிக் கொடுத்த பெருமைக்கு இலக்கானவர். கல்கி

ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் நெஞ்சு நிறைந்த பாராட்டுக்களைப் பெற்றவர். சிந்தித்து அளந்து பேசும் நல்லதொரு பேச்சாளர்; நகைச்சுவைத் துளிகளுக்கும் பஞ்சமிருப்பதில்லை. பெரியதொரு நூல்நிலயம் வைத்திருக்கிறார்.

ஆம்; 'குமுத'த்தின் வெற்றி திரு எஸ். ஏ. பி. அவர்களின் வெற்றி!

'உமா'வின் வளர்ச்சியில் நல்லெண்ணம் கொண்டிருப்பவர்களில் திரு அண்ணாமலை அவர்களும் ஒருவர். 'உமா'வின் சார்பில் என் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். ★

2. இனி, பேட்டி:

''உங்களுடைய வாழ்க்கை லட்சியம் என்ன?''

''சாதாரண மனிதன் தனது இயல்பான திறமையில் பத்தில் ஒரு பங்கைக் கூடப் பயன் படுத்துவதில்லை என்று மனோதத்துவ அறிஞர்கள் அடித்துச் சொல்கிறார்கள்! ''நாம் இருக்கவேண்டிய நிலையோடு ஒப்பிட்டால், அரை விழிப்போடுதான் இருக்கிறோம். நம்முடைய உடல் வலுவிலும் மனோசக்தியிலும் ஒரு சின்னஞ் சிறு பகுதியையே உபயோகப் படுத்துகிறோம். பற்பல வகையான சக்திகள் தனக்கு இருந்தும் அவற்றைச் செயல்ப் படுத்தாமலிருப்பது மனிதனுக்கு வழக்கமாகப் போய் விட்டது,'' என்பது பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸின் கூற்று. இதன் உண்மையை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

அந்தாதிக் கவிதை வரிசை: 2

சமர்ப்பணம்

துள்ளி எழுவாய் துயில், கற்பனையின்
தூரிகையால் இவ்வுலகத் திரைச்சீலை
அழகுபெற
புள்ளினமும் பூங்கொடியும் பூத்துவரும்
பொன்கதிரும்
புனைந்துவிடத் தருணமிது
போதம் எமக்கருள்வாய்.

காபாலி காதலியே காண்வைய வீதியிலே
கணக்கற்ற மாட்சிமைகள்
காலரதம் ஓடிவரும்
கோபா வேசத்தில் பொடிபட்டுப்
போனதெனில்
கோமகளே நின்சீர்த்தி குறைவுபட்ட
தென்றுமிலை.

மெள்ளவா மேடைமிசை மேலைமலைத்
தென்றல் போல்
மேகலையின் மின்வீச்சு மேதினியில்
படரட்டும்;
உள்ளத் துணர்ச்சியெழ ஒண்சிலம்பு
ஒலிசெய்யும்;
உலகம் ஒளியடைய ஒருசிறிய
குறள்போதும்.

நூலேற்றுத் திகழ்வாய் நுதலென்னும்
வாளுயர்த்தி
நூறுபல ஆயிரமாம் புல்லுருவி
தமைச் செகுத்து
ஆலின் நெடுமரமெம் ஆவியனைய தமிழ்
அழியாமல் காத்திடவா அன்னை 'உமா'
தேவியளே!

சூடினோம் உந்தாள் தலையிதற்கு
வானத்துச்
சூரியனைப் பழிக்கின்ற சுடர்பொழியும்
மணிமுடியும்
ஈடில்லை நின்னுடைய ஏவல் செய
உடல்பெற்றோம்
இதயத்துக் கொற்றத்தை ஏற்றிடுவாய்
எமதன்னாய்!

டி. வி. சுவாமிநாதன்

"மனிதனின் உள்ளம் அளவற்ற சக்தி வாய்ந்தது. மனிதன் உள்ளத்திலிருக்கும் எல்லையற்ற மகத்தான சக்திக்கு எதிராக எதுவும் – இயற்கைகூட – நிற்க முடியாது! யாவும் பணிந்துதான் ஆகவேண்டும்," என்பது விவேகானந்தரின் முழக்கம். இதை மனப்பூர்வமாக நம்புகிறேன்.

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்," என்று உறுதி சொல்கிறது குறள். அதை மறைமொழியாகக் கொள்கிறேன்.

"மனிதன் என்ற முறையில் மண்ணையும் விண்ணையும் காட்டிலும் பெரிய சக்தி என்னுள் இருக்கிறது. அத்தனை சக்தியையும் – ஒரு துளிகூட வீணாக்காமல்–ஆக்க வேலையில் ஈடுபடுத்துவதே என்னுடைய லட்சியம், கொள்கை, தொழில்."

"தமிழன் யார்?"

"தமிழை அன்போடும், ஆவலோடும், பெருமையோடும் பயிலுபவன் தமிழன். தமிழில் பொதிந்துள்ள உயர்ந்த கருத்துக்களை அன்றாட வாழ்க்கையில் செயலாற்றுபவன் தமிழன். தமிழ் என்றால் இனிமை என்று பொருள் அல்லவா? ஆகவே, எண்ணத்திலும், பேச்சிலும், ஒழுக்கத்திலும் இனியவனாக இருக்கும் தமிழனே உண்மைத் தமிழன்."

"தமிழின் மேம்பாட்டுக்கு இந்திய அரசாங்கம் செய்யவேண்டிய பணிகள் குறித்து உங்கள் கருத்துக்கள் யாவை?"

"தமிழைத் தமிழனால் மட்டுமே வளர்க்க முடியும். இந்திய அரசாங்கத்தையோ, வேறு எந்த அரசாங்கத்தையோ நம்பி ஆகப்போவதென்ன? அர்த்தமில்லாத கட்சிச் சண்டைகளிலும், உப்புப் பெறாத சில்லறைப் பகைமைகளிலும், அனாவசிய துவேஷங்களிலும் இன்று வீணாகிக் கொண்டிருக்கும் தமிழனுடைய பலத்தில் ஒரு பகுதி –கால் பகுதியேனும்–தமிழின்மீது செலுத்தப் படுமானால், ஐந்தே ஆண்டில் அது மகோன்னத நிலையை அடைந்துவிடாதா?"

"தங்களுடைய முதல் கதை எது?"

"அதை மறந்து விடவேண்டுமென்று நானே முயன்று கொண்டிருக்கும்போது, பத்திரிகை நிருபராகிய உங்களிடமா வெளியிடப் போகிறேன்? என்னுடைய முதல் கதை 'ஒரு கற்றுக்குட்டியின் கிறுக்கல்' என்ற ரகசியத்தை வேண்டுமானால் சொல்கிறேன். அத்துடன் திருப்தி அடையுங்கள்."

"பொதுமக்கள் லட்சியக் கதைகளை அதிகம் வரவேற்கிறார்களா? அல்லது, பொழுதுபோக்குக் கதைகளையா?"

"'பொழுதுபோக்குக் கதை' என்று பிரித்துச்சொல்வதை நான் அவ்வளவாக விரும்புவதில்லை. பொழுதைப் போக்கக் கதை உதவா விட்டால், கதை என்று அழைக்கப்பட அதற்குத் தகுதியேது? என்னுடைய அபிப்பிராயத்தில், கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டாத சுவாரஸ்யமான கதை நல்ல கதை. சுவாரஸ்யம் என்பது, சம்பவங்கள், பாத்திரங்கள், நடையழகு, விறுவிறுப்பு இவற்றைப் பொறுத்தது. வெறும் சுவாரஸ்யத்தோடு நிற்காமல், சுவாரஸ்யமாகவும் இருந்து, அதே சமயத்தில் வாசகரின் உள்ளத்தில் ஒரு நல்ல எண்ணத்தையோ உணர்ச்சியையோ ஊட்டுமானால் அந்தக் கதையை உயர்ந்த கதை என்று மதிப்பிடுவேன்.

பொதுமக்கள் அப்பேர்ப்பட்ட உயர்ந்த சரக்கைத்தான் விரும்புகிறார்கள். எள்ளளவும் சந்தேகமில்லை."

"சினிமா விமரிசனம் அவசியமா?"

"நெருப்புக்கு நெய், கலைக்கு விமரிசனம்! பொதுமக்கள், கலை

ஞர்கள் ஆகிய இரு தரப்பாருக்கும் அது உபயோகமானது. என்றைக்கு உண்மையான விமரிசனத்துக்கு மதிப்புக் குறைகிறதோ, அன்றைக்குக் கலை அழியத் தொடங்கி விட்டது என்று அர்த்தம்.''

''கடுமையான விமரிசனம் கலைஞர்களின் உள்ளத்தைப் புண்படுத்தி அவர்கள் ஊக்கத்தைத் தளர்த்தாதோ?''

''அசல் கலைஞன் விமரிசனத்துக்கு அஞ்சமாட்டான். அதை ஆவலோடு எதிர்பார்ப்பான். தான் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கும் பட்சத்தில், அந்தக் கண்டனத்துக்குக் காரணமான குறையைப் போக்கிக் கொள்ளத் துடிப்பான். தன்னுடைய முன்னேற்றத்துக்கு வழிகாட்டியே விமரிசகர் என்பதை உணர்ந்து, மகிழ்ந்து, பலன் அடைவான்.''

''தலையங்கத்திலோ, விமரிசனத்திலோ பிறரைத் தாக்க நேர்ந்தால், உங்களுக்குக் குதூகலமாக இருக்குமா?''

''அனாவசியமாக நான் யாரையும் புகழ்வதும் இல்லை; தாக்குவதும் இல்லை. தாக்க நேர்ந்தால், அச்சில் பார்த்துவிட்டு வேதனைப் படுவேன். கனியிருப்பக் காய் கவர்ந்து விட்டோமே என்று புழுங்குவேன். பிறகு, தனி மனிதன் என்ற முறையில் நான் எப்படிப் பட்டவனாக இருந்த போதிலும், பத்திரிகாசிரியன் என்ற முறையில் கடமையைச் செய்யப் பின் வாங்கக் கூடாது என்று மனம் தேறுவேன்.''

''தலைசிறந்த சினிமா விமரிசகர் யார்?''

''திருவாளர் பொதுஜனம்.''

''வெள்ளித் திரையின் முன்னேற்றத்துக்குத் தாங்கள் கூறும் ஆலோசனைகள் என்னென்ன?''

'''லட்ச ரூபாய்க்கு ஒரு படம்' என்ற நிலைமை எவ்வளவு சீக்கிரம் வருகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வெள்ளித்திரைக்கு நன்மை. அப்பொழுதுதான் எழுத்தாளன், கலைஞன், பொதுமக்கள் இவர்களுக்கு இடையேயுள்ள உறவு பலப்பட்டு, சினிமாவை வியாபாரப் பொருளாக மட்டும் மதித்து அதை உருப்படாமல் அடிக்கும் 'பணம் பண்ணி'களின் ஆதிக்கம் தீரும். நஷ்டம் வந்தாலும் கையைக் கடிக்காது என்ற அளவில் சிக்கனமாகப் படம் தயாரிக்க வசதி ஏற்பட்டால், பற்பல புதுமைகளைப் புகுத்தித் தரத்தை உயர்த்தப் பார்க்கலாம். எழுத்தாளனும் கலைஞனும் பொருளைக் காட்டிலும் புகழையே அதிகம் விரும்புவார்கள். லட்சக் கணக்கில் புரட்டவேண்டும் என்ற ஆசை அவர்களுக்குக் கிடையாது. பொது மக்களுக்கு, ருசிகரமான கதையும் உயர்ந்த நடிப்பும் தேவையே தவிர ஆடம்பரங்களும் ஜோடனைகளும் விளம்பரங்களும் அல்ல. அவசியமான அம்சங்களை அலட்சியம் செய்து, அனாவசியமான விஷயங்களில் பணத்தைக் கொட்டி, பெருத்த நஷ்டம் வந்துவிடப் போகிறதே என்ற பயத்தினால் மனம் குழம்பி, கலையின் கழுத்தில் கத்தி வைக்கும் தயாரிப்பாளர்களின் கையிலிருந்து சினிமா விடுபடும் நாளை நாம் எதிர்பார்த்து நிற்கவேண்டும்.''

''வளர்ந்து வரும் எங்கள் உமா பற்றிய தங்கள் கருத்து யாது?''

'''உமா'வைப் போன்ற இன்னும் அனேக பத்திரிகைகளுக்குத் தமிழ் நாட்டில் இடம் இருக்கிறது. குறைந்த பட்சம் உயர்ந்த பத்திரிகைகளில் இருபதாவது அவசியம் வேண்டும்.

ஆரம்பமுதல் நான் 'உமா'வைக் கவனித்து வருகிறேன். அதன் அழகிய அமைப்பும், சுத்தமான அச்சும் என் மனத்தைக் கவர்ந்திருக்கின்றன. விரைவில், அது மாதமிருமுறையாக மலரும் என்று நம்புகிறேன்.'' ★

பிரஸிடெண்ட்
வெஜிடபிள் ஹேர் ஆயில்,
ஸ்னோ, டால்கம் பவுடர்.
முப்பெரும் அழகு சாதனங்கள்
RATHOD TRADING CO. MADRAS-1

ஜாதி ரோஜா

பகுதி — ஒன்று

முள்

1. பாலும் தேனும்!

'கெட்டி மேளம்!.... கெட்டி மேளம்!'

மணமகள் நாணித் தலை குனிந்தாள்; மூன்று முடிச்சுக்கள் இடப்பட்டன.

உறவும் நட்பும் மலர் இதழ்களை உரிமையுடன் வாரி இறைத்தன. அவனையும் அவளையும், 'அவனுடைய அவளாக'வும், 'அவளுடைய அவனாக'வும் பதிவு செய்ய நாலு நாட்கள் முன்னதாக வந்திருந்து திருமணத்துக்குச் சீர் சேர்த்துக்கொடுத்த பெரியவர்களுக்கு மகிழ்ச்சி நிலை கொள்ளவில்லை — வாழ்ந்து காட்டியவர்கள் ஆயிற்றே?

மணமகன் மணமகளைப் பார்த்தான்; நகைக் கீற்று ஒன்று பளிச்சிட்டது. ஆமாம்; அவன் இப்பொழுது

'முழு மனிதனுக' ஆகி விட்டான் அல்லவா?

மணமகள் குனிந்த தலையை உயர்த்தவேயில்லை. வெட்கமா? நல்ல வெட்கம்! பாவம், வெட்கம் பூராவும் அப்படியே வியர்வையாக வழிந்தோடி விடும் போலிருக்கிறதே...?

மணப் பந்தலில் சிலர் வாய்ப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள், ஒரு பக்கம். அன்றைய அரசியல் உலகம் அவர்கள் முன் பம்பரமாகச் சுற்றியது; சுழன்றது. அவர்கள் அந்த உலகத்தின் பாதத்தில் நின்று கொட்டாவி விட்டதுடன் சரி! அமரர்கள் சிலருக்குப் புதுவாழ்வு கொடுப்பதில் ஒரு கும்பல் ஈடுபாடு செலுத்தியிருந்தது; உயிரோடிருப்பவர்களுக்கு அமரத்வம் அளித்தது ஒரு கூட்டம் — அவர்கள் எழுத்தாளர்கள். ஒரு பகுதியில் சங்கிதத்துக்கு யோகம் பிறந்தது. நாகசுரம் மறந்துவிட்ட பாட்டை நினைவூட்டி, 'ராக சர்ச்சை' புரிந்து கொண்டிருந்தனர் மூவர்—அது நாதபரம்பரை. ஆமாம்; அது பெண்டிர் குழாம். நாகரிகம் வளர, தாங்கள் வாழ்வில் 'பற்று'க் கொண்டவர்கள் ஓரிருவர்; 'பெண்மை' நிலைக்க, பெண்களாகக் காட்சியளித்தனர் மிகுதிப் பேர்.

''அழகி அதிர்ஷ்டக்காரி!''

''அம்பிகைக்கு அவள் எடுத்துப் போட்ட பூ நல்ல பூ!''

''கண் நிறைந்த கணவர்!''

''கை நிறையப் பொன்!''

''அழகி — அழகுக்கேற்ற பெயர்!''

''பெயருக்கேற்ற அழகு!''

''முதல் பிரம்மாவுக்கு இந்த இரண்டாவது பிரம்மா மீது அக்கறை இல்லாமல் இருக்குமா, என்ன?''

''இலக்கணம் தவறுகிறது...''

''ஓ. கே!....புரிகிறது....!''

''அம்மணி பூங்குழலி, ஏதேது நீ கூட நம்ப அழகி மாதிரி கதை கிதை எழுதப் போறீயா, என்ன? உன் அப்பா கிட்டே சொல்லி இப்பவே ஒரு நூறு ரூபாய்க்கு வெறும் ஒரு அணு ஸ்டாம்பாக வாங்கி ஸ்டாக் பண்ணிப்பிடு. உங்கிட்டே பாதியும் பத்திரிகைக்காரங்க கிட்டே பாதியுமாகப் பிரிச்சு அனுப்ப வேணுமா?...அதுமட்டும் போதாது. வெள்ளைத் தாள்வேறே வேணும்.... ஒரு பேல் பேப்பருக்கும் ஆர்டர் கொடுத்திட சொல்லு. அப்படியே கட்டைப் பேனு நூறு, மைபாட்டில் நாலு டஜன், குண்டுசி ஆயிரம்.... அப்புறம்....''

''உன் தலை...!''

''ஓஹோ, அவசியந்தான் உனக்கு. ஏன் தெரியுமா? உனக்கு 'மேல்மாடி' காலி...இந்த ரகசியம் எனக்கு மட்டுந்தான் இதுவரை தெரிஞ்சிருந்துச்சு. இப்போ முகூர்த்த நேரம் பார்த்து அதையும் அம்பலப் படுத்தியாச்சு. கொஞ்சம் ஜாடை காட்டியிருந்தா, இதையுங்கூட ஒரு விழாவாக நடத்தியிருக்கலாமே?....''

''அல்லி, தயவு செய்து நீ வாயை மூடமாட்டே?....''

''உத்தரவு தாயே, உத்தரவு!... டி. எஸ். பி. பொண்ணு கிட்டே

> தனிப்பட்ட ஆன்ம இயல்பும், பொதுப்பட மக்கள் இயல்பும் சிறந்த கவிதைகளில் விளங்கி நிற்கும். இதனுல்தான் கவிஞன், தன் காலத்து இயற்கையைத் தன்னுள் அடக்கிக் காட்டும் கண்ணுடி போன்றவன் ஆகிருன்.
>
> —லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

இதுக்கு மேலேயும் உரிமை கொண்டாட முடியுமா ஒரு ஏழை வாத்தியார் மகளாலே?''

''பூங்குழலி, இது அரசியல் ஞானோதயமா? இல்லை, பொருளாதார ஞானோதயமா? இல்லை, இலக்கிய ஞானோதயமே தானா?''

''கோமதி, வாடி போகலாம் அழகியிடம் சொல்லி விட்டு...''

தேங்காய் பழம், வெற்றிலை பாக்குப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. உறைகள் நன்றி மொழிந்தன — திருமண வீட்டாரின் சார்பிலே.

தித்திக்கும் தேனும் பாலும் கைக்குக் கை மாறின.

சுவைத்த உதடுகள் நன்றி கூறின— தம்பதிகளுக்கு.

ரோஜாப்பூக் கும்பலுக்குப் பிரிவினை ஆசை வந்து விட்டது. 'நான் முந்தி, நீ முந்தி' என்று போட்டா போட்டி.

பங்களாவையும் கல்யாண மண்டபத்தையும் நோட்டம் விட்டான். கரிகாலன். தமிழ் மறை இல்லற இயல் போதித்தது.

ஒலி பெருக்கி பேசத் தொடங்கியது: 'திருமணத்திற்கு வந்திருந்து சிறப்பித்த அன்பர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள்—பரிசுகள் வழங்கிய அன்பர்களுக்கும் மணமகன் அழகேசன் சார்பிலும் மணமகள் அழகி சார்பிலும் நன்றியைத் தெரியப் படுத்திக் கொள்ளுகின்றோம்.'

நன்றியை 'வரவு' வைத்துக் கொண்ட திருப்தி ஜனக்கும்பலுக்கு. கலையத் தொடங்கியது. மயிலாப்பூரில் சந்தடி குறைய ஆரம்பித்தது.

வானத் தாம்பாளத்தில் சிதறியோடிய செந்தூரக் குழம்பு காய்ந்து கொண்டிருந்தது.

''மிஸ்டர் கரிகாலன், புறப்படலாமா?'' என்ற குரல் கேட்டவுடன், கரிகாலன் திரும்பிப் பார்த்தான்; எழுந்தான்; புறப்பட்டான்.

''கரிகாலன், உங்களுடைய 'ரசிகமனம்' இப்போதுதான் நிம்மதிப்பட்டிருக்கு மென்று நம்புகிறேன்,'' என்றான் சோழன்.

''ஆமாம்; இந்த ஐந்தாறு வருஷமாக என் இலக்கிய மனத்துக்குக் கதை விருந்தளித்து வந்த திருமதி அழகியை நேரில் காண முடிந்ததே ஒரு பெரிய அதிர்ஷ்டந்தான்;



அதைவிடப் பெரிய பாக்கியம், என்றே எழுதிய என் பாராட்டுக் கடிதத்தை ஞாபகம் வைத்துக கொண்டு எனக்கு அழைப்பு அனுப்பியது!''

"அதைவிடப் பெரிய விஷயம், கதாசிரியையின் கல்யாணத்தைக் கண்டு களித்தது ... அப்படித் தானே, கரிகாலன்?''



"ஆஹா!''

அந்த ஒரு நாள்—

கரிகாலன் எண்ணிப் பார்த்தான்: 'தமிழ்த் தொண்டு' பத்திரிகையில் அழகியின் கதையொன்று வெளியாகி யிருந்தது. 'புதுமைப் பெண்' என்று கதைக்குத் தலைப்பு. பெண் சுதந்தரம் வேண்டிப் புருஷனுடன் வாதாடி வெற்றி பெற்றதாகக் 'கதை நாயகி'யைச் சித்திரித்தாள் ஆசிரியை. கரிகாலன் பாராட்டுத் தெரிவித்து, அந்தப் பத்திரிகையின் மேற்பார்வை யிட்டுக் கடிதம் எழுதினான். பதில் வந்தது.

மயிலை, ஜனவரி, '54.

"அன்புடையீர், வணக்கம்.

தங்களது பாராட்டுக்கு ரொம்பவும் நன்றி. எனக்கெனத் தனித்த சில குறிக்கோள்கள் உள்ளன. அவை என் கதை உறுப்பினர்கள் வாயிலாக எதிரொலிக்கின்றன. பாரதியின் 'புதுமைப் பெண்' எனக்கு நிரம்பவும் பிடித்தவள்!

இப்படிக்கு,
அழகி.''



மயிலாப்பூரினின்றும் ஜார்ஜ்டவுன் பிரிந்தது !

அதே சமயத்தில்—

'திடுதிப்'பென்று மணப்பந்தலில் பரபரப்பு ஏற்பட்டது. அதற்கு ஈரம் இருந்தது. அது சொன்னது : "பாவம், இருந்திருந்தாற்போல, அழகிக்கு மயக்கம் வந்து விட்டது. சுயநினைவே இல்லையாம்... கல்யாண வீடு அமளிதுமளிப்படுது .... பாவம்....!"

2. நீலக்கடல் அலை

கண்ணாமூச்சி என்றால் ரொம்பவும் இஷ்டம். அதற்காகத்தான் அந்த வெண்பஞ்சுக் கும்பல்கள் அழகு நிலாவை அண்டி அண்டிச் சென்றன. நிலவுக்கு நாடாறு மாதம் என்றால் தான் கொஞ்சம் தென்பு வரும். இந்தக் குறைந்த வேளையில், மேகங்களின் இம்மாதிரி

> மனிதனுக்கு உணர்ச்சி அவசியந்தான்; ஆனல் சந்தர்ப்பம் தெரியாமல் அது வெளியானல், அவனையே கொன்றுவிடும்.
>
> — அகிலன்

நச்சரிப்பு என்ருல், 'பிறை மதிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். ஆகவேதான் அது விலகி விலகி ஓடியது.

கரிகாலன் அந்தக் கடுதாசியைச் சுருட்டிச் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான்; மூளை சூடேறி விட்டது; புத்தி குழம்பி விடும் போலிருந்தது. இந்தப் பொல்லாத சிந்தனைகளுக்கு மணியம் கொடுத்து விட்டால், நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டக் கேட்க வேண்டுமா? தன்நினைவு சிலிர்த்தெழுந்தது. அவன் என்ருல், அதற்குக் கடமைக்கும் அப்பாற்பட்ட அன்பு. எழுந்தான்; கடல் மணலைச் சுருட்டிக் கொண்டுபோக அவனுக்கு உரிமை கிடையாதல்லவா? ஆகவே, நின்றது நின்ற படியே, சட்டையை உதறினுன்; பையை உதறினுன்; கைக்குட்டையையும் சேர்த்து உதறினுன். உடம்பைச் சோம்பல் முறித்துக் கொண்டான். ஒளிக்கதிர்கள் சில அவனுடைய முகத்தில் கண்ணுமூச்சி விளையாடின; சற்றுமுன் மணல் பட்டபாடு தெரியும் போலிருக்கிறது—பைய நழுவி ஓடிவிட்டன.

கரிகாலன் மெல்ல நடந்தான்; சுற்று முற்றும் பார்த்தான். ஒரு ஈ, காக்கை இருக்கவேண்டுமே? ஊஹும்....! அவன் இப்போது தனிமனிதன்—ஆதிமனிதன் அல்ல!

முன்னம் ஒரு நாள் ஊழிக்கூத்து ஆடினராமே, ஆண்டவன்?— ஒரு கால், இந்த அலை கடலைத்தான் ஆடரங்காக ஆக்கிக் கொண்டாரோ? — சாந்தியைப் பிறப்பிக்கும் சாந்தி பூமிதான் அவனது கூத்துமேடை என்று தெரிந்தவர்கள் சொல்வதுண்டு. பின், ஏன் இப்படி இந்தக் கடல் சினந்து சீறி எழுகிறது? ஓஹோ...! பொங்கும் உள்ளங்களுக்கு அமைதி தந்த பிறகு ஏற்பட்ட வறட்சியோ?.... ஆனந்த வெறியோ?

காலத்தின் மணல் வெளியில் பதிந்த அடிச்சுவடுகள் ஈரம் காய்ந்து உலர்ந்து போய்க்கொண்டிருந்தன.

கடற்கரையின் பாதத்தில் அடையாளம் பரப்பிக்கிடந்த நிழல்—மனித நிழல் முன்னேறியது.

'சடக்'கென்று நின்ருன் அவன்—'ஸ்கிப்பிங்' விளையாடும் பாப்பாவின் பாதத்தில் கயிறு அகப்பட்டுக் கொண்டால், அப்படியே தடுமாறி மலைத்து நின்றுவிடுமே, அதுமாதிரி.

பாதங்கள் கண்களுக்குச் சேதி சொல்லின. பார்வையிலே ஒரு மின்னல். மூளை விழித்துக் கொண்டது. முந்திரிக் கொட்டைக்கும் இந்தக் கண்களுக்கும் ஏக ஒற்றுமை.

'ஆ, டம்பப்பை ஒண்ணு!...... புஸ்தகம் ரெண்டு...! உதிர்ந்த ரோஜாப் பூக்கள்....!' என்று கரிகாலன் தனக்கு மட்டும் கேட்கும் அளவுக்குக் குரலைச் சரிப்படுத்திய வாறு சொல்லிக் கொண்டான். அவனுக்கு மண்டையில் கனம் ஏறியது; கைகளில் பாரம் ஏறியது; வழி மிதித்து வழி நடந்தான்.

பட்டணத்தின் கண்களிலே தூக்கம் ஊஞ்சலாடியது; போதை அம்மானை கொட்டியது.

காலக் கடிகாரத்தில் மட்டும் 'மெயின் ஸ்பிரிங்', 'பாலன்ஸ் ஸ்டாப்' — இவற்றுக்கெல்லாம் பழுதே ஏற்படாதோ?....' அவன்' புத்திசாலியாய்த் தான் இருக்க வேண்டும்!

டங்க்–டங்க்–! இரண்டல்ல—மணி பத்து. தெருவிளக்கு சிரித்துக் கொண்டிருந்தது.

கரிகாலனின் நெஞ்சில் 'டக், டக்' என்று ஒரு சத்தம் புறப்பட்டது. பரிசோதனைக் குழாயில் சோதனைக்கு ஆளாக்கப்படும் திரவப் பொருள் சூடுபட்டுக் கொதிக்கும் அல்லவா, அம்மாதிரி ஒரு நிலை அவனுள் எழுந்தது. கைகள் மாத்திரமல்ல, உடம்பு பூராவுமே பயம் காட்டியது. அந்த டப்பபை, புத்தகங்கள், பேனா—பையைப் பிரித்தான். அழகுச் சாதனங்கள் இருந்தன. பெண் ஒருத்தியின் பெயர் காணப்பட்டது. திருமணப் பரிசாக இருக்க வேண்டும். முதலில் இருந்த புத்தகத்தைப் புரட்டினான். அவனுக்கு 'திக்' என்றது. முகப்புப் பக்கத்தில் முகமன் கூறி ஓடின வரிகளுக்குப் பேசத்தானா தெரியாது?

"மணமகன் திரு அழகேசன்—மணமகள் திருமதி அழகி:

வாழ்க்கை என்பது முள் ரோஜா என்கிறார்கள். இருந்துவிட்டுப்போகட்டுமே? முள் இல்லையென்றால், ரோஜா ஏது? 'முள் ரோஜா'வில்—'ரோஜா முள்'ளில் 'முள்' என்னும் அந்த ஒரு சொல்லை மட்டும் நீக்கும் சக்தி, வாழ்க்கையை அமைத்துக் காட்டுபவர்களின் கையில் அல்லவா இருக்கிறது? அப்புறம் ரோஜாதான் வாழ்க்கை; வாழ்க்கையே ரோஜாதான்!

இப்படிக்கு,

கரிகாலன்."

கல்யாணக் கொட்டகையில், 'பாவம், இருந்திருந்தாற்போல அழகிக்கு மயக்கம் வந்துவிட்டது; சுய நினைவே இல்லையாம்!' என்று எதிரொலித்த வார்த்தைகள் காதுகளில் 'டேரா' போட்டன; கண்களில் அழகி தோன்றினாள், மாலையும் கழுத்துமாக—முல்லை முறுவலும் முதற்பிறையுமாக. குழப்பமான எண்ணங்களைத்தான் மனத்திற்குப் பிரதிபலிக்கத் தெரியுமோ? இந்த மனம் பலே சந்தர்ப்பவாதி!

சினிமா, நாடக
மேக்கப் வர்ணங்கள், வாசனை
திரவியங்களுக்கு கீர்த்தி பெற்றது
2/21, Pilliar Koil St.,
(Near Waltax Rd.) MADRAS-3.

ஜார்ஜ் டவுன் அவனை 'வா, வா' என்று ஜாடை காட்டி, மோடி பண்ணிக் கூப்பிட்டது. நடந்தான். பாதரஸ விளக்கு மாதிரி ஒளிர்ந்தது நிலவு. வால்யூம் சரிப்படுத்தப் படுவதற்குள் ரேடியோ 'கர புர' வென்று ஓலமிடும் பாவனையில் கடல் முழக்கம் செய்தது.

மெரினா நீந்தும் குட்டைக்கு 'இரவு வணக்கம்' தெரிவித்தான். மாகாணக் கல்லூரிக் கட்டடத்துக்கும் சேர்த்துத்தான். வழி வளர்ந்தது. நடந்தான்; நடந்து கொண்டே இருந்தான்.

பிறந்த மண்ணில் பிஞ்சுக்கால் பதித்துக் குறுநடை பழகத் துடிக்கும் பிள்ளைக்கனி பின்னி விழுவதுண்டே?—அந்தப் பாணியில் அவன் கால்கள் தடுமாறின. விழப்போனான். பார்வை தரைக்குச்

சாடி ஓடியது. திரைப் படங்களில் தொற்றிக் கொண்ட பெருமையில் அந்த பாலம் கர்வம் ஏறிக் காணப்பட்டது.

மறுகணம், "ஆ!" என்று விரிட்டான் கரிகாலன்.

மந்திர சக்தி வாய்ந்த இந்த இரவு வேளையிலே, ஆயிரக்கணக்கான கனவுகள் உருப் பெற்றுக் கொண்டிருக்கும் இந்தப் பொழுதிலே, அழகே உருவான மோஹினிப் பெண் ஒருத்தியா?

அவனுக்குத் திக்கும் புரியவில்லை; திசையும் மட்டுப்பட மறுத்தது. கை நொடிப் பொழுது கடந்திருக்கும். "ஆ!...அழகி!" என்று கூப்பாடு போட்டான். நினைவு தடம் புரண்ட நிலையில் அவள் தரையில் சாய்ந்து கிடந்தாள். கல்யாணப் பெண்ணுக்கு மயக்கம் வந்து விட்டதாக எழும்பிய பேச்சும் சிந்தைக்குள் முடங்கிக் கொண்டது. சற்று முன், மெரினாவின் விளிம்பில் கிடந்தெடுக்கப்பட்ட அந்தப் பை, பேனா, புத்தகம் முதலியனவற்றையும் மனக் கண் எடுத்துக் காட்டிற்று. மனக் கண் இருக்கையில், இந்த 'டெலிவிஷன்' எதற்காம்?

அவளுடைய முகத்திரை தெப்பமாக நனைந்து கிடந்தது. பண்பைக் காக்கத் துடித்த மார்புச் சேலைக்கு அரண் கட்டிக் காத்துக் கிடந்தது அந்த மங்கல நாண். சேலைத்தலைப்பில் அங்கங்கே தண்ணீர் சொட்டியது.

அவளுடைய பூங்கரத்தில் தவழ்ந்து கிடந்தது ஒற்றை ரோஜாப் பூ. மெல்ல அதை எடுக்க எண்ணினான். அதன் மூலமாவது அவள் விழித்துக்கொள்ளலாம் என்ற நினைப்பு அவனுக்கு. ரோஜாப்பூ அவன் கைக்கு மாறியதுதான் கண்ட பலன். அவள் அவளாகவே இருந்தாள்—அழகியாக ஆகவில்லை. கையில் சுழன்ற பூ மூக்குக்குத் தாவியது.

அடுத்த வினாடி—

கரிகாலன் மயங்கிச் சுருண்டு விழுந்தான்.

மறுபடியும் அவன் கண் விழித்த சமயம், வழியோரத்தில் சைக்கிள் ரிக்ஷா ஒன்று நின்று கொண்டிருப்பதைக் கண்டான் அவன். கண்களைத் துடைத்துக்கொண்டு, வியர்வைத்துளிகளைத் தூர எறிந்தவாறே, "ஏம்பா, செம்புதாஸ் தெருவரைப் போகணும். புறப்படு......ஜல்தி!" என்று படபடப்புடன் சொன்னான்.

"அம்மாவுந்தானே, சாமி?" என்று 'பெரிய' சந்தேகத்தைக் கிளப்பித் தொலைத்தான் அவன்.

"ஆமா...ஆமா....துட்டுக்கு யோசிக்காதே! நான் பட்டணத்துக்காரன்தான் ... புறப்படு..." என்று துரிதப்படுத்தினான் கரிகாலன்.

செம்புதாஸ் தெரு—பராக்! பராக்!

இரை தின்ற பாம்பை ஞாபகமூட்டிய பாணியில் இருந்தது பர்ஸ். இப்போது ஓரளவு குறைந்தது.

"அக்கா, அக்கா!" என்று சத்தம் போட்டான் கரிகாலன். ரோந்து சுற்றி வந்த கூர்க்கா அவனையும் அந்தப் பெண்ணையும் ஒரு கணம் நின்று பார்த்து விட்டு நகர்ந்தான்.

வாசற் கதவுகள் வழிவிட்டன.

"அக்கா..." என்றான் கரிகாலன். மறுபடியும் அவனுக்கு உடம்பை என்னவோ செய்தது. எண்சாண் உடம்பு கூனிக் குறுகியது.

அக்காள்காரியின் அழகிய நெற்றிப் புருவங்களின் கருமையில் அதிசயக் குறிகளும் வினாக் குறிகளும் தோன்றின.

"இந்தப் பெண் கல்யாணத்துக்குத் தான் காலையிலே நான் போயிருந்தேன். பொழுது பட்டதும் தான் புறப்பட்டேன். அப்போது

இந்தப் பெண்ணுக்கு மயக்கம் வந்து விட்டதாகப் பேச்சு கிளம்பியது. என் மனசு வேதனைப்பட்டது. நான் கிளம்பி வந்துகொண்டிருந்தேன். வழியிலே இந்தச் சாமானெல்லாம் கிடந்துச்சு....அப்புறம் பாலத்துக் கோடியிலே இவங்க மயக்கமாய்க்கிடந்தாங்க....என்ன விஷயம்னு தெரியல்லே...ரிக்ஷாவிலே கொண்டாந்தேன்....'' என்றான் கரிகாலன்.

அவள் சிரிப்பு எந்தக் குறிப்பையாவது சொல்லும் உரைகல்லாக அமையவில்லை. அந்தப் பெண்ணைத் தன் தோளில் சார்த்தி, இடது கையைத் தன் இடது கையோடு சேர்த்து அணைத்தபடி வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள் அவள்.

அழகியின் முகத்தில் நிலாக்கதிர்கள் விளையாடின. நெற்றிப் பரப்பிலிருந்து நழுவிய மயிரிழைகள் மூன்று அவளுடைய செந்தூரக் கன்னங்களில் தஞ்சமடைந்திருந்தன.

சுசீலா—கரிகாலனின் தமக்கை தொடுத்த கண் எடுக்காமல் அழகியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அக்கா, இந்தப் பெண்ணுக்கு மயக்கம் தீர ஏதாவது செய்யேன்...'' என்றான். சொல்லும் போதே அவனுடைய கண்கள் கலங்கி வந்தன.

பச்சைத் தண்ணீர் வந்தது; காப்பி வந்தது. வேறு சில உபகரணங்கள். அழகி கண் மலர்ந்தாள். திகைப்பு; பெருமூச்சு; சோகப் புன்னகை. அவனுடைய இமைவரம்பில் கண்ணீர்த் துளிகள் காத்திருந்தன. ''நான்.... நான்...'' என்று தடுமாறினாள். பிறகு, கரிகாலனையும் சுசீலாவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அப்பொழுது அவனது கண்கள் அவளை நாடி ஓடின.

''அக்கா....'' என்று பலத்த குரலில் அழைத்தான். ஏதோ சைகை செய்தான். அவளும் திகைத்தாள்.

''ஐயோ, பாவம்!.... கழுத்திலே ஏது இத்தனை ஊமைக் காயங்கள்? எல்லாம் ஒரே புதிராக இருக்கிறதே? மின்னாமல் இடி விழுவது கிடையாதே....?'' என்றாள் அவள்.

''புதிரல்ல....எல்லாம் சதி!...'' என்று மட்டுமே அழகியால் பேச முடிந்தது. உதடுகள் துடித்தன. கூரைப்புடவை—கல்யாணச்சேலை படபடத்தது. வலது கை விரலில் அப்பியிருந்த மஞ்சள் தூளைத் துடைத்தாள்.

இதழ்கள் உதிர்ந்து கிடந்த அந்த ஒற்றை ரோஜாப்பூவை அழகி எடுத்தாள். கையிலிருந்த பூவைக் கசக்கி வீசி எறிந்தாள். கட்டிலில் இருந்தவாறு, உடைகளைச் சீர்ப்படுத்திக் கொண்டாள். ''அம்மா, ஐயா! உங்கள் இருவரையும் நான் மறக்க மாட்டேன். அதற்காக, உங்களை நான் கண்கண்ட தெய்வங்களாக ஆக்கிவிட மாட்டேன், பயப்படாதீர்கள். உங்களிடமுள்ள ஈரத்தை, மனிதத் தன்மையை என்றென்றும் என்னால் மறக்க முடியாது. ரொம்பவும் நன்றி'' என்றாள் அழகி. அப்பொழுது கடிதமொன்று தரையில் விழுந்தது. அழகி அதை எடுக்கப் போனாள்.

அந்தத் தருணத்திலே—

கதவை யாரோ பலங்கொண்ட மட்டும் இடித்தார்கள். கரிகாலன் மூன்று கூடங்களையும் கடந்து வந்து திறந்தான். அங்கே, சிகரெட்டுடன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். 'வில்லன் வேஷத்தைக் கலைக்கக்கூட நேரமில்லாமல் எந்த ஸ்டுடியோவிலிருந்து வந்திருக்கிறாய்?' என்று கேட்க ஓடியது. வாசலில் நின்ற பிளஷரும், சூழ நின்ற கை ஆட்களின் உருவங்களும் அவனுக்குத் தடை உத்தரவாயின.

''என் மனைவி அழகி எங்கே?.... நீ சைக்கிள் ரிக்ஷாவிலே அவளைக் கடத்திப்போவதைப்பார்த்துநான் காரை வேகமாக ஓட்டி வந்தேன். என் போதாத காலம் கார் ஒரு மரத்தில் மோதித் தொலைத்தது.

அதுதான் நீ தப்பித்தாய். என் ஆட்கள் உன்னைத் தொடர்ந்ததை பாவம், நீ எப்படி அறியப் போகிறாய்? ம்....சீக்கிரம்!....அழகியை என்னிடம் ஒப்படைத்து விடு....'' என்று வெறி பிடித்தாற் போலக் கூறினான் அவன்.

'ஆம்; இவன்தான் அழகேசன். அழகியின் உயிருள் உயிராகக் கூடு விட்டுக் கூடு பாய்ந்தவன். பாவம், இந்த அழகி எப்படி நினைவிழந்தாள்? ஏன் நினைவிழக்குமாறு செய்யப்பட்டாள்? இவன் இவளைத் துரத்தி வந்ததன் காரணம் என்ன? இவள் இவனை விட்டு ஏன் பிரிய வேண்டும்?' என்று அவனைக் குறுக்கு விசாரணை பண்ணியது, அவனுடைய உள் மனம்.

மாடு நினைத்த இடத்தில் தொழுவம் கட்டுவார்களா?

''ம்..ஜல்தி பண்ணுங்க, ஸார்..'' என்று 'நல்லதனமாக'ச் சொன்னான் அழகேசன்.

'உரிய பொருளை உரிய இடத்தில் சேர்க்க வேண்டியதுதான்.... ம்...அத்தான் வேறு ஊரில் இல்லை... ஊர் வம்பு நமக்கு எதற்கு?... ஆனால், அழகி 'சதி கிதி' என்றாளே? ஒருவேளை....'— மேற்கொண்டு அவன் எண்ணிப் பார்க்க அவகாசம் கிடையாது.

அழகேசன் உள்ளே பாய்ந்தான். சுசீலா வெளியே வந்தாள்.

கரிகாலன் அவனைக் கடந்து போய் அவனுக்கு முன்பு நின்றான்.

''அதோ, அந்த அறையில்தான் படுத்திருக்கிறார்கள் உங்கள் மனைவி...

....பாதையிலே உங்கள் சொத்து தன்நினைவு இழந்து கிடந்தது. நான் என் கடமையைச் செய்தேன். நீங்களே கூப்பிடுங்கள்.... கதவைத் திறவுங்கள்...!'' என்றான் கரிகாலன், நாலும் தெரிந்த அமைப்புடன்.

அழகேசன் கதவுகளைத் திறந்தான். ''அழகி....அழகி!'' என்று ஆதங்கம் பொங்கக் கூவினான். சூன்யம் அவனைப் பைத்தியம் என்று முடிவுகட்டியதுடன் நின்றிருந்தால் தேவலாம்; கைகொட்டி வேறு சிரித்தது. கடிதம் ஒன்று கண்ணில் பட்டது.

''அழகேசன், துரோகி நீர்... என்னைக் கூண்டுக் கிளியாக்கப் பார்க்கும் உம் கனவு பலிக்காது.

இப்படிக்கு,
அழகி.''

கடவுளை அழைத்துக் கொண்டிருந்தார்கள்—சுசீலாவும் கரிகாலனும். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றார்கள்—தம்பியும், தமக்கையும்.

''அழகி...அழகி...''—அழகேசன் பேயாக மாறினான்; மறுகணம் அவன் ''ஐயோ!'' என்று கூக்குரல் எழுப்பினான்!

(ஆஹா, இன்னும் உண்டு.)

உத்திரவாதமுள்ள

★ பொன், வெள்ளி, நகைகள்,
★ ஸ்விஸ், ஜெர்மன் கைக் கடிகாரங்கள்,
★ டைம்பீஸ் கடிகாரங்கள்—இவைகளுக்கு

தி ஜெயின் ஜுவல்லரி கம்பெனி

நெ. 1, நாகேஸ்வர ராவ் ரோட்,

தியாகராய நகர்—மதராஸ்–17.

வேழமும் வேல்விழியும்

'சௌமி'

'கொடிமதிற் பாய்ந்துற்றகோடும் அரசர்முடியிடறித் தேய்ந்த நகமு'மாகப் பட்டத்து யானை பவனி வருகிறது. 'மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத' மங்கள ஒலியுடன பரிவாரம்வீதியிலே வருகிறது. உள்ளிருந்து, 'பொன்னையே நிகர்த்த மேனி; மின்னையேநிகர்த்த சாயலு'டன் அணங்கொருத்தி வெளிவருகிறாள். 'குன்றெழுந்து சென்ற'தென அசைந்து அசைந்து வரும் யானையை ஏறிட்டு நோக்குகிறாள், அவ்வேல் விழியாள். அம்பாரிமேல் 'மணியெழு வளைய தோளான்' அமர்ந்திருக்கிறான். அவளுடைய கதுப்புக் கன்னங்கள் குங்குமச் சிவப்பாகின்றன. 'தூற்றினை யொத்த இதழ்'களில் புன்முறுவல் நெளிகிறது. 'நிலவூறித் ததும்பும் விழிகளி'ல் மகிழ்ச்சி மலர்கிறது. ஏன் தெரியுமா? அவன் அவளது காதலன்—அந்தநாட்டு இளவரசன் அவன்!

இப்போது அவன் போர் முடித்து 'சேனை புடை சூழத் தேரேறிப் பொன்னகரமெய்தி' மதம்பொழி வேழத்தின் மீது அம்பாரியிலமர்ந்து அணி நகர்ப் பவனி வருகிறான். 'தொண்டைக்கனிவாய் துடிக்கிறது; சுடர்நுதல் மேல் வெண்தரளமென்ன வியர்வை அரும்புகிறது; கெண்டைக் கண்கள் கடை சிவப்ப நிற்கிறாள். 'சிறுக்கின்ற வாண் முகமுஞ் செங்காந்தட்கையால் முறுக்கு நெடுமூரிக் குழலும்' அவனது திண்ணிய மார்பில் புதைந்து இன்பம் அளித்தன....!

"யானையை இன்னும் விரைவாகச் செலுத்து," என்கிறான் இளவரசன். பாகனுக்கா புரியாது?

அதோ, பூங்கரத்திலே ஒளிவிடும் மோதிரத்திலே அவள் தன் காதலனின் இன்முகம் கண்டனளோ...? ஆஹா, அவள் கண்களிலே தான் எத்துணை குழைவு, கனவு! ஆமாம்; வேல்விழிகள் கண்ட கனவு பலித்து விட்டது! ★

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

....சிலம்புச் செல்வரின் கட்டுரை மிகச் சிறப்பு; எடுத்த எடுப்பிலேயே இதயத்தைக் கவர்கிறது. ....பேட்டிக் கட்டுரையில் கையாளப் பட்டிருக்கும் 'பதச் சோறு' என்ற பழமொழித் துண்டு மிக அருமை.

ஆர். கே. சுப்பிரமணியன், மதுரை

திரு ம. பொ. சி. அவர்களின் கட்டுரையைப் பாராட்டி நிறையக் கடிதங்கள் வந்திருக்கின்றன. பேட்டிக் கட்டுரையை ஊன்றிப் படித்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

'...பாராட்டு விழா' என்ற என் கதையில் நல்ல தமிழ் எழுத்தாளர் ஒருவரை அநியாயமாகச் சாகவிடுவதற்கு உங்களுடைய நல்ல உள்ளம் இடங்கொடுக்கவில்லை போலும்! சிவப்பிரகாசத்தைப் பிழைக்கச் செய்து விட்டீர்கள். சிவப்பிரகாசத்தின் சார்பில் உங்களுக்கு என் நன்றி. நான் மனத்தால் நினைத்துப் பேனாவால் எழுதியதை நீங்களும் மனத்தால் நினைத்துப் பேனாவால் மாற்றி அச்சுருவம் கொடுத்து விட்டீர்கள். அச்சளவிலாவது சிவப்பிரகாசத்துக்குப் பாராட்டு விழா நடந்து விட்டது. அந்த மாத்திரம் மகிழ்ச்சி. நிஜமாகத் தமிழ் நாட்டில் இனி அப்படி ஒரு காலம் வரும் போது, நீங்களும் நானும் நம்முடைய மனங்களில் மகிழ்ச்சியை உண்டாக்கிக் கொள்ள முயல்வோம். இந்தக் கதையைப் பலவிதத்திலும் நல்லுருவினதாகச் செப்பம் செய்தமைக்கு மீண்டும் நன்றி. ஆனால் திருத்தத்தின் நோக்கம் குறித்து உங்களிடமிருந்து ஒரு சிறு விளக்கம் வேண்டும்.

நா. பார்த்தசாரதி, மதுரை

எழுத்தாளர்களாகிய நாம் எதற்காக நம் சகஎழுத்தாளரை வீணே கொல்ல வேண்டும்? — கற்பனைகள் இயன்றவரை 'உயர்வாகவே' இருத்தல் நலமல்லவா? நம் கனவு கட்டாயம் பலிக்கும். —பூவை

'...உமா'வின் அட்டைப் படம் அழகு. திரு மாதவனின் அட்டைப் படத்திற்கு விளக்கம் வெகு ஜோர். 'காதலே தெய்வம்' நல்ல அமைப்பு. 'வாசக சாலைகளில் அறிவு வளர்ச்சி' மூலம் வரலாற்றினைக் காட்டி வண்டமிழை வளமாக்க நமக்கு வழி வகுத்துத் தருகிறீர்கள். தங்கள் தலையங்கம் துரோகிகளுக்கு நல்ல சூடு. திரு பூவையின் நாடகம் நாட்டின் நிகழ்ச்சியை நல் முறையிலே அழகான நடையிலே அமைத்தது கண்டு ஐந்து தடவை படித்தேன். பெனடிக்டின் ஓவியங்கள்—'நவரச பாவங்கள்' கதைகள் பல சொல்லுகின்றன.

மு. கிருஷ்ணமூர்த்தி, ஆற்காடு

முந்நூற்றெழுபத்தாறுவது பாராட்டுக் கடிதம் தங்களுடையது.

....எழுத்தாளர்களுக்கென அதிக உழைப்பை நல்கி நடத்தும் பத்திரிகை 'உமா' என்பதைப் பெருமையுடன் சொல்ல ஆசைப் படுகிறேன். ஒன்றைப் பார்த்து ஒன்று 'காப்பி' அடிக்கும் பத்திரிகை உலகத்திலே, தங்கள் சஞ்சிகை தனிப்பாதை வகுத்துக் கொண்டிருப்பது வரவேற்புக்குரியதேயாகும்.

வி. சாந்தா, பம்பாய்.

'உமா'விற்குத் 'தனித் தன்மை' (Originality)யில்தான் ஈடுபாடு அதிகம். தங்கள் பேனாவில் உண்மை இருக்கிறது. மகிழ்ச்சி. —ஆசிரியர்

உங்களுக்கு எங்கள் நன்றி

நடமாடும் தெய்வங்கள்

பி. எஸ். ஏ.

1. "ஓரம், ஓரம்!..."

கோடை வெயில். தார் உருகி ஒடுகிறது. கையில் உயிர் பிடித்து, மானிடன் ஒருவனை ஏந்தி, நடமாடி ஓடிவரும் இந்த மனித தெய்வத்தை நீங்கள் யாராவது கண்டதுண்டா?

இவன் தெய்வம்; ஆனல், கால் மாறிக் குனிக்க ஜதி பயிலவில்லை. லயம் தவருமல் கால்கள் மாறி மாறி ஆடுகின்றன. காரணம்: தாளம் என்கின்றீர்களா? அது தான் தவறு–சிருஷ்டித் தவறு.— உருகும் தார்; படை அஞ்சும் சூடு; வெயில்; வாங்கும் கூலி.

கொட்டுகின்ற மழையா? படை பதைக்கின்ற கோடையா? கண் தெரியாத இருட்டா? மண் தெரியாப்பாதையா?—உங்களுக்கெல்லாம் எங்கே செல்லவேண்டும்?

இதோ ஒரு மார்க்க பந்து–வழித்துணை மன்னன்–வழிகாட்டி–பத்திரமாய் உங்களைப் பாதுகாத்துச் சேர்ப்பிக்கும் மகாவிஷ்ணு. அவனுடைய சேஷ சயனம், படியளக்கும் நிதி மனைவி மகாலக்ஷ்மியெல்லாம் அந்த அரியாசனம் ஒன்றே தான்! பாதை தெரியாத பாலகன் முதல், பாதை தெரிந்த பருவமங்கை வரை நகரிலே நடமாட தான் நடமாடும் அசல் தெய்வம் இது. அரகர சம்போ மகாதேவா!

'என்னு நயினு?' என்று ஆரம்பித்து, 'வாத்தியாரே!' என்று அழைத்து, 'என்ன அய்யரே, சும்மா வா சாமி...மாம்பலம் தானே?....ம்....வாஸ்ஸாமி!' என்று தமிழ் வளர்க்கும் தாதா இவன்.

"என்னு ஷார், இம்மாந்தூரம் இஸ்த்துகினு வந்ததுக்கா ஆரணு தர்றே?" என்று பொருளாதார விளக்கம் காட்டி, அரை அடி தூரத்தை ஆறு மைல்களாக வர்ணித்து, போகவேண்டிய இடத்தில் சேர்ப்பிப்பதோடு, புதிதாக வருகிறவர்களுக்கு நகரம் பூராவையும் நரகமாகப் படம் பிடித்துக் காட்டிய படியே காசு சேர்க்கும் கர்ணமகாராஜன் இவன்!

'ஓரம், ஓரம்!' என்று கத்தி நடு ரோட்டையே ஓரமாக்கிக் காட்டும் இந்தக் கஜக்கோல் மன்னர்களுக்கு 'போணி' என்ற சொல் 'நாஸ்தா'வுக்குள் சமாப்தி. கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு 'துறவி உபதேசம்' செய்ததை இவர்கள் ஒட்டுக் கேட்டதாகப் புராணம் ஒன்று சொல்லக்கேள்வி! இரண்டு எண்ணிலே பஞ்சாயப் புதையும் எள் – எண்ணெய் ரகசியம் சிருஷ்டிப்புதிர் அல்லவே அல்ல! ★

"சீக்கிரம் வாருங்கள்!"

கிஷோர் ஸாஹு

மேஜையின் மேல் ஏராளமாகக் குவிந்து கிடந்த காகிதக் கட்டுக்களைக் கண்டு ரமாகாந்தன் நடுங்கிப் போனான். ஆபீஸ் வேலையை முடித்து விட்டுச் சாயங்காலம் சீக்கிரம் வீடு திரும்பலாமென்று எண்ணியிருந்தான். ஆதரவற்ற ஆறு மாதக் குழந்தையும் நிமோனியாவில் தவிக்கும் அன்பு மனைவியும் அவன் மனக்கண் முன் தோன்றினர். டாக்டரை வீட்டிற்கு அழைத்துச் சென்று காட்ட வேண்டுமென்று தினமும் எண்ணியிருந்தான். ஆனால் அவனுக்கு நேரம் கிடைத்தால் தானே? பத்து மணிக்குக் காரியாலயத்துக்குப் போய் காகிதக்கட்டுக்களைச் சரியான முறையில் பூர்த்தி செய்யாவிட்டால், தாமஸ் துரை சீறி விழுவாரே?

வீட்டை விட்டுப் புறப்படும்போது, "சீக்கிரம் வாருங்கள்; எனக்கு ஜுரம் அதிகமாவதைப் போலிருக்கிறது," என்று கோமதி—அவன் மனைவி கூறினாளே? ரமாகாந்தன் அவளுடைய நெற்றிப் பொட்டைத் தொட்டுப் பார்த்த போது நெருப்பு மாதிரி சுட்டதே? "நாசமாகப் போகட்டும் இந்த உத்தியோகம்! இன்று எங்கும் போக மாட்டேன்," என்றபோது "இப்படிச் செய்யாதீர்கள், பல மாதங்கள் ஒவ்வொரு ஆபீஸ் படியாக ஏறிக் கிடைத்த வேலை...எனக்கு ஒன்றுமில்லை. இரண்டு மூன்று நாட்களில் சுகமாகி விடுவேன்...." என்றாளே கோமதி?

"கோமதி," என்று அவன் மனைவியின் கையைப்பிடித்துக்கொண்டு "நான் உனக்கு ஒரு சுகத்தையுங் கொடுக்கவில்லை. நம்மை எப்பொழுது பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டமும் நோயுந்தான் சூழ்ந்திருக்கிறது," என்றான் ரமாகாந்தன்.

"தைரியத்தைக் கைவிடாதீர்கள். எல்லா நாளும் இப்படியே போய்விடுமா, என்ன? இன்று சீக்கிரம் போங்கள். சம்பள நாள்...வீட்டு வாடகை வேறு தர வேணும்... பால்காரன் வேறே சத்தம் போடுகிறான்.... புறப்படுங்கள்....!" அப்பொழுது கோமதியின் பக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை விழித்துக் கொண்டு கத்தியது. கோமதி அதைக் கொஞ்சி சமாதானப் படுத்தினாள். "வரும்போது குழந்தைக்கு ஒரு கிலுகிலுப்பை வாங்கி வாருங்கள்," என்றாள்.

ரமாகாந்தன் மெதுவாகத் தலையை நிமிர்த்திப் பார்த்தான். ஆபீஸ் கடிகாரத்தில் மணி ஐந்து.

"சீக்கிரம் வாருங்கள்; ஜுரம் அதிகமாகிறது மாதிரி தோன்றுகிறது," என்று அவள் கூறிய சொற்கள் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டே யிருந்தன. துரையிடம் 'லீவு' வாங்கலாமென்று எழுந்தான். உடனே ஏதோ நினைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

"துரையிடம் லீவு வாங்கலாமென்று நினைத்தேன். வீட்டில் மனைவி நிமோனியா ஜுரத்தில் செத்துக் கொண்டிருக்கிறாள். இங்கேயோ தாமஸ் துரையின் ரிஜிஸ்டர்களைச் சரிபார்த்துக் கொண்டிருக்கிறேன்...இத்தனையும் நாற்பது ரூபாய் சம்பளத்திற்கு!" என்றான் பக்கத்திலிருந்த நண்பனிடம்.

"மிஸ்டர் ரமாகாந்தன், இது தான் துரதிர்ஷ்டங்கிறது!"

"துரதிஷ்டமாவது, மண்ணாங் கட்டியாவது? போய் லீவு கேட்கிறேன். தராவிட்டால் 'விலகல்

தமிழ் உரு: டி. ராஜன்

கடிதம்' பையில் தயாராக இருக்கிறது ...!''

ரமாகாந்தன் வேகமாக எழுந்து துரையின் அறையை நோக்கிச் சென்றான். ஆபீஸில் அனைவரும் ஆச்சரியத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர். உள்ளிருந்து தாமஸ் துரையின் குரல் உடைந்துபோன மூங்கிலிலிருந்து கிளம்புவது போல ஒலித்தது.

சற்றுநேரத்தில் ரமாகாந்தன் பட படப்புடன் முணுமுணுத்துக் கொண்டு மேஜையினருகே வந்து காகிதக் கட்டுகளை அடுக்கலானான்.

மெதுவான குரலில் "என்ன நடந்தது, ரமாகாந்த்? என்று டைபிஸ்ட் கேட்டான்.

"எல்லாம் அதுதான் நடந்தது."

"என்ன?"

"லீவு கிடைக்கவில்லை!"

"அப்புறம்?"

"அப்புறமென்ன? இன்றும் மணி ஏழு அடிக்கும். நாசமாகப் போகட்டும் இந்த வேலையும் தாமஸ் துரையும்......யார் செத்தாலென்ன, பிழைத்தாலென்ன அவனுக்கு?"

*

ரமாகாந்தன் ஏழு மணிக்கு ஆபீஸிலிருந்து வெளி வந்தான். போர் பந்தரில் ஈரானி ஹோட்டல் முன்னாலிருக்கும் ஸ்டாலுக்கு வந்து நின்றான். தினம் ஆபீஸ் போகும் வேளையில் ஸ்டாலில் தொங்கும் அழகான 'லேடீஸ் ஸ்வெட்டர்' அவனுடைய கண்களில் படும். சம்பளம் கிடைத்ததும் அதைக் கோமதிக்கு வாங்கித் தர வேண்டுமென்று எத்தனையோ நாட்களாக எண்ணியிருக்கிறான். குளிர் கோமதியை வாட்டியது. கடைக்காரர்கள் தங்களுடைய நூதனமான சாமான்களை மற்றவர்கள் பார்வைக்குத் தெரியும்படி ஏன் வெளியே வைக்கிறார்கள், தெரியுமா? யாராவது அத்தகைய சாமான்களை வாங்கி, வேண்டியவர்களுக்கு 'வெகுமதி' யாகத் தரலா

வெளிவந்துவிட்டன :

செந்தமிழ்க் காவலர்

டாக்டர் அ. சிதம்பரநாதன் MA. Ph.D

எழுதிய

தமிழோசை 2-8-0
(இலக்கியம்)

*

விந்தன் எழுதிய

விந்தன் கதைகள் 3-0-0

குட்டிக் கதைகள் I 1-0-0

பசிகோவிந்தம் 1-0-0
(புடை நூல்)

*

அகிலன் எழுதிய

கலையும் வயிறும் 1-8-0
(கட்டுரைகள்)

*

பூவை எஸ். ஆறுமுகம் எழுதிய

காதல் மாயை 1-0-0
(2-ம் பதிப்பு)

★

புதுமைப் பிரசுரம்

பெண்ணாடம்—தெ. ஆ. மாவட்டம்.

மல்லவா? — அதற்குத் தான். ஆனால் நமக்குத் தேவைப்படும் போது, கையில் பணமிருக்கும் போது அந்த வஸ்து விற்கப்பட்டுவிடும். ஆனால் ரமாகாந்தன் பார்த்த 'ஸ்வெட்டர் கோட்' அப்படியே யிருந்தது.

அதை விலை பேசி வாங்கி வைத்துக் கொண்டு போகும்போது, நடைபாதையில் ஒருவன் பொம்மைகள் விற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்தான். "வரும்போது குழந்தைக்கு ஒரு கிலுகிலுப்பை வாங்கி வாருங்கள்," என்று கோமதி சொல்லி யிருந்தாள். ரமாகாந்தன் ஒரு பெரிய கிலுகிலுப்பையை வாங்கிக்கொண்டு நேராக 'விக்டோரியா டெர்மினஸை' அடைந்தான். அப்பொழுதுதான் வண்டி போய்விட்டதென்பதை அறிந்தான்.

*

இரவு மணி ஒன்பதுக்கு ரமாகாந்தன் தாணா ஸ்டேஷனை அடைந்தான். வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு நாய் கோரமாக ஊளையிட்டுக் கொண்டிருந்தது. ரமாகாந்தனுக்கு எதிரேயுள்ள கட்டடங்கள், கடைகள், பூமி, எல்லாம் ஒரேயடியாகச் சுற்றிச் சுழல்வதைப் போலத் தோன்றியது.

"சீக்கிரம் வாருங்கள்; ஜுரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது போலத் தோன்றுகிறது," என்றாளே? அவன் வேகமாக வீட்டில் நுழைந்தான். எங்கும் ஒரே இருட்டு. நடுங்கும் கைகளால் தீக்குச்சியை எடுத்துக் கொளுத்தினான் ரமாகாந்தன்.

உயிரற்ற உடல் மீது படுத்திருந்த குழந்தை, கோமதியின் மார்பில் பால் குடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தது! ★

திரைப்பட நடிகரும், தயாரிப்பாளரும், டைரக்டருமான இக்கதையின் ஆசிரியர் திரு கிஷோர் ஸாஹு சிறந்த சிறுகதை எழுத்தாளருங்கூட.

ஆசி கிடைத்தது!

ஏ. வி. ஆர். கோகிலா

ராகவனும் வாணியும் காதலர்கள். அவனுடைய உரிமைப் பெண் அவள். இரு தரப்புப் பெற்றோர்களுங்கூட அவர்கள்–காதலர்களின் திருமணவினைக்குச் சம்மதித்து விட்டார்கள். ஆனால் வாணியின் தந்தை திடுதிப்பென்று மனம் மாறினர். காரணம், ராகவனின் தந்தை அவருக்குத் தர வேண்டிய கடனைக் குறித்த கெடுவில் கொடுக்க வில்லையாம்!

வழி மறைத்து நின்ற தடை உத்தரவுகளையும் மீறி, ராகவனும் வாணியும் ஒரு நாள் ரகசியமாகச் சந்தித்தனர்.

அப்பொழுது தான் வைத்திருந்த தினசரியைப் பார்த்தார் வாணியின் தந்தையான பரமசிவம். வரி விளம்பரம் ஒன்று:

''வாணி, ராமர் தோட்டம் கடைசி பெஞ்சியில் காத்திரு. வந்து விடுவேன், நாளை மாலை ஆறு மணிக்கு.

ராகவன்.''

குறித்த சமயத்தில் தன் மகளும் ராகவனும் சந்தித்ததை மறைவில் நின்று பார்த்துப் பொருமினர்.

அடுத்த நாள், ராகவன் தினசரியைப் பார்த்தான்.

''அப்பா சம்மதித்து விட்டார். வீட்டுக்கு வரவும்.

வாணி.''

விழுந்தடித்துக் கொண்டு ஓடினன் ராகவன், வாணியின் வீட்டுக்கு. அங்கே வாணியின் தந்தை அவனை 'கன்னுபின்னு'வென்று திட்டி அனுப்பினர்.

மூன்ரும் நாள், வாணியின் அப்பா கீழ்க்கண்ட வரிவிளம்பரத்தைப் படித்தார்.

''காளி அம்மன் தோட்டத்துக்கு வா. ராகவனைப் பற்றிய சில ரகசியங்களைச் சொல்வாள் ஒரு கறுப்பு நிறப் பெண்.''

அங்கே—குறித்த இடத்தில் அவர் பெயருக்கு ஒரு கடிதம் மட்டும் இருந்தது:

''அப்பா! நான் ராகவனைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். ஆமாம்; காதல் என்பது புரட்சியின் மறுபெயர்தான்!... அதனல் அவரோடு புறப்பட்டுப் போயிருக்கிறேன். என்னை மன்னிக்கவும். இந்நேரம் அம்மாவுடன் நாங்கள் திருநீர்மலையிலே இருப்போம்....எங்களுக்கு உங்கள் ஆசிகளை வழங்குங்கள்....

வாணி.''

'ஆமாம், ராகவனின் அப்பா எனக்குத் தரவேண்டிய கடனைத் திருப்பிக் கொடுக்காத தற்காக பாவம், இளங்காதலர்களின் மனங்களை வீணே புண்ணுக்கி விட்டேனே?...கடைசியில் அவர்களது துணிவு திருமணத்தில் கொண்டு விட்டதே!... இப்பொழுதே ராகவனின் அப்பாவையும் அழைத்துவர ஏற்பாடு செய்து விட்டு, இதோ நானும் அவர்களை ஆசீர்வதிக்கப் புறப்படவேண்டியது தான்...' —இவ்வாறு நல்ல முடிவு செய்தவாறு காரைத் திருப்பினர் பரமசிவம்! ★

இரண்டாம் தாரம்

வீர. பழனியப்பன்

எனக்கு நாக்கு வரண்டுபோய் விட்டது. தொண்டைக் குழியிலே இருமல் முட்டிக்கொண்டு நின்றது. எழுந்து தண்ணீர் குடிப்போம் என்ருலோ, முதுகெலும் பெல்லாம் தெறித்து உடைந்துவிடும் போல வேதனையாக இருந்தது.

காமுவைக் கூப்பிடலாம் என்று வாயெடுத்தேன். 'கலகல' வென்று கேட்ட சிரிப்பொலி என் வார்த்தையை வெளியே வரவொட்டாமல் தடுத்தது.

"காமு, நீ ரொம்பப் பொல்லாதவள்...." – அவர் சிரித்தார்.

"நீங்கள் மாத்திரம் ரொம்ப நல்லவரோ?" – அவளும் சேர்ந்து சிரித்தாள்.

"மேலே, மீனு தூங்கிக் கொண்டிருக்கிருளா? அல்லது விழித்துக் கொண்டு இருக்கிருளா?"

"அக்கா தூங்கிக்கொண்டுதான் இருக்குது; ஏன் அத்தான், உங்களுக்கு அக்காவைக் கண்டால் ரொம்பப் பயமா இருக்கோ?"

"இல்லே. காமு! இப்போ அவள் இருக்கிற நிலையிலே நல்லது கெட்டது எதுவுமே அவள் காதிலே விழக்கூடாது...ஹூம்...உன் அபிப்பிராயத்தைச் சொல்லு...அதுக்கு மேலே தான் நான் எதுவும் ஏற்பாடு செய்யணும்..."

"இல்லே, அத்தான்; அக்காவுக்கு உடம்பு இப்படி மோசமாய் இருக்கையிலே..."

"காமு...இந்தப் பேச்செல்லாம் வேணும்....உண்டு, இல்லே–இரண்டிலே ஒண்ணு சொல்லு..."

"இப்படிக் கேட்டா, நான் எப்படிப் பதில் சொல்றது?"

"எப்படிச் சொல்றதா? வாயாலே சொல்லுறது....நீ கல்யாணம் பண்ணிக்கிறியா? இல்லையா? இப்பவே தீர்மானமாச் சொல்லிவிடு...... அப்புறம்...."

"போங்க அத்தான்....உங்களுக்கு எப்பவும் கேலிதான்!...."

பிணங்கும் குரலில் காமுவின் பேச்சு வெளிவந்தது. அவளுக்கும் இஷ்டம் தான் போலிருக்கிறது! என் உடல் குலுங்கியது. என் தலை சுழன்றது.

'லொக்...லொக்...'

என்னையும் மீறிக்கொண்டு இருமல் வந்து விட்டது.

"காமு, மீனு விழித்துக்கொண்டு விட்டாள் போல இருக்கு; நீ அவளிடம் இந்த விஷயத்தைச் சொல்லி விடாதே!"–அவர் மெதுவாகக் கூறியது என் செவிகளில் தெளிவாக விழுந்தது.

அவர் மாடிப்படியேறி வரும் சத்தம் கேட்டது. காலடிச் சத்தம் என்னருகில் வந்து நின்றது. நான் கண்களைத் திறந்து பார்க்கவேயில்லை. அவருடைய மூச்சு என் முகத்தில் பட்டது.

"மீனு...."

நான் தூங்குவது போல இருக்கத்தான் விரும்பினேன். இருமல் என்னைப் புழுவாகத் துடிக்கச் செய்து விட்டது.

அவர் என்னைத் தன் மார்பு மீது சார்த்திக் கொண்டு நெஞ்சைத் தடவிக் கொடுத்தார். ஆனால் அவருடைய ஸ்பரிசம் எனக்கு இதமளிக்கவில்லை. உடலெல்லாம் பற்றி எரிந்தது.

அவள் எண்ணினுள், தனக்குக் குறுக்கே தன் உடன் பிறந்தாள் நிற்பதாக!... ஆனல், நடந்தது....?

"மீனு, கொஞ்சம் வென்னீர் குடிக்கிறியா?"

எனக்கு இப்போது தேவைப்படுவது வென்னீரல்ல - ஒரு துளி விஷம்....!

அவர் முன்னெல்லாம் என் மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார்? இப்போது அவரே எனக்குத் துரோகம் செய்யும் அளவிற்கு மாறி விட்டாரே? எல்லாவற்றிற்கும் இந்தக் காமுதான் காரணம்! அவள் மட்டும் இங்கே வராதிருந்திருந்தால்...?

'....இப்படி ஆகும்னு தெரிஞ்சிருந்தா, உன்னே இங்கே அழைச்சிட்டு வந்திருக்கமாட்டேன்'-சற்று முன் அவர் அவளிடம் சொன்ன சொற்கள் நினைவுக்கு வந்தன. என் கண்களில் நீர்த்துளிகள் முத்திட்டன.

"அக்கா, ஒருமொணக்கு தண்ணீர் குடிச்சா, இந்தக் களைப்புக்





குக் கொஞ்சம் சௌகரியமா இருக்குமே?''

''எனக்குக் கண்ணெல்லாம் சுத்துது,'' என்று கண்களை இறுக மூடிக் கொண்டு புரண்டு படுத்தேன்.

கண்களை இமைகளால் மூடி மறைத்துக் கொள்ளலாம்; ஆனால் கனத்திருக்கும் இதயத்தை எதைக் கொண்டு மூடுவது?

அவர்—

ஒரு காலத்தில் என் மீது எவ்வளவு அன்பாக இருந்தார்...! ஒரு காலத்தில் என்ன–நான் நோயிலே விழுந்த பின்னருங்கூட அவர் எவ்வளவு அன்பாக இருந்தார்? எத்தனை இரவுகள் அவர் எனக்காகக் கண் விழித்தபடி அன்பொழுகப் பணிவிடைகள் செய்தார்? ஆனால் காமு வந்தாள்....எல்லாமே மாறி விட்டது....!

காமுவை அவரா இங்கே வரவழைத்தார்? அதற்குக் காரணம் நான் தானே? அவர் அப்போதே சொன்னார்: 'மீனா, கல்யாணமாகாத வயதுப் பெண் ஒருத்தியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வந்து இங்கே வைத்துக் கொள்வது அவ்வளவு நல்லதல்ல. எந்தக் கஷ்டமாக இருந்தாலும், நம்மோடேயே போகட்டும்...'

நான் அவளை நம்பினேன்; ஆனால் அவளோ? அவள் மட்டுமென்ன, அவருங்கூட அல்லவா என்னை மோசம் செய்து விட்டார்?

பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைத்துவிட்டு, பற்றிக் கொள்ளாமல் பாதுகாப்பது என்றால் சிரமம் தானே? காமு இளமை மெருகேறிய எழிற்சிலை; நானோ, நோயெனும் புகை படிந்து உருக்குலைந்து வரும் ஓவியம்! அவர் என்ன, உயர்வையும் தாழ்வையும் ஒன்றாகக் கருதும் ஞானியா?

அப்புறம் அவரையே கதியென நம்பிக் கொண்டிருக்கும் என் கதி?

இனி நான் இருந்தும் ஒன்றுதான் — இல்லாவிட்டாலும் ஒன்றுதான்! எலும்பை அரித்துக் கொண்டு வரும் நோய்க்கிருமிகள் இன்னும் எத்தனை நாளைக்கு என்னை வாழ வைத்துவிடப் போகின்றன?

2

'அக்கா, உன் மாங்காய் மாலையை நான் போட்டுக் கட்டுமா?''

''எங்கே யாச்சும் வெளியே போகப் போறியா, காமு?''

''ஆமா அக்கா. அத்தான் வந்து என்னை அவர் சிநேகிதர் வீட்டுக்குக் கூப்பிட்டார்...''

''எடுத்துப் போட்டுக் கொண்டு போயேன்... இதுக்கு என்னை எதுக்கு வந்து கேட்பானேன்...?''

''உன்னைக் கேட்காமல் வேறே யாரை நான் கேட்கிறதாம்?''

''அடி பைத்தியம்...! எதுக்கு இப்படிச் சிணுங்குறே? இனிமே நானா அந்த நகைகளையெல்லாம் போட்டுக்கப் போறேன்? வயசுப் பெண்ணு நீ போட்டுக்கொண்டு அழகாயில்லாமல், வேறே யார் போட்டுக்கிறதாம்? உனக்கு எது வேணுமானாலும் எடுத்துக்க...''

நான் அனுபவிக்கக் கொடுத்து வைக்காததை என் தங்கையாவது அனுபவிக்கட்டும்! — இந்த முடிவுக்கு நான் வருவதற்குள் எத்தனை எத்தனை மனப்போராட்டங்களைச் சமாளிக்க வேண்டி வந்துவிட்டது! இனியும் அவர்கள் போக்கில் நான் ஏன் தடையாக நிற்க வேண்டும்?

''அக்கா, மாங்காய் மாலை எனக்கு நல்லா இருக்கா?''

''காமு, என் கண்ணே உனக்குப் பட்டு விடும்....? கீழே அத்தான் காத்துக்கிட்டு இருப்பார். போயிட்டு சீக்கிரமா வந்துவிடு.''

3

'' மீனா, மீனா....காமு ஏன் ஊருக்குப் புறப்படுகிறாள்?'' என்று கேட்டுக் கொண்டே என்னருகில் வந்து உட்கார்ந்தார் என் கணவர்.

''எல்லாம் காரணத்தோடேதான். கல்யாணத்துக்கு நிற்கிற பெண்ணை நம்ம வீட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தால் பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க? அப்பாவோடு இப்போதைக்குப் போய் இருந்துவிட்டு கலியாணம் முடிஞ்சவுடனே இங்கே வந்து தங்கியிருக்கட்டுமே? இன்று இப்படிச் செய்வதிலே உங்களுக்கு எதுவும் ஆட்

சேபணமில்லையே?'' என்பதாக நான் அவரைக் கேட்டேன்.

''உன்னுடைய யோசனை நல்லது தான்...சரி...காமு வந்து ஏதாவது உன்னிடம் சொன்னாளா?......''

'' எனக்கு மூளை இல்லையா? இத்தனை நாளும் நீங்களே என்னிடத்தில் வந்து சொல்லுவீங்கன்னு எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன்.. நீங்க சொல்லவில்லை....''

''நீ ஒண்ணும் அதைப் பத்தித் தப்பா நினைச்சுக்காதே, மீனு. உனக்கோ உடம்பு சரியில்லே... உன்கிட்டே அதைப்பத்திச் சொல்லி உனக்கும் மனசுக்குக் கஷ்டத்தைக் கொடுப்பானேன்னு தான் இருந்தேன். உனக்குத் தெரியாமல் நான் இதுவரைக்கும் எதுவும் செய்ததுண்டா?''

'' அதனாலே என்ன? என்னிக்கு இருந்தாலும் ஒரு நாள் எனக்குச் சொல்லாமலா இருந்திடப் போறீங்க?''

''ம்...''

''எப்போ கல்யாணம் வச்சுக்கிறதாக உத்தேசம்?''

''அதுஎன்இஷ்டத்தைப்பொறுத்ததா? உங்கப்பாவைக் கலந்துகிட்டல்லவா முடிவு செய்யணும்? அவர் ஒருவேளை என்யோசனைக்கு ஒத்து வரல்லேன்னா...?''

''அப்புறம் நான் எதுக்கு இருக்கேனும்? நான் சொல்லிட்டா அப்பா ஒண்ணும் தட்டிப் பேச மாட்டாங்க....''

''அது எனக்குத் தெரியாதா, என்ன? என்ன இருந்தாலும் நாம் கட்டாயப் படுத்தி அவரை இணங்கவைக்கக்கூடாது. அவரை வரவழைச்சு எல்லா விஷயத்தையும் சொல்லி, அவரா இணங்கினா கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்வோம். இல்லேன்னா விட்டுடுவோம்....''

''உங்களுக்கும் காமுவுக்கும் இந்தக் கல்யாணத்திலே இஷ்டம் இருக்கையிலே அவர் ஒன்றும் தடுத்துப் பேசிட மாட்டார். அப்படிப் பேசினால் நானே இதுக்கு முன்னாலே நின்னு ஆகவேண்டியதைச் செய்திடுவேன்! உங்களைக் கணவனாக அடைவதற்கு காமு கொடுத்து வைத்திருக்கணும். நீங்க அவளைக் கல்யாணம் செய்து கொண்டு ஆனந்தமா இருப்பதைப் பார்க்கவேணுங்கிறதுதான் என்னுடைய வெகு நாளைய ஆசை...''

''மீனு, உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிட்டுது? காமுவை நானா கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்? நான் தூக்கி வளர்த்த பெண்ணை, நானே கல்யாணம் செய்து கொள்ளணும்னு நீ எப்படித்தான் சொல்கிறாயோ? எனக்குத் தலையெல்லாம் சுத்துதே...?''

அவருடைய பேச்சு என்னை கிறுகிறுக்கச் செய்தது.

''கொஞ்சம் முந்தி, உங்களுக்கும் அவளுக்கும் கல்யாணம் செய்து கொள்வதிலே சம்மதம்னு நீங்க சொன்னீங்களே?''

''நான் சொன்னதை நீ ரொம்ப நல்லாப் புரிந்து கொண்டிருக்கே? காமுவோட கல்யாணத்திலே எனக்கும் அவளுக்கும் திருப்தின்னு நான் சொன்னேன். மாப்பிள்ளை நானல்ல—என் சிநேகிதன்-ராமநாதனுடைய தம்பி...ஆனா நீயோ என்னையே அவளுக்கு மாப்பிள்ளையாக்கப் பார்த்திட்டே?''

அவருடைய முகத்தைப் பார்க்க என் கண்கள் கூசின. அவர் காமுவின்மேல் வைத்திருந்த பரிசுத்தமான பாசத்தை எவ்வளவு மட்டமான முறையில் நான் என் சந்தேகக் கண்களால் கறையேற்றி வைத்திருந்தேன்? இதை எண்ணும்போது என் உடல் குன்றியது.

''மீனு, இப்போ நீ என்கிட்டே தத்துபித்துன்னு சொன்னது போல வேறு யார் கிட்டேயும் உளறி வைக்காதே. காமு ராமநாதனோட தம்பியை மனமார விரும்புகிறாள்; அந்த இடமும் ரொம்ப உயர்ந்த இடம். இந்த

ஒரு மாசமாக அவளுடைய ஆசையை நிறைவேற்றத்தான் நான் படாதபாடு பட்டுக் கொண்டு இருக்கேன். அதற்காகவே முந்தின நாள் காமுவை அவர்கள் வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போய் அங்கே எல்லாருடைய அபிப்பிராயத்தையும் நல்ல முறையிலே உருவாக்கி வச்சேன்; என்னுடைய திட்டத்தை யெல்லாம் உன்னுடைய பைத்தியக்கார ஆசைக்குப் பலியாக்கி விடாதே, மீனு...!''

என்னதான் அவருடைய அன்பு என் கண்ணீரைக் கட்டுப்படுத்தினாலும், அந்தக் கண்ணீருக்குள் ஒடுங்கியிருக்கும் கொந்தளிப்பை என்னால் அடக்கவே முடியவில்லை; நான் விம்மினேன்....!

''மீனு, ஒன்று கேட்கிறேன்; நெஜம்மாவே நான் காமுவைக் கல்யாணம் செய்து கொள்ள வேணும் என்று நீ மனசார விரும்புகிறாயா?''

''இல்லை...இல்லை ... இப்போ தான் எனக்குப் புரிஞ்சுது....உங்களைப் புரிஞ்சுக்காம பேசி உங்க மனத்தைப் புண்படுத்தியதற்காகத்தான் இப்போ...நான்....''— அவருடைய மார்புக்குள் என் முகத்தைப் புதைத்துக் கொண்டேன், அழுதேன்.

அவருக்காக நான் எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்க எண்ணியதைப் பற்றி யோசித்தேன். பல ஹீன உணர்ச்சியால் உந்தப்பட்டு நான் விட்டுக் கொடுக்க எண்ணியதை 'தியாகம்' என்று முடிவு கட்டியது எவ்வளவு பெரிய தவறு என்று இப்போது தான் புரிந்தது; கோழையின் பணிவு அஹிம்சையாகிவிட முடியுமா?

''காமு...காமு...இங்கே வாயேன்...இங்கே மீனு என்ன சொல்றான்னு கேளேன்....''

அவர் வேகமாக கூப்பாடு போட்டது என் சிந்தனையைத் துண்டித்தது — அவருக்கு எப்போதுமே விளையாட்டுத் தான்!

''இங்கே பேசினதை அவள் கிட்டே சொல்லப் போறீங்களா?''

என் முகத்தில் புது ரத்தம் பரவியது. வெட்கம்!

அவளுக்கு என் நினைப்புகள் தெரியாமல் இருப்பதே நல்லதல்லவா? அவளுடைய அன்பு நெஞ்சிலே என்னால் ஏன் கவலையேற்பட வேண்டும்?

அவர் என்னையும் காமுவையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு சிரித்தார்.

''ஏன் அத்தான், நீங்க அக்காவைக் கலாட்டா பண்றதோட இருக்கக் கூடாதா? வேலை செய்து கொண்டிருக்கிற என்னையும் ஏன் வம்புக்கு இழுக்கிறீங்க...?''

ஆம்; அவள் என்னுடைய பழைய காமுவேதான்! ★

உருவகக் கதை வரிசை:

அமர நிலே

'பாலா'

எழுத்தாளன் ஒருவனுடைய பேனுவும், ஓவியன் ஒருவனுடைய தூரிகையும் அன்றைக்குச் சந்தித்துக் கொண்டன; நின்று நிதானித்துப் பேசிக் கொண்டன.

தூரிகைக்குக் கர்வம் மிதமிஞ்சியிருந்தது.

பேனு தன்னுடைய – தனக்குரிய கௌரவத்தை–கருவத்தை விட்டுக் கொடுக்கவில்லே.

"என்னுடைய பணி இல்லாவிட்டால், உன்னுடைய தரம் எவ்வளவு மோசமாகப் போய்விடும், தெரியுமா? நான் அழகழகான ஜீவனுள்ள படங்களே வரையாவிட்டால், நீ எழுதும் கதைகளே யார் படிப்பார்கள்?" என்று பேனுவைக் கிண்டலாகக் கேட்டது தூரிகை.

"இளக்காரப் பேச்சு எதற்கு? ம்....கதைகளே வரையக் காரணமாயிருக்கும் என்னே நீ அவ்வளவு சல்லிசாக அந்தரத்தில் தூக்கி எறிந்து பேசிவிட முடியுமா?

நான் கதைகளே எழுத ஆதாரமாயிருக்கிறேன்; நீ மேற்படி கதைகளே வாசகர்கள் படிக்கக் காரணமாயிருக்கிருய் ... அவ்வளவுதான் விஷயம்....!" என்று வினயமாகச் சொன்னது பேனு.

தூரிகை "பூ" என்று அலட்சியமாகச் சிரித்துவிட்டுச் சொன்னது:

"நான் வரையும் சித்திரம் ஒன்றுக்கு மட்டும் கட்டாயம் நூறு ரூபாய் கிடைக்குமே?"

பேனு தன்னுடைய 'புரியாத' அல்லது 'புரியவிடாத' பாஷையில் பேசியது: "எனக்கு இந்த பூஜ்யத்தில் எப்போதும் நம்பிக்கை இருப்பதில்லே ...!"

ஒரு நாள்—

அந்தப் பேனுவும் அந்தத் தூரிகையும் சந்தித்துக் கொண்டன–எதிர்பாராத சந்திப்பு.

தூரிகையின் முகம் தொங்கிக் கிடந்தது.

"இப்போது நான் அவனுக்குத் தேவை இல்லே. பேரும் புகழும் சேர்ந்தபிறகு, என் இடத்தை வேருெரு புத்தம் புதுத் தூரிகை பற்றிக் கொண்டது....!"

"என் விஷயம் அப்படியல்ல. அவனுடைய கை ஓய்ந்து நழுவிய பின்னர்தான், என்னே அவனுடைய கை தளரவிட்டது."

"ஆமாம்; எழுத்துக்காகப் பிராணனே விட்டிருக்கிருர்கள் பலர்... உண்மைதான்...!"

"ஓவியங்களுக்காக எத்தனேயோ பேர் வாழ்ந்திருக்கிருர்கள்.... அதுவும் உண்மை"—இது பேனு.

"ஒரு ரகசியம் – சித்திரத்தால் வாழத்தான் முடியும்!"

"ஓர் உண்மை–எழுத்தால்தான் 'அமரநிலே' அடைய முடியும்!"

★

ரங்கூன் கமலம்

"எல்லார்வி"

18. பட்டமரம் தளிர்க்குமா?

''விஜயம்!''

''என்ன?''

''நீ சொல்ல மாட்டாயா?''

''நீங்கள் அலட்டிக்கொள்ளாமல் இருக்க மாட்டீர்களா? டாக்டர் சொன்னபடி கேட்டால் விரைவில் உடம்பு குணமாகும். அப்புறம் எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். அதை விட்டு, ஓயாமல் இப்படி அலட்டிக் கொண்டால் ....''

ராஜுவின் கண்கள் சற்று நேரம் விஜயத்தின் முகத்தை ஊடுருவி நோக்கின.

விஜயத்தின் தாய் மீனாட்சியம்மாளின் உடல் நிலை கவலைக்கு இடமாக இருந்ததை முன்னிட்டு ராஜு கொடுத்த தந்தியின்மேல் விஜயம் கீரனூர் வந்தாள். வந்த இடத்தில் தாயைக் கண்டும் சூழ்நிலையைக் கண்டும் பெருங் கலவரத்திற்கு உள்ளானாள். தாய் பிழைப்பாளா என்பது ஒருபுறம்; அந்த வீட்டில் பெண்மணிகள் இருவர்; இருவரும் முதியவர்கள்; இருவரும் படுத்த படுக்கை. காளைப் பருவத்தினனான ராஜு மட்டுமே வளைய வந்து கொண்டிருக்கிற இடத்திலே தானும் எப்படி நடமாடுவது என்கிற அச்சம் மற்றொரு புறம். ஆனால் உத்தம புத்திரனான ராஜு, அவள் கவலைகள் இரண்டும் வீண் என்பதை அவள் உடனேயே உணர்ந்து கொள்ளும்படி செய்துவிட்டான்.

ஒளியா? நிழலா?

கோபு: நான் எடுப்பார் கைப்பிள்ளை என்கிறீர்களா? எனக்குக் காதல் முக்கியம். ஆமாம்; காதல் என்றால் என்ன அர்த்தம்?

கமலம்: காதல் என்றால் பணம் என்று அர்த்தம். ரங்கூன் கமலத்தில் அசல் உண்டு; நகல் உண்டு. பாவம், கோபுவுக்கு என்னைப் புரிந்து கொள்ள முடிமா, என்ன?

ராஜு: மின்னுவதெல்லாம் பொன் என்று எண்ணி ஏமாந்து விட்டானே, என் தம்பி! ஒருத்தியால் எங்கள் பாசம் அறுந்தது; குடும்பம் கலைந்தது. ஐயோ, பத்மா!

பத்மா: என்னை ஏன் அழைக்கிறீர்கள், அத்தான்? எனக்குப் பதிலாக உங்களுக்குப் பணிவிடை செய்ய ஒரு விஜயமாவது வந்தாளே?....

விஜயம்: இப்பொழுதே சொல்லி விட்டேன் — எனக்கும் புதிர் என்ற சொல்லுக்கும் நட்பு. ரகுவாம்–ஜானுவாம்–பாலுவாம்....என்னவெல்லாமோ சொல்கிறார்கள்–உலகம் பொல்லாதது தானே....?

சொல், செயல் ஆகியவற்ருல், அவள் அவனைத் தெய்வப் பிறவியாகவே கருதவேண்டியிருந்தது.

விஜயம், அந்த வீட்டிலே காலடி வைத்ததுமே ராஜு அங்கிருந்து வெளிப்பட்டு விட்டான். பெட்டி, படுக்கை முதலியவற்றை வாசற்புரத்திற்குக் கொண்டு வந்துவிட்டான். குளிப்பது திருக்குளத்தில். ஈரத் துணிகளைத் துவைத்துத் திண்ணைக் கோடியிலே உலர்த்தினன். உண்பது நடைரேழியில். உறங்குவது தெருத் திண்ணையில். அவள் வந்தபின் அவன் ஒரு போதும் தனியே வாசற்படி தாண்டி உள்ளே செல்லவே இல்லை.

இந்த நிலை விஜயத்தை அதிக ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவள் ஊரிலிருந்து வந்த கொஞ்ச நேரத்தில் டாக்டர் வந்தார். அவர் திரும்புகிறபோது ராஜு அவருக்குப் பணம் கொடுத்தான். ஒரு நூறு ரூபாய் நோட்டும் சில பத்து ரூபாய் நோட்டுக்களும் அவள் கண்ணில் பட்டன. தினசரி இரண்டு வேளை காரில் வந்து பார்த்து, சிகிச்சை செய்கிருர் அல்லவா? அதிகத் தொகை ஆகத்தான் செய்யும். ஆனல் ஒரு சமையற்காரியின் பொருட்டு—அதிலும் சில மாத காலமே தொடர்புடைய ஓர் ஊழியக்காரியை முன்னிட்டு—அவளுக்குரிய ஊதியமெல்லாம் அவ்வப்போது கொடுபட்ட பின்னரும் — இத்தனை பணம் செலவிட்டு இவ்வளவு சிரத்தையோடு யார் கவனிப்பார்கள்? – அவள் வியந்தாள்.

விஜயத்தின் தோற்றம், குணம், பார்வை, நடை, சொல், செயல் ஆகியவற்றிலே அளவு கடந்த... அதை என்னவென்றுதான் சொல்வது? அந்த உணர்வின் மிகுதியால் அடிக்கடி அவள் கண்களில் தாரை வழியும். விஜயம் அதைக் கண்டு மனமுருகுவாள். இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவே அந்தக் குடும்பத்தின் சோக சரிதம் முழுவதையும் தர்மாம்பாள் மூலம் அவள் உணர்ந்தாள். அது மட்டுமா? இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் கோயில், குளம் முதலிய இடங்களுக்குப் போய் வந்தாள். சிறுகச் சிறுக ஊரில் அவளுக்குப் பலரின் பரிசயம் ஏற்பட்டது. எல்லோருக்கும் அவளை மிகவும் பிடித்தது. எல்லோருமே ஒரு முகமாகத் தர்மாம்பாள் குடும்பத்தை உயர்த்திப் பேசினர்கள்; கோபுவின் புத்தி கெட்ட தனத்தைப் பேசினர்கள்; பத்மாவின் சோக கீதத்தை இசைத்தார்கள்; ராஜுவை வானளாவப் புகழ்ந்தார்கள்.

'இத்தகைய நல்ல குடும்பம் இப்படி இருளடைந்து வருகிறதே? இதில் மலர்ச்சிக்கே இடம் இல்லையா? அதன் பொருட்டு நம்மால் ஏதாவது செய்ய இயலுமா? எனக்கு இவ்வளவு உதவி புரிபவர்களுக்குக் கைமாருக நான் ஏதாவது உதவினல்தானே நன்றியுடைமை ஆகும். என்ன செய்யலாம் ....?'

இந்தச் சிந்தனை சூழன்று கொண்டே இருந்ததே தவிர, விடை மட்டும் கிடைக்கவே இல்லை. ஒரு சமயம் பளிச்சென்று மின்னல் போல் ஓர் எண்ணம் எழுந்தது; உடனேயே மறைந்தது. தனக்குத் தானே வெட்கப்பட்டு, நாணித் தலை கவிழ்ந்தாள். 'என்ன மடமை இது? கேவலம் சமையற்காரி ஒருத்தியின் மகள், அநாதாசிரமத்தில் அண்டி நிற்கும் ஏழை நினைக்கக் கூடிய நினைப்பா இது?...மேலும் அவர் தாம் தீவிர பிரம்மசாரியாயிற்றே? பைத்தியக்காரத்தனம்...'

இந்நிலையில் ஒருநாள் அவன் காய்ச்சல் கண்டு படுத்தான். ஊராரும் விஜயமும் வற்புறுத்தின தன் பேரில் முன்னிடைத் தாழ்வாரத்தில் கட்டிலில் படுத்தான். அப்போது அவளுடைய பணிவிடைகள் அவனுக்குத் தவிர்க்க முடியாதவை ஆகிவிட்டன. மூன்று பேர் படுக்கையில் இருக்க, விஜயம் ஒன்றியாய்ப் பணி செய்தாள். மருந்தோ, ஆகாரமோ உட்கொள்ள வெறுக்கும் சில சமயங்

களில், குழந்தைகளைக் கடிவது போன்று அன்புடன் அதட்டி அரவணைக்கும் அவள் செயல்!

"உங்களுக்காக அல்ல; நீங்கள் தாம் வாழ்வை வெறுத்தவர் ஆயிற்றே? தள்ளாத பிராயத்தில் தடுமாறும் தாயின் மனத்துயர் மேலும் அதிகமாகாமல் இருப்பதற்காகவாவது உங்கள் உடல் நிலையைக் கவனிக்க வேண்டியது அவசியம் இல்லையா?"

"விஜயம், யார் சொன்னார்கள் உனக்கு?"

"எதை?"

"நான் வாழ்வை வெறுத்தவன் என்பதை?"

"உங்கள் தோற்றம் சொல்கிறது; பேச்சு சொல்கிறது; செயல்கள் சொல்கின்றன; அம்மா சொன்னார்; ஊரே தான் சொல்கிறது."

ராஜு நெடுமூச்செறிந்தான். பேசவில்லை.

"அறிவாளிகளே இப்படித் தான்."

"எப்படி?"

"சாமான்யர்கள் நினைக்கவே அஞ்சும் தவற்றைச் செய்தே விடுகிறது."

ராஜு விரக்தி தோன்ற பலமாக நகைத்தான்.

"நான் உங்கள் குடும்பத்திற்கு மிகவும் கடமைப்பட்டவள். அந்த முறையில் மிகப் பணிவோடு கேட்கிறேன்; உங்கள் அருமைத் தாயின் உள்ளத்தைப் போட்டி போட்டுக்கொண்டு உடைத்து நொறுக்குகிற காரணம் என்ன என்பதை எனக்குத் தெரிவிக்கலாமா?"

"உன்னுடைய தைரியத்தையும் சாதுரியத்தையும் மெச்சுகிறேன்; வியந்து பாராட்டுகிறேன். ஆனால் நீ கிளறுவது சாம்பல் என்பதையும் அதே மூச்சில் தெரிவிக்கிறேன். அங்கே தீப்பொறியின் வாடையே சிறிதுகூட இல்லை."

"வெறும் சாம்பலில் இராது தான். ஆனால் புகை லேசாகச் சுழன்றுகொண்டிருக்கிற இடத்திலே தீயை மறுப்பது அலட்சியத்தைத்தான் காட்டுமே ஒழிய, கண்டறிந்தது ஆகாது."

"புகை சுழல்கிறதா? நீ கண்டாயா?"

"கண்டதனால் தான் சொல்கிறேன்."

"எங்கே? எப்படி?"

"கண்களில் ....பார்வையின் மூலம்."

"ஹும். தோல்வியில் விளைந்த ஏக்கப் பார்வைக்குப் பொருள்?"

"பொருள் .... நான் சொன்னதுதான். எதனால் உங்களுக்கு இந்த வைராக்கியம்?...."

> உண்மைக்குப் பகை உள்ளத்தில் தோன்றும் பயம்.
>
> —ராஜாஜி

''பெற்ற தாய்க்குக்கூட மறைத்த உண்மையைச் சுற்றி வளைத்துப் பேசி வெளிப் படுத்தத் தூண்டுகிறாய். வேண்டாம் அது.''

''ஒரு கணம் பழகினாலும் உளம் கலந்த நிலையைக் காண்பவள் நான். வேற்று மனுஷியாகக் கருதிச் சொல்ல மறுத்தால் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளுங்கள் உங்கள் ரகசியத்தை! ம்... மருந்து சாப்பிடவில்லையா?''

''சரி. உட்கார், சொல்கிறேன்.''

''நீங்கள் தாம் அந்த உரிமையை எனக்கு அளிக்க மறுக்கிறீர்களே? வேறு மனுதருக்கு அருகே உட்கார உரிமை ஏது? அந்தரங்க அன்பு உடையவள் என்றால் ரகசியத்தை மறைக்க வகை ஏது?''

''சொல்லத்தான் வேண்டுமா? அதைக் கேட்டு நீ வருந்தத்தான் வேண்டுமா?''

''மறுபடியும் வீண் பீடிகையெல்லாம் வேண்டாம். எதுவானாலும் சொல்லுங்கள். பரிகாரம் இல்லாத எதுவுமே உலகத்தில் இல்லை.''

''என் விஷயத்திற்குப் பரிகாரமே இல்லை.''

''அப்படி என்ன விஷயம் அது?''

''நான் அல்பாயுஸ்!''

''என்ன?......யார் சொன்னது அப்படி?''

''நான் பிறந்த வேளை சொல்லிற்று; அதைப் பரிசிலனை செய்த மகா நிபுணரான சோதிடர் சொன்னார்.''

விஜயம் பெருமூச் செறிந்தாள். பிறகு நிதானமாக, ''பிதற்றல்'' என்றாள். ''சோதிடம் தொண்ணூற்றென்பது சதவிகிதம் பலிப்பதே இல்லை,'' என்றாள்.

''நான் குறிப்பிடுகிறவரின் சோதிடத்தில் சோடை இருந்ததே இல்லை. புள்ளி போட்டாற் போல என் ஆயுளை நிர்ணயித்தார். சொல்லவே மாட்டேன் என்றார். வற்புறுத்தின தன் பேரில், மிக மிக வேண்டியவர் என்ற முறையில், சூட்சுமமாக அறிவித்தார்.''

''என்னதான் சொன்னார், சொல்லுங்களேன்.''

''நீ பிரமசாரியாகவே இருந்து விடு என்றார். முதலில் அதிர்ச்சியுற்ற நான் திடுக்கிட்டு, 'ஏன்?' என்றேன். 'குலம் விளங்கத் தான் தம்பி இருக்கிறானே?' என்றார். மேலும் கேட்டபோது, 'அப்படிச் செய்து கொள்வதானால் முப்பத்து மூன்றுக்குமேல் செய்து கொள்' என்றார். முடிவில், 'முப்பத்திரண்டில் மாரகம் இருக்கிறது இந்த ஜாதகப்படி' என்றார். அப்புறம் என்ன வேண்டும்? புள்ளி விவரம் தவறினால், மாரகம் முன்னேயும் பின்னேயும் நேரலாம் அல்லவா? ஆகவே அந்தச் சபலமே சிறிதும் வேண்டாமென்று அவர் முதலில் சொன்னபடியே இருந்துவிட முடிவு கொண்டேன்...''

''விந்தை?....மாரகம் என்றால்?'',

''மரணம்தான்—சோதிட பாஷையில் மறைமுகமாக அதற்குச் சில பெயர்கள்.... மாரகம், கண்டம், மிருத்தியு என்றெல்லாம்.''

கூடத்திலிருந்து தர்மாம்பாள் விக்கின குரல் கேட்டது. விஜயம் ஓடிக் கவனித்தாள்.

அன்றெல்லாம் அவள் உள்ளம் ராஜு சொன்ன விஷயத்தைச் சுற்றியே வட்டமிட்டது. பழைய கூளங்களிடையே சிறிய நோட்டு

ஒன்று கிடந்தது. மேலே 'சுபம்' என்று எழுதியிருந்தது. பிரித்துப் பார்த்தாள். புரட்டின போது ராஜூவின் ஜாதகம் தென்பட்டது. அதிலே அவளுக்கு என்ன புரியும்? சிறு குழந்தை சிறு படம் பார்ப்பது போல அதை ஊன்றிக் கவனித்துக் கொண்டே இருந்தவள், திடீரென்று துள்ளிக் குதித்தாள். நோட்டை வைத்து விட்டு ராஜூவிடம் ஓடினாள். அவன் உடல் நிலை முதல் நாளைவிட மோசமாக இருந்தது. எனினும் அவளைப் பார்த்து முறுவலித்தான்.

"கண்டு பிடித்து விட்டேன்.... கண்டு பிடித்து விட்டேன்!"

"என்ன விஷயம்? எதைக் கண்டு பிடித்து விட்டாய்?"

"உங்கள் வாழ்க்கை மலர வழி உண்டு என்பதைத்தான்."

மூன்று நாட்களுக்குப் பின் குணம் தோன்றலாயிற்று. நான்காம் நாள் விஜயம் சொன்னாள்: "உங்கள் ஜாதகப்படி இப்போது உங்களுக்கு முப்பத்து நாலு நடக்கிறது. உங்கள் சோதிடர் கூற்றைச் சரியென்றே வைத்துக் கொண்டால் அவர் சொன்ன மாரகம் நடந்தேறி விட்டது. சென்ற ஆண்டிலே கத்திக் குத்துக்கு உள்ளாகிச் செத்துப் பிழைத்து விட்டீர்கள் அல்லவா?"

அவளுடைய புத்தி சக்திகளையும் பரிவையும், அக்கறையையும் கண்டு ராஜூ பிரமித்தான். சிறிது நேரம் அவளையே நோக்கினான். "அப்படி என்ன அவசியம், விஜயம்? மேலும் முப்பத்து நாலு பிராயத்தைக் கடந்தவனுக்கு யார் பெண் தருவார்கள்?" என்றான்.

"ஹூம்! நீங்கள் இல்லறத்தை மேற் கொள்ள இசைவது தெரிந்தால் செயலில் உள்ள பெற்றோர் பலர் முன்வருவர்!"

"சரி. அப்படியே பெற்றோர் சம்மதித்தாலும் பெண் சம்மதிக்க வேண்டுமே? எந்தப் பெண் சம்மதிப்பாள், விஜயம்?"

"என்னைச் சோதனை செய்து பார்க்கிறீர்களா? உங்களை அறிந்த பெண் உங்களோடு ஒருநாள் வாழ்ந்தாலும் போதும் என்று நினைக்காத பட்சத்தில் அது பெண் பிறவி அல்ல; மண் பொம்மை தான்."

"விஜயா!...." என்று கை நீட்டினான் அவன். அவள் கரத்தைப் பற்றப் போகும் தறுவாயில் ஏதோ சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்த ராஜூ தன்னை மறந்து, "பத்மா!" என்று கூவினான்.

19. பவனி

"சரி, பாட்டியம்மாள் மாதிரி நீட்டி முழக்கிக் கதை சொல்ல வேண்டாம். விஷயத்தைச் சுருக்கமாகக் கூறுங்கள். 'நெட் ரிஸல்ட்' என்ன? முகத்திலே கரியைப் பூசிக்கொண்டு வெறுங் கையை வீசிக் கொண்டு திரும்பி வந்தீர்கள். அது தானே?"

"நான் ஒன்று நினைக்க அது ஒன்று நடந்து விட்டது; அண்ணாவை யாரோ கத்தியால் குத்தி விட்டார்கள்! பெட்டியிலிருந்த பணத்தையெல்லாம் யாரோ களவாடிச் சென்று விட்டார்கள் என்கிறேன்; அதைக் காதில் வாங்காமல்...."

"அதை யெல்லாம் காதிலோ மூக்கிலோ வாங்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றுதான்

> திருமண ஒப்பந்தம் என்பது, திருடனுக்குச் சமீபத்தில் ஒரு போலீஸ்காரன் இருப்பதைத் திருடனுக்கு நினைப்பூட்டிக் கொண்டே இருப்பது போன்றது.
>
> — நாமக்கல் கவிஞர்

சொல்கிறேன். அது மட்டும் இல்லை. இனி ஒருபோதும் உங்கள் பங்கைப் பெற முடியப் போவதில்லை என்றும் கூறுகிறேன். ஆகவே நம் உறவும் இத்துடன் முடிவுபெற வேண்டியது தான் என்பதையும் தெரிவிக்கிறேன்....''

கோபுவின் உள்ளத்திலே ஏமாற்றமும் ஆயாசமும் ஆத்திரமும் குமுறின. அவள் முகத்தை ஊடுருவி நோக்கினன்.

''என் அம்மா என் திருமணத்தை முடிப்பதில் அவசரப் படுகிருள். தன் ஒரே பெண்ணுக்குச் சிறந்த ஒரு வரனைத் தேடுகிருள். இதுவரை உங்கள் பெயரைச் சொல்லி அவள்வேகத்திற்கு அணை போட்டிருந்தேன். இனி அது பலிக்காது. ஆகவே நான் அவள் இஷ்டத்திற்கு உடன்பட வேண்டியது தான். இனி நீங்கள் இங்கே வருவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.... என்னை அடியோடு மறந்து விடுங்கள்.''

அப்போது, ''கமலா...'' என்று அன்புக் குரலில் அழைத்தபடி யாரோ வருவதைக் கண்ட கோபு நிமிர்ந்து நோக்கினன் — பாலு!

எரிமலை வெடித்தது.

''பேயே! என்ன பார்க்கிருய்? நன்றிகெட்ட நாயே! உன் நெஞ்சம் எனக்குப் புரியவில்லையே தவிர, என் நலத்திலே கருத்துடைய எல்லாருக்கும் நன்ருகப் புரிந்தே இருந்தது. படுபாவி நான்....எல்லாரையும் பகைத்துக் கொண்டு உன் காலடியிலே வந்து விழுந்தேன்; சரியான பலனை அடைந்தேன். பெண் பேயே!.... இன்று வரை உனக்கு நான் அழுதிருக்கிற பணமே ஒரு குடும்பத்தின் மூன்று வருஷச் செலவுக்கு ஆகுமே? நன்றி கெட்ட வேசியே!......''

''பாலு, என்ன பேசாமல் இருக்கிறீர்கள்?'' என்று கூவிக் கண்ணை உருட்டி விழித்தபடி கமலா நாற்காலியைத் தூக்கினுள், கோபுவின் மேல் வீச. அதற்குள் பாலு எழுந்தான். கோபு இருந்த திசையிலே பாய்ந்தான். கோபு உஷாராகி விட்டான். ''சதிகாரச் சண்டாளப் பயலே.... கிட்டவந்தால் கொன்று போட்டு விடுவேன்!'' எனச் சீறினன்.

மறுகணம் 'பளார்' என்று பாலுவின் கன்னத்திலே ஓர் அறை விழுந்தது. அதற்கு மேலும் பாலு சும்மா இருப்பானு? கோபுவைத் தாக்கினன். பலமான கைகலப்பு. அங்கே இருந்த பொருள்களெல் சிதறி ஓடின. கமலா பயந்துவிட்டாள். தற்செயலாக வீதிப்பக்கம் அவள் பார்வை விழுந்தது. வாசலில் போலீஸ் சேவகன் போய்க் கொண்டிருந்தான். ''போலீஸ்! போலீஸ்!'' என்று கூவினுள். அதே சமயத்தில் தன் எதிரே சைக்கிளில் வந்து கொண்டிருந்த அந்த டிவிஷன் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு சலாம் வைத்த கதிரேசன் சட்டென்று நிமிர்ந்து மாடியை நோக்கினன்.

அப்போது, ''என்ன இங்கே?'' என்று கேட்டுக்கொண்டு நாற்புறமும் பார்வையை ஓடவிட்ட இன்ஸ்பெக்டரின் கண்ணில் கதவோரம் கிடந்த நூறு ரூபாய் நோட்டொன்று பளிச்சென்று பட்டது. அதே சமயம் கோபு பாய்ந்து சென்று அதை எடுத்தான். கமலா ஒரு புறமாக ஒதுங்கி நல்ல பெண் போல நின்ருள்.

''இந்த வீட்டிலே பணம் இறைந்து கிடக்கிறதே?'' என்று ஹாஸ்யமாகக் கூறிக்கொண்டே நோட்டைப் பிரித்தார் இன்ஸ்பெக்டர்.

''அது என்னுடையது தான்,'' என்ருன் கோபு.

''அடடே! உங்கள் காலில் ரத்தம் கசிகிறதே ஸார், கவனிக்கவில்லை....?'' என்று இன்ஸ்பெக்டர் கூறினதும் கோபு தன் காலில் காயத்தைக் கவனித்தான். அப்போது இன்ஸ்பெக்டர் தன் சட்டைப் பையிலிருந்த சிறு குறிப்புப் புத்தகத்தை எடுத்துப் பக்கங்களைப் புரட்டினர். ஒரு பக்கத்

தைத் தேடி எடுத்து அதிலுள்ள குறிப்பையும் அந்த நூறு ரூபாய் நோட்டையும் மாறி மாறி நோக்கினார். அதை கோபு பார்க்கவில்லை; கமலா கவனித்தாள். கோபு தலை நிமிர்ந்தபோது இன்ஸ்பெக்டர் குறிப்புப் புத்தகத்தைத் தன் சட்டைப் பைக்குள் அடக்கம் செய்து கொண்டார்.

''ம். இந்த நூறு ரூபாய் நோட்டு உங்களுடையதுதான் என்பதற்கு ஆதாரம்?....''

''இப்படிக் கேட்டால் எப்படி? நான் சொல்வது நிஜம்தான்.''

''ஏன் அம்மா, இது இவருடையது தானா?''

''ஆமாம்'' என்று விடையிறுத்தாள் கமலா.

இன்ஸ்பெக்டர் புன்னகை புரிந்து கொண்டார்.

''சரி. இங்கே என்ன விசேஷம்?''

''ஒன்றும் இல்லை,'' என்றான் கோபு.

''உங்களைக் கேட்கவில்லை. '....ஆபத்து' என்று தெருவிலே போலீசை அழைத்தவர்கள் அந்த அம்மாள். நான் அவர்களைக் கேட்கிறேன்...ஏன் அம்மா, என்ன நடந்தது?''

என்ன சொல்வது என்று புரியாமல் திகைத்தாள் கமலா. ''இவரை நான் மணந்து கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினார். நான் முடியாது என்றேன். தகராறு வலுத்தது. தாறுமாறாக நடந்து கொள்வார்போல் இருந்தது. பயத்தினால் போலீசைக் கூப்பிட்டேன்; அவ்வளவுதான்....'' என்றாள்.

''இது உண்மைதானா மிஸ்டர்?''

''ஆமாம்'' என்று ஒப்புக் கொண்டான் கோபு. அவ்வாறு ஒப்புக் கொண்டு விட்டால் இதில் விசாரணை இன்றி இன்ஸ்பெக்டர்

நீ யார்...?

'ஆழி'

''இருளில் வழி தெரியவில்லை ;
நிலவு தா!'' என்றேன்.
''உன் தேவை தெரியும்''
என்று தாரகையே தந்தாய்.

''மன நோய்க்கு
மாற்றுத் தா!'' என்றேன்.
மருந்தொன்றும் தராமல்
ஒரு மந்திரமே தந்தாய்.

''ஆழங் கடக்க ஒரு
தோணி தா!'' என்றேன்.
வேழத்தின் வலிமை ஈந்து
நீந்துங் கலை தந்தாய்.

கேட்ட தெல்லாம்
குறைத்தே கொடுத்தாய்;
''நீ துஷ்டன் ...'' என்றேன்.
சிரித்தாய் !

''தூர்த்தன்'' என்றேன்.
பொறுத்தாய் !
''நீயே இல்லை ...'' என்றேன்.
நிறைந்து நின்றாய் !

சிந்தனை செய்தேன் ; வந்தனை
செய்தேன் ; நிந்தனை செய்தேன்.
நான் கண்டதெல்லாம்....?
நான் யார் என்பதுதான் !

நீ....யார்...?
ஐயோ...நான் அறியேன் !

கண்டித்து அனுப்பி விடுவார் என்பது அவன் எண்ணம்.

''பலவந்தம் ஏதாவது நடந்ததோ? நோட்டு ஏன் தரையிலே கிடந்தது?........மிஸ்டர், உங்கள் காலில் ஏன் ரத்தம்?''

''பலவந்தம் ஒன்றும் இல்லை. நாற்காலியிலே இடித்துக்கொண்டதனால் காலில் ரத்தம்; சட்டையைக் கழற்றி யிருந்தவன் மீண்டும் போட்டுக் கொள்கிறபோது நோட்டு விழுந்திருக்கிறது.''

''தலையிலே பொட்டிலே வீங்கி யிருக்கிறதே? நகத்தினால் கீறினாற் போல் இருக்கிறதே? அவை என்ன?''

''அவை ஒன்றும் இல்லை...'' என்று கூறியபடி அந்தப்பிரதேசத்தைக் கையால் தடவிக் கொண்டான் கோபு. இன்ஸ்பெக்டர் இடி இடி என்று சிரித்தார். பிறகு கமலாவிடம், ''உங்கள் பணப்பெட்டியை நான் கொஞ்சம் பார்க்க வேண்டும், அம்மா...'' என்றார் நிதானமாக.

''எதற்கு?'' எனத் திடுக்கிட்டுக் கேட்டாள் கமலா.

''சொல்ல முடியாது.'' – இன்ஸ்பெக்டர் குரலில் கடுமை தொனித்தது.

கமலா கலவரத்துடன் நடந்தாள். ஜவானுக்கு ஜாடை தெரிவித்துவிட்டு இன்ஸ்பெக்டர் கமலாவைத் தொடர்ந்தார்.

நாலு நூறு ரூபாய் நோட்டுக்களும், பத்து, ஐந்து, ஒன்று என மற்றும் பல நோட்டுக்களும் சில்லறை நாணயங்களும் கமலாவின் பெட்டியில் இருந்தன. இன்ஸ்பெக்டர் நூறு ரூபாய் நோட்டுக்களை மட்டும் வாங்கி முன்போலத் தனது குறிப்புப் புத்தகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தார். அவர் முகம் குபீரென்று பிரகாசித்தது. தலையை மேலும் கீழுமாக ஆட்டிக் கொண்டார். நோட்டுக்களைப் பழையபடி பெட்டியிலேயே வைத்துப் பூட்டச் சொல்லிச் சாவியைப் பெற்றுக் கொண்டார். பிறகு கமலாவிடம், ''நீங்கள் இப்போது என்னுடன் போலீஸ் ஸ்டேஷன் வரையில் வர வேண்டும்....'' என்றார்.

''ஆ!'' என்று வீரிட்டாள் கமலா.

அதே சமயத்தில் 'தட தட' வென்று நாலைந்து பேர்கள் படிக்கட்டுகளில் ஏறிவரும் சந்தடி கேட்டது. அனைவரும் திரும்பிப்

பார்த்தார்கள். அடுத்த பகுதியின் இன்ஸ்பெக்டர், இரண்டு ஜவான்கள் பின் தொடர உள்ளே நுழைந்து வந்த பிரபல சில்க்வியாபாரி சுந்தர மூர்த்தி, ''இதோ, இந்த அம்மாள்தான்'' என்று கமலாவைச் சுட்டிக் காட்டினர்.

போலீஸ் அதிகாரிகள் வந்தனஞ் செலுத்திக் கொண்டார்கள். புன் முறுவல் பூத்துக்கொண்டனர். பிறகு ஜவான்களை ஜாடையாக எச்சரித்து விட்டு இன்ஸ்பெக்டர்கள் இருவரும் தனிமையிலே சென்று தாழ்ந்த குரலில் பேசிக் கொள்ளத் தொடங்கினர்.

*

ஜவானின் கண்காணிப்பில் அறையிலே நின்றிருந்த கோபுவுக்கு உயிரே போவதுபோல் இருந்தது. அந்த ஒரு கணத்திலே அவன் மனக்கண் முன் தாயும் தமையனும் பத்மாவும் ரகுவும் மாறி மாறிக் காட்சியளித்தனர். அவனுக்கு அழுகையே வந்துவிட்டது.

தஞ்சையிலே விடுதலை பெற்ற அவன் கிரனூருக்கோ வேறு இடங்களுக்கோ செல்லாமல் நேரே சென்னையை அடைந்தான். நடந்த விருத்தாந்தங்களைக் கமலாவிடம் சொல்லி அவளுடைய பொருள் உதவியின் பேரில் அண்ணன்மீது வழக்குத் தொடரலாம் என்பது அவனின் மனோராஜ்யம். ஆனல் அவன் வந்தபோது கமலா ஊரில் இல்லை. வீடு பூட்டிக் கிடந்தது. தோட்டக்காரன் சரியான பதில் எதுவும் தரவில்லை. கையில் எஞ்சியிருந்த பணம் கரைந்துவிட்டது. பசிப்பிணி பீடிக்கத் தொடங்கவே ஹோட்டல் ஒன்றில் ஊழியத்திற்கு அமர்ந்தான்.

முன்தினம்தான் அவனது தவம் பலித்தது. கமலா வந்துவிட்டாள். அன்று அவளைக் காண வந்தான். அவள் முகங் கொடுத்துப் பேசவில்லை. அசட்டுக் கோபு அதைப் பிணக்கம் என்று நினைத்தான். அவளுக்குக் கிரனூரில் நடந்தவை தெரிந்திருக்கிறதென்றும், அவள் இருதயமற்ற பாவி என்றும் அப்புறமல்லவா தெரிந்தன?

''ம், ம்!....புறப்படுங்கள்!''

அடுத்த சில நிமிஷங்களில் போலீசார் சூழ கமலாவோடு பட்டணத்து வீதிகளிலே 'பவனி' சென்று கொண்டிருந்தான் கோபு....!

(அடுத்த இதழில்: சுபம்)

எதிர்பாராதது!

'ரஜன'

டக், டக்
தோல்வி!

டக், டக், டக்
தோல்வி ....!

இதோ பார், சொல்லி விட்டேன்;
மரியாதையாக வந்துவிடு.

டக், டக்
தோல்வி.... தோல்வி....!

சொன்னல் கேட்கமாட்டாய்?
கோபத்தைத் தூண்டாதே;
நான் பொல்லாதவன்!

டக், டக், டக், டக்
மீண்டும் தோல்வி.

நான் சொல்வதைக் கேள்.
இம்முறையும் ஏமாற்றி விடாதே!

இம்முறையும் ஏமாற்றினல்...
அப்படியே எறிந்து விடுவேன்!

டக், டக், டக்
ஆஹா! வெற்றி, வெற்றி ....!

ஸ்பூன் முறிந்தது;
மெதுவடை விண்டது!

இந்தப் புனைபெயர்?

'ஜடாதரன்'

இது வரை தத்தம் புனைபெயர் வரலாறுகளை வழங்கியவர்கள்: மகரம், வாசவன், ஜெகசிற்பியன், மாறன்.

பேராசிரியர் 'கல்கி' அவர்கள் புனைபெயர் மகாத்மியத்தைப்பற்றி இப்படிக் கூறியிருக்கிறார்கள்: ''எல்லோருக்கும் தெரிந்த சொந்தப்பெயரில் எழுதுவதை விட, புனைபெயரில் எழுதும்போது வாசகனுக்கு எழுத்தில் ஆர்வம் ஏற்படுகிறது என்பது சர்வ நிச்சயம். சொந்தப் பெயரை அலட்சியமாக நினைத்து ஒதுக்கிவிடக் கூடிய ஒருவன், அதே எழுத்தாளர் புனைபெயரில் எழுதும்போது, 'அற்புதம், அற்புதம்!' என்று படிக்கிறான்.''

'கல்கி'யின் வாக்கு – ஹாஸ்யமானாலும், அது சத்திய வாக்குத்தான்.

நான் 'பாலு' என்ற பெயரில் 1948-ஆம் வருடம் முதன் முதலாக சிறுகதைகள் எழுதத் தொடங்கிய போது, எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பலதரப்பட்டவை.

'பாலு' என்கிற பெயரில் கவர்ச்சி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. மேலும், வெவ்வேறு காலங்களில் 'பாலு' என்ற பெயர் பத்திரிகைகளில் அடிபட்டிருப்பது பழைய 'வால்யூம்'கள் சிலவற்றைப் புரட்டும் போது தெரிந்தது. உலகத்தில் எத்தனையோ 'பாலு'க்கள்! கணக்கிட முடியுமா அவர்களை? அத்தகைய லட்சத்தில் என்னை மாத்திரம் பிரித்து 'ஒருவனாக்க' என்ன வழி? புனை பெயர்தான்!

சிறந்த சிந்தனையாளரான திரு. கே. எஸ். வெங்கடரமணி அவர்களின் எழுத்துக்களில், மாயவரத்துப் பள்ளியில் படித்த என் இளமை நாட்களிலேயே நான் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தேன். அவருடைய கதாபாத்திரம் ஒன்றின் பெயரான 'ஜடாதரன்' என்பதைத்தான் நான் என் புனைபெயராக மிகவும் மகிழ்ச்சியுடன் தேர்ந்தெடுத்தேன்.

'ஜடாதரன்' என்ற புனைபெயரில் 21—4—51 'கல்கி' இதழில் வெளியான 'அன்பு மலர்ந்தது' என்ற கதை என் புனைபெயரை குறிப்பிட்ட சில அந்தஸ்துள்ள குடும்பங்களில் பிராபல்யம் செய்வித்தது. காரணம்— அந்தக் கதையின் மையக் கருத்து, என் பால்ய சிநேகிதன் ஒருவனுடைய குடும்பச் சூழ்நிலையை நன்கு தெரிந்துகொண்டிருந்த ஏராளமான நண்பர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஒருவருடைய மகிழ்ச்சி இன்னொருவருக்கு துக்கமாய் இருப்பதை நாம் கண்டிருக்கிறோமல்லவா? அது வேறு விஷயம்....!

அவ்வப்போது 'பளிச்' சென்று எனக்குத் தோன்றும் சில கருத்துக்களை மாத்திரம் கதைகளாக்கி விட்டு 'சும்மா' யிருக்கிறவன் நான். என்னுடைய இலக்கிய நண்பர்களில் மிக அத்யந்தமான சிலருக்கு நான் நிறைய எழுதவில்லை என்று பெருங் குறை. எழுத்துக்களுக்கு ஓர் உயர்ந்த லட்சியம் இருக்கவேண்டும் என்று நினைக்கிறவன் நான். வாசகர்களுக்குக்கொஞ்சங்கூட ஏமாற்றம் தரக் கூடாத வகையில் கதைகளை எழுதி நல்ல பெயரைத் தட்டிக் கொண்டு போகவேண்டும் என்று எண்ணி எழுத முயற்சி செய்பவன் நான்.

ஆனால், என்னையும் என் எழுத்தையும் பிடிக்காத சிலர், ''இவன் யாரடா சனியன், அப்படி என்ன பிரமாதமாய் எழுதிக் கிழித்து விடுகிறான்?'' என்று சொன்னாலும் சொல்வார்கள்.

ஆம்; சாட்சாத் சனீஸ்வர பகவானுக்கு 'ஜடாதரன்' என்ற ஒரு பெயரும் உண்டு. ★

சொக்கு பலே கைகாரி! — அவளுக்கு இரண்டு பேர் போட்டி. இரண்டு கல்—ஒரே மாங்காய்! கடைசியில், அவளுடைய கழுத்தில் மஞ்சள் கயிறு ஏற்றம் புரிகிறது. சொக்குப் பொடி போட்டிருப்பாளோ?—அதுதான் இல்லை....!

காதலின் கண்கள்

கி. ரா. கோபாலன்

1. வடதுருவமும் தென்துருவமும்

சில நாட்களாகத் தன் தாய்க்கும் தகப்பனுக்கும் ஏற்பட்டுள்ள தகராறு சொக்குவுக்கு நன்ருகத் தெரியும். அந்தத் தகராறு ஏன் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது என்பதையும் அவள் அறியாமலில்லை. இவ்வளவு நாட்களும் எவ்வித பூசலும் இல்லாமல் வாழ்ந்து வந்த அவளுடைய பெற்ருேர்கள் இப்போது சண்டை சச்சரவுகளில் ஈடுபடக் காரணமாய் நிற்பவள் அவளே என்பதையும் அவள் அறிவாள்.

சித்தய்யனின் குணம் அலாதி. அவன் எப்பொழுதும் தன் குலத் தொழில் மீது மிகுந்த பற்றுள்ளவன். எப்பொழும் அதைச் சொல்லிப் பெருமைப் படுவது அவன் சுபாவம். கடலில் சென்று மீன் பிடித்து வாழும் தன் குலத் தொழிலை விட்டு வேறு எத் தொழிலுக்கு யார் போனுலும் அவர்களைப் பரிகாசம் செய்வான். 'சொந்தத் தொழிலைச் செய்து வாழத் தெரியாதவன்.... பயங்கொள்ளி' என்றெல்லாம் அவர்களுக்குப் பட்டப்பெயர் கொடுத்து நையாண்டி செய்வான். இப்படிப் பட்ட சுபாவம் நிறைந்தவன் தன் மகளை வேறு தொழில் செய்கிறவனுக்குக் கொடுக்க நினைப்பானு? பொன்னம்மா குலத் தொழிலாகிய மீன் பிடிக்கும் தொழிலைக் கேவலமாக நினைக்கிருள் என்பதை அவன் அறிந்த பொழுது, தன் அப்பனை—பாட்டனை — எல்லோரையும் அவள் கேவலப் படுத்துவது போலத்தான் அவனுக்குத் தோன்றியது. அவனுக்கு எப்படிக் கோபம் வராமல் இருக்கும்?

சுயம்வரத்திற்குப் பரீட்சை செய்து ஒரு வீரவாலிபனைத்தேர்ந்தெடுப்பது போல் செல்லமுத்துவைத் தன் மகளுக்காகத் தேர்ந்தெடுத்திருந்தான் சித்தய்யன். மனத்தில் கொண்ட அபிப்பிராயத்தைத் தன் மனைவி மறுத்த போதுதான், அவனுக்கு எல்லை மீறிய கோபம் ஏற்பட்டது.

செல்லமுத்துவைப் போல் அந்தக் குப்பத்திலேயே மதிப்புப் பெற்றவன் குமரவேலு. மீன் பிடிப்பதல்ல அவன் பிழைப்பு....! அவன் ஒரு பாங்கியில் தபால் கொண்டு போய்க் கொடுக்கும் சேவகனுக இருந்தான். அவன் அடிக்கடி குப்பத்திலுள்ள வாலிபர்களிடமெல்லாம் தன் ஆபீஸைப் பற்றியும், மானேஜர், காஷியர் முதலியவர்களைப் பற்றியும் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் போது மற்றவர்களுக்கெல்லாம் சிறிது பிரமிப்பாகவேதான் இருக்கும். பொன்னம்மாவுக்கு இத்தகைய செய்திகள் எட்டாமலிருக்க முடியுமா? இத்தகைய பெருமைகள் நிறைந்த குமரவேலுவுக்கே தன் மகள் சொக்குவைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் அவளுடைய பிடிவாதமான ஆசை.

செல்லமுத்து, குமரவேலு இரண்டு பேர்களையும் சொக்கு வுக்கு நன்கு தெரியும். இவர்களிடையே யார் உயர்ந்தவர், யார் தாழ்ந்தவர் என்று வித்தியாசப் படுத்திப் பார்க்க அவளால் முடியவில்லை. அவர்கள் இருவரோடும் அதிகமாகப் பழகி இருந்தாலும், ஏதாவது வித்தியாசம் தெரிந்து கொள்ளலாம். அதற்கும் வாய்ப்பு இல்லை. தாயாரின் அபிப்பிராயப்படி பார்த்தால், குமரவேலு சிறந்தவனாக அவளுக்குத் தோன்றியது. தகப்பனாரின் அபிப்பிராயப்படி பார்த்தால், செல்லமுத்து சிறந்தவனாக அவளுக்குத் தோன்றியது. எப்படியோ இவ்விருவரில் ஒருவரை அவள் கல்யாணம் செய்து கொள்ள எப்பொழுதுமே சித்தமாக இருந்தாள். தாயும் தகப்பனும் ஒருமனப்பட்டு வரும் நாளைத்தான் அவள் எதிர்நோக்கி இருந்தாள். சொக்குவின் தாயும் தகப்பனும் அவளைத் தங்கள் திட்டத்திற்கு இணங்கிய முறையில் வசப்படுத்த நினைத்தனர். ஆனால் அவள் மாத்திரம் இருவருடைய வார்த்தைகளுக்கும் கட்டுப் படுகிறவள் போல் இருந்தாளே தவிர, ஒருவருக்கு ஆதாரமாகவோ, ஒருவருக்கு எதிர்ப்பாகவோ இல்லை. சொக்குவின் நடுநிலைமை சித்தய்யனையும் பொன்னம்மாவையும் தர்மசங்கடமான நிலைக்குக் கொண்டுபோய் விட்டது. அவர்களுடைய அபிப்பிராய பேதத்திற்கும் சச்சரவிற்கும் ஒரு முடிவு இல்லாமல் இருந்தது.

2. சாயா — இரண்டு!

ஒரு கல்யாணம் செய்து வைப்பதற்கு ஆயிரம் பொய்கள் மாத்திரம் போதாது; ஆயிரம் யுக்திகளும் தான் தேவை!

சித்தய்யன் ஒரு யுக்தி செய்தான். செல்லமுத்துவை தன் வீட்டிற்கு அழைத்து வந்து சொக்குவோடு பரிச்சயப்படுத்தி விட்டால், அவர்களுடைய பழக்கத்தினால் அன்பு ஏற்பட்டு செல்லமுத்துவையே கல்யாணம் செய்து கொள்ள சொக்கு ஆசைப்படலாமல்லவா?

ஒரு நாள் செல்லமுத்துவைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்தான், சித்தய்யன். செல்லமுத்துவுக்கும் சொக்குவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற ஆசை இருந்தது. ஆனால் சித்தய்யனுக்கும் அவன் மனைவிக்கும் இவ்விஷயத்தில் மனவேறுபாடு இருக்கிறதென்பதையும் அவன் தெரிந்து கொண்டிருந்தான். பொன்னம்மா குப்பத்திலுள்ள பெண்களிடமெல்லாம் தன் மகளை யாருக்குக் கொடுக்கப் போகிறாள் என்பதைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டு வருவதையும் அவன் நன்கு அறிவான். இப்படிக் குடும்பத்தில் புருஷனுக்கும் மனைவிக்கும் உள்ளுக்குள்ளே பூசல் ஏற்பட்டிருப்பதனால் தன் ஆவலைப் பகிரங்கமாக வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"சொக்கு, இதோ பாரு! நம்ம செல்லமுத்துக்கு நல்ல சாயாவாக் கொண்டா. இவரோடு பேசிப்பழக வெட்கப் படாதே — இன்னிக்கி இப்படித்தான் இருக்கும். இன்னும் கொஞ்ச நாளில் நீங்க புருசன் பெண்சாதியாகப் போற வங்கதானே....?" என்று சொல்லி 'இடி இடி' யென்று சிரித்து விட்டு செல்லமுத்துவைப் பார்த்தான் சித்தய்யன்.

செல்லமுத்துவின் உதடுகளில் ஆனந்த விளையாடியது.

"தம்பி, நம்ம சொக்கு வைக்கிற சாயாவே தனி தான்....அடடே, மறந்தே போயிட்டேனே? நான் கொஞ்சம் மூலை வீட்டு மாணிக்கத்தைப் பார்த்துவிட்டு வாரேன். நீ சாயாவைக் குடிச்சுப்பிட்டு சொக்குவோடே பேசிக் கிட்டிரு... நான் வந்துட்றேன்," என்று சொல்லிவிட்டு செல்லமுத்துவின் பதிலைக்கூட எதிர்பாராதவனாக வேகமாக வெளியே சென்றான்.

செல்லமுத்துவிற்கு தர்ம சங்கட மாக இருந்தது. அவனுக்கு அங்கு உட்கார மனமே இல்லை.

அந்தச் சமயத்தில், சித்தய்ய னின் மனைவி பொன்னம்மா உள்ளே வந்தாள். அவளைத் தொடர்ந்து குமர வேலு காக்கி நிஜா ரும் சட்டையுமாக வந்தான். "சொக்கு, அத்தான் வந்திருக்கு நல்ல சாயாவாப் போடு," என்று சொல்லிக்கொண்டே வந்தாள் பொன் னம்மா. சமைய லறையிலிருந்த சொக்கு வெளியே வந்து பார்த்ததும் பிரமித்து விட்டாள். தாய்க்கும் தகப்ப னுக்கும் ஏற்பட்ட மன வேறுபாடு, இவ் வளவு தூரம் இப்படிப் பட்ட விபரீத விளைவு களை உண்டாக்கும் என்று அவள் எப் படி நினைத்திருக்க முடியும்?

செல்லமுத்துவும் குமரவேலுவும் ஒரு வரையொருவர் பார்த்துக் கொண் டார்கள். எந்த விதக்

சங்கீத யோகம்!

குறிப்பும் காணக் கிடக்க வில்லை.

இரண்டு தம்ளர்களிலே 'சாயா' கொணர்ந்தாள் – சொக்கு.

''நான் போயிட்டு வர்ரேன்...'' என்றான் குமரவேலு.

''மாமாகிட்டே சொல்லிப்பிடு,'' என்றான் செல்லமுத்து.

சொக்கு 'சரி' என்று சொல்லி விட்டுத் தலையை உள்ளே இழுத்துக் கொண்டாள்.

3. அவள் முடிவு ...?

''இந்த ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் செய்கிற விஷயத்தில் புருஷன் பெண்சாதி செய்துக்கிற தகராறிலே நம்ம பாடு பெரும் பாடாகிவிடும் போலிருக்குது...!''

''குமாரவேலு, இதிலே நாம்' சொக்குவை மறந்துவிடக்கூடாது. அவள் ரொம்பவும் சாமர்த்தியக் காரப்பொண்ணு...அவள்ஏதாவது ஒருமுடிவு செய்து வைத்திருப்பா. இந்தத் தகராறை இப்படியே நீடிக்க விடமாட்டா ....''

''அப்படித்தான் நானும் நினைக்கிறேன்...ஆகையினாலே நாம் ரெண்டுபேரும் பேசாமல் பொறுத்திருந்து பார்ப்பதுதான் நல்லது.''

''ஆமாம், நீ இனிமேல் அத்தை கூப்பிட்டாங்கன்னு அந்த வீட்டுக்குப் போகாதே.''

''செல்லமுத்து, நீயும் மாமா கூப்பிட்டாருன்னு அடிக்கொரு தரம் போய் நிற்காதே....!''

4. தங்கமே, தங்கம்!

''எனக்கு புருசன் தேடும் விஷயத்தில் நீங்க இப்படிச் சண்டை போட்டுக்க வேண்டாம். நீங்க ரெண்டு பேரும் உங்க பிடிவாதத்தை நிறைவேற்றப் பார்க்கிறீங்களே தவிர, நான் என்ன ஆசை வைச்சிருக்கேன் என்பதைப் பற்றிக் கவலைப் படுறீங்களா? எனக்கு யாரைக் கல்யாணம் செஞ்சுக்க இஷ்டங்கிறதை பின்னாடி சொல்றேன். அதுவரையில் எதுவும் பேசாம இருங்க,'' என்றாள் சொக்கு.

அவள் வார்த்தைகளில் கண்டிப்பு இருந்தது. தன் விஷயத்தில் அவளுக்கு உள்ள கவலை, அக்கறை எல்லாம் குரல் தந்தன.

''தங்கம், எல்லாம் கல்யாணத் தொல்லைதான். அப்பா ஒரு வழி சொல்லுரு. அம்மா ஒரு வழி சொல்லுது. எனக்குத்தான் எந்த வழி போறதுன்னு தெரியல்லே!'' என்றாள் சொக்கு ஆருத்துயரத் தோடு.

''இந்த ரெண்டு பேரில் உனக்கு யாராவது ஒருவரைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதம் தானே?''

''சம்மதம் தான்!''

''நானும் உன்னைப் போல் சீக்கிரம் கல்யாணம் செய்துகிட்டு சந்தோஷமா யிருக்கணும்னு, உனக்கேற்ற புருஷன் செல்லமுத்துதான்னு தீர்மானிச்சுக்கோ'' என்றாள் தங்கம்.

தங்கம் எப்போதும் புதிர்போடுவதுபோல் தான் வேசுவாள். ஆனல், இப்பொழுது தங்கம் போட்ட புதிர் அவளுக்கு மிக எளிதாக விளங்கி விட்டது. ''சரி! அப்படியா சங்கதி? எனக்குப் புரிஞ்சு போச்சு .... உனக்கு குமரவேலு

வைக் கல்யாணம் செய்துக்க ணும்னு ஆசையா? நான் அதற்கு கொஞ்சம் இடையூரு யிருக்கி றேன் போலிருக்குது. நான்செல்ல முத்துவைக் கல்யாணம் செய்துக் கத் தீர்மானிச்சிட்டா, நீ குமர வேலுவைக் கல்யாணம் செய்துக் கலாம்னு நினைக்கிறே, இல் லையா...?'' என்ருள் சொக்கு.

''ஆமாம் அப்படித்தான்....'' என்ருள் தங்கம்.

''இத்தனை நாளா இதை எங் கிட்டே நீஏன் சொல்லல்லே?'' என்ருள் சொக்கு.

''உன்னை அவருக்குத்தான் கல் யாணம் செய்து கொடுக்கப் போவதா சொல்லிக் கிட்டு இருந் தாங்களே உன் அம்மா? அப்படி இருக்கும் போது, போட்டியா நாங்க ஏதாவது சொல்ல முடியுமா? அதுவும் தவிர, உன் தாயார் ஏதேதோ ஆசை யெல் லாம் காட்டி அவருடைய சம்மதத் தையும் வாங்கி இருக்காங்கன்னு தெரிஞ்சுது. குப்பம் முழுதும் இதே பேச்சா யிருந்ததினலே, நாங்க எதையும் வெளிக் காட்டிக்க முடி யல்லே....''

''இதை நீ முன்னுடியே என்னி டம் சொல்லி இருந்தா, இவ்வளவு சிரமம் இருந்திருக்காதே? எனக் கும் எந்த வழி போகலாம்னு குழப்பமும் இருந்திருக்காது. வீட்டி லேயும் சண்டை சச்சரவு ஏற்பட்டி ருக்காது. நல்ல வேளை, இப்போ தாவது ஒரு வழி பிறந்திச்சே? நீ கவலைப் படாதே. முதலில் உனக் கும் குமரவேலு அத்தானுக்கும் கல்யாணம் நடந்த பிறகுதான் நான் கல்யாணம் செய்துக்கப் போறேன்,'' என்ருள் சொக்கு.

''செல்ல முத்துவைத்தானே?'' என்ருள் தங்கம், பரிகாசமாகச் சிரித்துக் கொண்டே.

''வேறு யாராம்? இந்தக் குப்பத் திலேயே சல்லடைபோட்டுச் சலித் தாலும் இரண்டு பேர்தான் தகுந்த மாப்பிள்ளை! அதிலே ஒருத்தர் உனக்குத் தகுந்தவர்; இன்னெருத் தர் எனக்குத் தகுந்தவர்!''

மீசைக்காரர்: என்னய்யா, நீ ஒண்ணு! ரொம்பப் பிரமாதமாச் சொல் றியே ஒழிய, எனக்கு ஒண்ணும் வாச னையே தெரியலையே?

பரபரப்போடு வீட்டிற்குள் வந்த சொக்குவைக்கண்ட பொன்னம்மா ஏதோ புதுமையை அவளிடம் கண்டவள் போல, ''தங்கத்து வீட் டுக்கா போயிருந்தே? ஏதாவது விசேஷம் உண்டா...?'' என்ருள்.

''ஆமாம். ஒரு ரகசியம் தெரிஞ் சுக்கிட்டேன்....''

''என்ன, தங்கச்சி?''

''தங்கத்துக்கு குமரவேலுவைக் கல்யாணம் செய்துக்கணும்னு ஆசை!''

பொன்னம்மா இதைக் கேட்ட தும் திகைப்படைந்தாள்.

''ஏம்மா, உனக்கு இவ்வளவு கோபம்? அவள் ஆசை வைக்கக் கூடாதா? அதை ஏன் நீ கெடுக்க நினைக்கிறே? அவளுக்கு ஆசை இருந்தா, அவள் தாராளமாய் கல் யாணம் செய்து கிடட்டுமே...?''

''தாராளமாய் கல்யாணம் செய்துக்கிடட்டுமா?.... அப்புறம் உனக்காக இவ்வளவு தூரம் நான் பிரயாசைப் பட்டதெல்லாம் என்ன ஆகிறதாம்?''

''அம்மா, இன்னெரு உண்மை யையும் சொல்லிப்பிட்றேன்.... எனக்கு அவருமேல் ஆசை இல்லை!''

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 2—8—0

பீதாம்பர ஜாலத்திரட்டு
(MAGIC BOOK)

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபாய் 2—4—0

VANI BOOK DEPOT (U)
Post Box No 239. MADRAS-I.

"உனக்கு ஆசை இல்லையா? நான் கேட்ட போதெல்லாம் அவரைக் கல்யாணம் செய்துக்க இஷ்டப்படுறது போல் சொன்னியே?"

"அப்பொழுதெல்லாம் தங்கம் அவருமேலே ஆசை வைச்சிருக்கான்னு எனக்குத் தெரியாது. அவ ஆசையைத் தெரிஞ்சுக்கிட்டப்புறம், அவரைக் கல்யாணம் செய்துக்கணுங்கிற எண்ணம் எனக்கு உண்டாகல்லே!...."

"ம்! அப்பாலே?...."

"எனக்கு அவரைக் கல்யாணம் செய்துக்கிறதிலே இச்சை இல்லேன்னு தெரிஞ்சு போயிட்டா, அப்புறம் நிச்சயம் அவரு அவளைத் தான் கலியாணம் செய்துக்க நேரும். இந்தக் குப்பத்திலே அவளைத் தவிர வேறு நல்ல அழகான பொண்ணு யாரு இருக்காளாம்?"

"அவளுக்காக அவரை நீ கல்யாணம் செய்துக்க இஷ்டப்படலேன்னு சொல்றீயா?"

"அவளுக்காக இல்லே அம்மா— எனக்காகத்தான். ஒருத்தி இச்சைப் பட்டவங்கமேலே இச்சை வைக்க எனக்குப் பிடிக்கல்லே! செல்லமுத்துவைக் கல்யாணம் செய்துக்கத்தான் ஆசை!"

அந்தச் சம்பவம் அவள் நினைவுக்குள் ஓடியது. ஒரு நாள் கொத்துவேலை நடந்த தெருவில் அவள் நடந்தபோது, வழியில் செல்லமுத்து பார்த்த பார்வையை—அந்த முதல் பார்வையை—அவள் வாழ்நாள் பூராவும் மறக்க மாட்டாளே ...?

"ம், கடைசியிலே கட்டுமரத்தைத் தள்ளி விட்டு கடலிலே போறவனுக்குத்தான் கழுத்தை நீட்டணும்னு தலைஎழுத்து போலிருக்குது ...?"

"குலத்தொழில் செய்கிறவங்களைக் கலியாணம் செய்து கொண்டா ஏதாவது குறையா? அம்மா, நீயெல்லாம் அப்படிப் பட்டவருக்கு வாழ்க்கைப் பட்டு சந்தோஷமா குடியும் குடித்தனமுமா இருக்கல்லையா? தாயைப் போல் பெண் என்கிற மாதிரி உன்னைப் போலத்தான் நானும் இருக்க விரும்புறேன்."

"சொக்கு, நீ சொல்றது அத்தனையும் நெஜந்தான்! இப்பதான் எனக்குப் புரிஞ்சிது!"

"பலே!....என்னோட தந்திரமும் பலிச்சிட்டுது. என் பொன்னம்மாவோட பிடிவாதமும் தளர்ந்திடுச்சு. சொக்கு, நீ உன் அம்மாவுக்கு நல்ல பாடம் சொல்லித் தந்திட்டே?.... அவங்க அவங்களுக்கு ஆண்டவன் விதிச்ச குலவாழ்க்கைதான் உசிரு. நமக்கு உள்ளது கடலும் தோணியும்! உள்ளதைக் கொண்டு திருப்தி அடையவேண்டியதுதான் நம்ப கடமை... சொக்கு!....தங்கம் உனக்குத் தோழி! எனக்கு அது தெய்வம் மாதிரி.... அது இல்லாப் போனா, என் நாடகம் இவ்வளவு தூரம் சிறப்பா முடிஞ்சிருக்காது! காதலுக்குக் கண் உண்டு என்கிறது உண்மைதான்!...." ★

மரகதச் சிலையின் மர்மம்



1. மோகனும் கமலாவும் காப்டன் கணபதியின் அருமைக் குழந்தைகள். கணபதி துறைமுகக் காரியாலயத்தில் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவர். பணக்காரர். கடற்கரையை ஒட்டினாற்போல இருந்தது அவர் பங்களா. மோகனும் கமலாவும் சூட்டிகையான குழந்தைகள். அன்று காலையிலிருந்தே நல்ல மழை.

2. ஆகவே, மாலைப் பொழுதைக் கழிக்கக் குழந்தைகள் மாடிக்குப் போனார்கள்.

3. மோகனின் மாமா அவன் பிறந்த தினப் பரிசாக ஒரு தூரதரிசினிக்கருவியை அனுப்பியிருந்தார். பொழுது போகாத போது கடலில் கட்டுமரங்கள் மிதந்து வரும் அழகை அதன் மூலம் மோகன் பார்ப்பது வழக்கம். அன்றும் அதே போலப் பார்த்தான்.

4. பார்த்தபோது, ஓர் அதிசயமான காட்சியைத் தூரதரிசினி மோகனுக்குக் காட்டிற்று.

5. சந்தடியற்ற துறைமுகத்தில் இரண்டு உருவங்கள் கட்டிப் புரண்டு சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கமலாவும் பார்த்தாள்.

6. மோகன் தவிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ஓர் உருவத்தை மற்றொரு உருவம் கடலில் தூக்கி வீசியது! (தொடரும்)

★ ஐந்து நிமிடச்

சித்திரங்கள் :

பெனடிக்ட்

★

ஓவியர் திரு பெனடிக்ட் தொடர்ந்து எழுதும் ஐந்து நிமிடச் சித்திரங்களிலே தமிழகத்துப் பெரியார்கள், அறிஞர்கள், திரையுலக நட்சத்திரங்கள் முதலியோர்களை நீங்கள் சந்திப்பீர்கள்.



சித்திரங்கள் ★

கலை — உலகிலே பல உண்டு. சிற்பியின் சிந்தனை உளியிலே செதுக்கப்படும் சிலை, சிற்பக்கலை. நாட்டின் நடை, உடை, பாவனைகளை அவயவங்களால் அழகு படுத்திக் காட்டுவது நாட்டியக்கலை. ஆசை அலைகள் பொங்கி ஆனந்த சாகரத்தில் மூழ்க வைப்பது இசைக்கலை. ஆக அறுபத்து நான்கு கலைகளில் தான் உலகின் உயிர் ஓட்டம் ஓடிக் கொண்டிருக்கிறது.

'உலகம்' என்ற நீலத்திரை வானிலே 'கலை' என்ற தாரகைத் தோரணங்களின் இடையே பவனி வரும் 'ஓவியக் கலை' என்ற முழுநிலாவின் ஜீவ ஒளியை நாம் மறக்க முடியாது.

ஓவியம்! — காவியத்தின் தாய். கலைஞனின் தந்தை. கவிஞனின் குரு. மொழி வேற்றுமையால் கலையைப் பழிப்பவர்கள், தன் தாயைக் கொலை செய்பவர்கள் என்பது என் எண்ணம்.

தமிழ் — சிங்களம் சிநேகத்திற்கு ஓவியக் கலையால் ஒற்றுமை உண்டாக்க முன்னிற்கும் நண்பர் பெனடிக்ட் அவர்களின் ஓவியம் என் இதயத்தை ஆழக் கவர்ந்தது. அவர் வாழ்க! ஓவியக்கலை வாழ்க!

கே. ஏ. தங்கவேலு ★

பாப்பா உமா

தயாரிப்பு : 'வாண்டுமாமா'

சித்திரம் 'வாசுகி'

முடியுமா?



இதோ, உங்கள் நண்பர்களைத் திகைக்க வைக்கும் ஒரு வேடிக்கைக் கணக்கு. ஒரு வட்டமான அட்டையை உங்கள் நண்பர்களிடம் கொடுத்து, இதை எப்படியாவது வெட்டிச் சேதமாக்காமல் இரண்டு கோழி முட்டை வடிவமுள்ள துண்டுகளாக அமைத்துக் காட்ட முடியுமா என்று கேளுங்கள். உங்கள் நண்பர்கள் என்ன, அப்பா, அண்ணா, மாமா யாராலுமே இதைச் செய்ய முடியாது. நான் உங்களுக்கு மட்டும் சொல்லித் தருகிறேன். வட்டமான அட்டைக்குள் இன்னொரு வட்டம் வரையுங்கள். பிறகு வட்ட மையத்தின் வழியே குறுக்கும் நெடுக்குமாக அட்டை நான்கு சம பாகங்களாகும்படி கோடு கிழியுங்கள். இப்போது – படத்தில் காட்டியது போல வட்ட வடிவமான அட்டை எட்டு பாகங்களாக இருக்கும். அதை எட்டுத் துண்டுகளாக வெட்டி எடுத்து, படம் 2-ல் காட்டியுள்ளபடி 1, 5, 2, 6 இலக்கமிட்ட துண்டுகளையும், 3, 7, 4, 8 இலக்கமிட்ட துண்டுகளை படம் 3-ல் காட்டியது போலவும் ஒன்று சேர்த்தால் இரு கோழி முட்டை வடிவமான துண்டுகள் வந்துவிடும். ஆமாம்; செய்து பாருங்களேன்!

பஞ்சதந்திரம்

ஆர். ஸி. மணி

உங்களுக்குத் தெரிந்திருக்குமே!—ஒரு காடு. அதுதான் பெரிய ராஜ்யம் போல. அதற்கு ஒரு ராஜா. அதுதான் சிங்கம். ராஜா என்றால், மந்திரிகள் வேண்டுமல்லவா? ஒன்றல்ல, மூன்று! பெயர்கள் தானே?—காகம், நரி, புலி.

ஒருநாள் ஒட்டகம் ஒன்று அங்கே வந்து சேர்ந்தது—ஆமாம்; வழி தெரிந்து தான். வந்த சூட்டுடன் ஒரு மந்திரி பதவியும் கிடைத்தது. மூன்று பிராணிகளுக்கும் கோபம் கோபமாக வந்துவிட்டது. ஒட்டகத்தை வஞ்சம் தீர்க்கக் காத்திருந்தன.

அன்றைக்கு சிங்கமகாராஜாவுக்கு இரை கிடைக்கவில்லை. இரை கொணரும் பொறுப்பு மந்திரிகளுடையதாம்—இது அரண்மனை உத்தரவு.

''இதோ பாருங்கள்! என் சூழ்ச்சியால் சிங்கராஜாவுக்கு அந்தப் பாழாய்ப்போன ஒட்டகத்தையே இரையாக்கி விடுகிறேன்!'' என்று சபதம் செய்தது காகம். உடனே பறந்தது.

சிங்கத்திடம் பயபக்தியுடன் நெருங்கி, ''வேந்தே!...எங்குமே இரை கிடைக்கவில்லை. ஆகவே, என்னையே கொன்று தின்று தங்கள் பசியைப் போக்கி கொள்ளுங்கள்!'' என்றது காகம்.

''எனக்குப் பற்றாது!'' என்று சொல்லி விட்டது சிங்கம். அவ்வாறே நரியையும் புலியையும் ஒதுக்கிவிட்டது.

எல்லோரையும் போல ''என்னைக் கொன்று தின்று விடுங்கள், பிரபு!'' என்று சொல்லி நிறுத்தியதுதான் தாமதம்—பாவம், அந்த ஒட்டகத்தின் உயிர் பறந்து போய் விட்டது!

வஞ்சனை மிகுந்த கெட்டவர்கள் குற்றம் புரியாத நண்பராய் இருந்தால்கூடத் தீமையே செய்வார்கள்! ★

மதிப்புரை

நல்வாழ்வு

யோகாசனப் பயிற்சி முறைகளைத் தமிழ் எழுத்துலகுக்கு அறிமுகப் படுத்திய பெருமை அமரர் திரு வி. என். குமாரசாமி அவர்களைச் சாரும். அன்னார் விட்டுச் சென்ற பணியை இப்பொழுது அவரது துணைவியார் திருமதி சீதாலக்ஷ்மி அவர்கள் தொடர்ந்திருக்கின்றார், 'நல் வாழ்வு' மூலம். உடல் இயல் துறையில் தமிழில் சஞ்சிகைகள் மிகமிகக் குறைவு. 'நல் வாழ்வு' அக்குறையை நிறை செய்கிறது. ஆரம்ப இதழில் திருவாளர்கள் தூரன், எம். எஸ். சுப்பிரமணிய ஐயர், யோகி பாரதியார், ராஜு செட்டியார், ஆசிரியர் சீதாலக்ஷ்மி ஆகியோர்களின் எழுத்துக்கள் தரம் உயர்ந்து விளங்குகின்றன. சகோதரப் பத்திரிகைக்குப் பெருமையுடன் வரவேற்புக் கூறுகின்றோம்.

ஆசிரியர்: சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி, சென்னை-21. **விலை அணா 8.**

சுதந்திரம்

தமிழ்ப் புத்தாண்டில் சுதந்தரப் பூமியில் மலர்ந்த வார இதழ் இது. பாலபாரதியின் தேன் சுவைக் கவியோடு ஏடுகள் விரிகின்றன. 'எங்கள் லட்சியம்' என்ற தலையங்கத்தில், ''நம் நாட்டில் ஜனநாயகத்தை வளர்க்க உதயமாகிறது 'சுதந்திரம்' என்ற வரிகள் பளிச்சிடுகின்றன. 'சுதந்திரக்கனல்', 'அந்த நாளில்', 'தலைவர் – துதிக் கொள்கை' போன்ற பகுதிகள் சிறந்து விளங்குகின்றன. மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

நிர்வாக ஆசிரியர்: எச். டி. ராஜா; **ஆசிரியர்:** கே. அருணசலம், சென்னை-4. **விலை 3 அணா.**

குணேகா

மரிக்கொழுந்து

மற்றும் செண்டு வகைகள்

மணத்திற் சிறந்தவை

மகிழ்வளிப்பவை

இதரவகை செண்டுகள்

ஈஸ்டர்ன் ட்ரீம்ஸ்	கஸ்
கதம்பம்	மீனு
மல்லிகை	மகிழம்
ரோஜா	நார்சிஸ்
சம்பங்கி	கல்யாண்
மனோரஞ்சிதம்	மரு
கஸ்தூரிமல்லி	மஸ்க்
க்யூரா	தெல்மியா

ரூ. 1-8-0 மணியார்டர் அனுப்பி 4 ரகசாம்பிள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். வெளி நாடுகளுக்கு வி. பி. யில் ரூ. 2க்கு அனுப்பப்படும்

குணேகா

வாசனைதி தயாரிப்பாளர்கள்
53. லாட்டீஸ் பிரிட்ஜ் ரோடு
அடையார், மதரூஸ்-20

(நீபா ஹேர் ஆயில் முதலியவைகள் தயாரிக்கும் கங்கா ஓர்க்ஸ் உடன் இணைக்கப் பட்டுள்ளது)

துரிதமாக விற்பனையாகிறது !

பூவை எஸ். ஆறுமுகம்

எழுதிய சிறந்த நாவல்

வசந்த பைரவி

விலை அணு எட்டு

○

★ விற்பனையாளர்கள் தேவைப் படும் பிரதிகளுக்கு 25% கழிவு நீக்கி முன்பணம் அனுப்ப வேண்டும்; தனிப்பிரதிக்கு பத்தணு தபால் தலைகள் அனுப்புதல் அவசியம்.

★ நேயர்களின் உண்மையான— சிறந்த விமரிசனத்திற்குப் பத்து ரூபாய் சம்மானம் உண்டு.

○

விவரங்களுக்கு :

‘உமா வெளியீடு’

தபால் பெட்டி எண் 1377,

4/32, தாதா முத்தியப்பன் தெரு,

சென்னை-1.

புத்தாண்டில் பொதுமக்களுக்கும்
எமது ஏஜண்டுகளுக்கும்
நல் வாழ்த்து

சிட்டி ஏஜண்டு:

பி. டி. சண்முக சுந்தரம்

215, வால்டாக்ஸ் ரோட்,

சென்னை-3.

THE IDEAL PRESCRIPTION

Rx Linum 2% Cetrar 0.875%;
Chond. 0.625%; Anthem 0.375%; Oleum
Allii Essentiale 0.013%; Ol. Menth Pip
0.078%; Ol. Anis; 0.041%; Succus
Glycyrrhizae 1.75%; Saccharum
Ustum 0.125%; Sucros 1.875%
Aq. ad, 100

Liqufruta

THE HERBAL COUGH MEDICINE

As a medical practitioner you will readily appreciate the balanced formula for LIQUFRUTA. Scientifically prepared from eight of Nature's healing herbs this unique remedy is indicated in the treatment of bronchitis, bronchial congestions, catarrh, whooping cough and all forms of children's coughs.

Why write a lengthy prescription when one word—LIQUFRUTA—gives patients the safe, certain remedy ? **We are ready to send you a generous FREE SAMPLE of LIQUFRUTA. Just send a postcard to :—**

M/S T.T. KRISHNAMACHARI & CO.

P.O. BOX 200, MADRAS, 1

எழுதியவர்: ராகுலன்

கண்ணைக்கட்டி நில்லு!

"பார் அண்ணு! இந்த மீனுவின் கண்ணைக் கர்ச்சிபாலே கட்டிவிடு, அண்ணு. இவதான் மாட்டேன்கிரு. கண்ணும்மூச்சி என்ருல் பின்னே எப்படியாம்?" என்று கத்திஞள் லலிதா.

"ஏனடி, நீதான் கண்ணைக் கட்டிக் கோயேன்," என்ருள் மீனு.

"நீ கட்டிக் கொண்டால் என்னவாம்?" என்று தமாஷாய் மீனுவைக் கேட்டான் சாம்பசிவம். எல்லோரும் இதற்கு மட்டும் சாம்பசிவத்தின் பக்கம் சேர்ந்து கொண்டு விட்டார்கள்.

"அப்ப நீங்களும் வந்தாத்தான். ஒரே அடியிலே உங்களைப் பிடிச்சிடுவேனே?" என்ருள் மீனு.

அவளுடைய சவாலுக்கு சாம்பசிவம் பதில் சொல்ல வேண்டியதாய்ப் போய்விட்டது. மீனு சிரித்துக் கொண்டே கைக்குட்டையால் கண்ணைக் கட்டிக் கொண்டாள். சாம்பசிவம் புஸ்தகத்தை 'டீபாயி'ல் எறிந்து விட்டு அவர்களுடன் நின்று கொண்டான்.

என்ன சூட்சுமம்! இந்தப் பெண் குழந்தைகளுக்கே ஒரு தனிப் புலனறிவு இருக்கிறது போலும்! ஓடி ஓடிவந்த மீனு நொடியில் அடையாளம் கண்டு, குறிப்பாக சாம்பசிவத்தையே 'அவுட்' பண்ணி விட்டாள்.

சாம்பசிவத்துக்கு அவமானமாகப் போய் விட்டது. பாவம்....!

"இப்ப நீங்க கண்ணைக் கட்டிக்கணுமே?" என்று பலமாகக் கையைத் தட்டிஞள் மீனு.

வேறு வழியில்லாமல் கையால் கட்டிக் கண்ணை மறைத்துக்கொண்டான் சாம்பசிவம்.

எல்லாப் பெண்களும், 'ஓ, ரெடி!' என்று கத்திஞர்கள்.

"ஒன்–டு–த்ரீ...."

ஏதோ ரயில் போலக் கீச்சுக் குரலில் கூவிஞள் ஒருத்தி.

"இதோ இருக்கேனே?–"என்று கத்திஞள் மீனு. அவளுடைய கணீரென்ற தெளிவான குரல் துல்லியமாகத் தெரிந்தது. உடம்பெல்லாம் ஜிவ்வென்று ஒரு உத்வேகம். விளையாட்டுப் புத்தியில், "இதோ பாரு, நிமிஷத்தில் உன்னை அவுட் பண்ணிட்றேன்," என்ருன் சாம்பசிவம்.

"ஹும். பார்க்கலாம் அதையுந்தான்," என்ருள் மீனு.

சாம்சிவம் குரல் வந்த திசையில் குறிப்பாய்ப் போஞன். பல குழந்தைகள் குறுக்கும் நெடுக்குமாய்ப் பாய்ந்து மறுகியதை அவஞல் நன்கு உணர முடிந்தது.

'சடக்'–அகப்பட்ட ஒருத்தியைப் பிடித்துக் கொண்டு, "இதோ, இதோ!" என்று கைகளில் இறுகப் பற்றிய வண்ணம் கண் கட்டை அவிழ்த்துவிட்டான் சாம்பசிவம்.

"ஹோய்..." என்று இரைச்சல். அவன் கைகளில் மீனு இல்லை!

பருவம் கோலமிடும் அழகுக் கன்னியாய் அதற்குள் எப்படி மாறிஞள் மீனு? அதே முகம், அதே கண்கள், அதோடு புதிதாக

காதலென்று சொல்லு!

நினைத்து விட்டீர்கள் போலிருக்கிறது?''

''அப்படி இருந்தால் இன்றைக்குப் பூராவுமே புத்தகத்தையே தொட மாட்டேனே?'' என்று பதில் சொல்ல நினைத்தான் சாம்பசிவம். ஆனால் ஏதோ ஒன்று அப்படிச் சொல்ல இயலாமல் நாவைத் தடுத்தது.

''ஊஹூம், இல்லை.''

''என்ன அண்ணா அப்படிப் பார்க்கிறே? அது மீனாவோட அக்கா...'' என்று களுக்கென்று லலிதா சிரித்தவுடனேதான் தன்னுடைய தவற்றை உணர்ந்தான் சாம்பசிவம். அசட்டுத்தனமாய் எவ்வளவு நேரம் இப்படி விழித்துக் கொண்டே இருப்பது? சுத்த மோசம்!

நாணம் கலவையிட்டிருந்தது, பருவச் சோபையால்!

கைகளைச் 'சட்'டென்று அப்படியே விட்டு விட்டு, ''மன்னிக்க வேண்டும். ....நீங்கள், நீங்கள்.... உங்களுக்கு யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று கேட்டான் சாம்பசிவம்.

அவள் நாணத்தால் முகம் சிவக்க, ''மீனாவைக் கூப்பிட வந்தேன். நீங்கள் நின்று விளையாடுவதைக் கண்டதும் சிரிப்பு வந்து விட்டது. சிரித்து விட்டு அப்படியே வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்று விட்டேன்,'' என்றாள்.

''ஓஹோ, அப்படியென்றால் மீனாவின் அக்காவோ?''

''ஆமாம். என்னையும் விளையாட்டுக்காரிகளில் ஒருத்தி என்று

இப்படித்தான் சாம்பசிவம்—ஹேமா நட்பு ஆரம்பமாயிற்று; நட்பு அல்ல; காதல் ஆரம்பமாயிற்று. இதைக் காதல் என்றுதான் சாம்பசிவம் எண்ணிக் கொண்டான். ஒரு யௌவன வாலிபன் இளம் கன்னிப் பெண்ணின் துடுக்கையும், பேச்சையும், குறுகுறுப்பையும் வஸந்தத்தையும் கண்டு மயங்கியிருப்பதை வேறு எப்படிச் சொல்லுவது?

அவனைப் பொறுத்தவரையில் அப்பொழுதும் அது காதல்தான். இப்பொழுதும் காதல்தான். இனி என்றைக்கும், யுகயுகாந்தரத்துக்கும் கூட அது காதலேதான்!

இது சாம்பசிவத்தின் திடமான நம்பிக்கை. தன்னுடைய நம்பிக்கை ஒளிக்குக் குறுக்கே கறுப்புப் படுதாவோ, அல்லது ஒளி குறைக்கும் சாதனம் எதுவுமோ ஏற்படாது

என்று நிச்சயமாய் நம்பினுன். அதைத் தன்னளவிலே நிறைவேற்றவும் செய்தான். அதனுல் அந்தப் பொல்லாத ஹேமா—

எத்தனையோ சிரித்துப் பேசிப் பழகிய அந்த அழகுப் பொற்கொடி கடைசியில் வஞ்சித்து விட்டாளே? நேருக்கு நேராக, முகத்துக்கு முகமாக, "உங்களை நான் கலியாணம் செய்துகொள்வதாகச் சொன்னேனு?" என்று சுட்டித்தனமாய்க் கூறிவிட்டாளே?

"சொல்லவில்லைதான். தொடாத குறையாய் மனம் விட்டுப் பழகிய நோக்கம் என்ன? என்னுடைய விஷமப் பேச்சுக்களுக்கு எல்லாம் சாகஸமாய்ச் சிரித்துப்பேசி காதல் மகிழ்ச்சியூட்டினுயே, அதற்கெல்லாம் என்ன அர்த்தம்?"—இப்படிக் கேட்டான் சாம்பசிவம்.

"நினைத்தது உண்டுதான்; அந்த எண்ணம் இருந்தது. ஆனுல்.... ஆனுல்..."—ஹேமாவினுல் மேலே பேச முடியவில்லை.

"போதும்...."

"எதற்காக என் பேரிலே இப்படிக் கோபிக்கிறீர்கள்? நான் என் பாபத்தைச் சொல்ல முடியா

'இன்டர்வ்யூ'வில் சந்தித்த அந்த ஹேமா எங்கே?

சிறப்பு ஏடுகள்

பேசும் படம்	0-12-0
திங்கள்	0 - 8-0
காதல்	0 - 8-0
கலைக்கதிர்	0 - 8-0
அமுதசுரபி	0 - 8-0
சினிமா கதிர்	0 - 8-0
நல்வாழ்வு	0 - 8-0
உதயபானு	0 - 6-0
வானொலி	0 - 5-0
குமுதம்	0 - 4-0
உமா	0 - 4-0
வக்கீல்	0 - 4-0
சுதந்திரம்	0 - 3-0
கல்கண்டு	0 - 2-0

Sole Agents for Madras:

The Madras News Agency,

Phone: 86241 **MADRAS-2.**

மல் இப்போது அனுபவிப்பது போதாதா?''

''என்ன பாவம் நீ அனுபவிக்கிருய்? நீ தான் என்னை நரகத்தில் தள்ளுகிருய். காதலிக்கவில்லை; கலியாணம் செய்து கொள்ள இஷ்டமில்லை என்று ஒருவார்த்தை சொல்லிவிடு; உன்னை இம்சை பண்ணுமல் – ஏன், உன்னையே நினைக்காமல், நான் எங்கேயாவது ஓடி விடுகிறேன்....''

''ஐயோ, இதைச் சொல்லாதீர்கள். முன் பிறவியில் நான் என்ன பாவத்தைச் செய்தேனே? இப்பொழுது விளங்காதவாறு பேசுகிறேன். நீங்களும் வேதனை தரும்படி பேசி என்னை – என் மனத்தை...'' என்று விம்மினுள் அவள். அங்கே போட்டா ஒன்று காணப்பட்டது. சாம்பசிவத்தின் தகப்பஞருடைய புகைப்படம். இராணுவ உடையில் கம்பீரமாகக் காட்சியளித்தது.

''அந்தப் புண்ணியவானுக்கு.... அந்தப் புண்ணியவானுக்கு....''— ஹேமா தொடர்ந்து பேசவில்லை; தனது சேலைத் தலைப்பை வாயில் புதைத்து குரல் எழும்பாமல் அடக்கிய வண்ணம் படியிறங்கி ஓடி விட்டாள் – ஓடியே விட்டாள்!

ஒரு சமயம், தன்னுடன் 'இன்டர்வ்யூ' ஒன்றுக்கு வந்திருந்த அழகி ஹேமாவா இப்படி அலங்கோலமாகி விட்டாள்....?

கடைசியாக ஒருநாள் பேச்சோடு, ''என் அபிப்பிராயத்தை அவருக்கு எழுதி விட்டேன். உங்கள் நோக்கம்தான் என்ன? எனக்கும் தள்ளவில்லை,'' என்று பெண் வீட்டிலே கேட்டும் விட்டாள் சாம்பசிவத்தின் தாயார். இது உண்மையில் சாம்பசிவம் சொல்லிக் கேட்ட கேள்விதான்.

''எங்களுக்கும் சம்மதமே... ஆனல் சொல்ல முடியாமல் இருக்கிறோம். ஹேமா...'' என்று மேலே பேசாமல், ஏதோ சொல்லிப் பிறகு, 'பார்க்கலாமே' என்று கூறிவிட்டனர்.

அன்றைக்கு அவன் தகப்பஞர் ஆபீஸ் காரியமாக ஊருக்கு வர இருந்தார். இந்தத் தடவை பையனின் கலியாணத்தைமுடித்து விட்டுப் போவதாகவும் அவர் எழுதியிருந்தார். ஆனல்...

"ஐயோ, அம்மா..." என்று அலறினுன் சாம்பசிவம். அவன் தந்தை புறப்பட்டு வந்த விமானம் வந்து சேரவில்லை; புரண்டு விழுந்து பற்றியெரிந்துகொண்டே தரையில் விழுந்து விட்டதாம்.

''துடை காலி...இந்தச் சம்பந்தமே வேண்டாம்,'' என்று அலறினுள் சாம்பசிவத்தின் தாய்.

ஆனல் அவர்கள் – ஹேமா வீட்டார் – ஒருவர் விடாமல் வந்து விட்டனர்.

''அவள் நட்சத்திரத்திற்கு மாமஞருக்கு ஆகாது என்றுதான் இதுவரை சம்மதம் சொல்லாமல் இருந்தோம்,'' என்று சோகத்தோடு புலம்பினுர்கள் அவர்கள்.

ஆமாம்; சாம்பசிவத்தின் தந்தை கடைசியில் அந்தப் பிரயாணத்தில் தன் மகனின் விவாகத்தை எப்படியும் நிச்சயம் செய்யத்தான் செய்து விட்டார்...! ★

தாம்பூலத்திற்குச் சிறந்தது

REGD. No. 1515 & 138017

ஸ்டூடென்ஸ்

STUDENTS

பாக்குதூள்

NUT

ஸ்டூடென்ஸ்

சுகந்த

பாக்குத்தூள்

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

P. R. V. & Son.,

28, முல்லா சாகிப் தெரு,

மதராஸ்—1.

எங்கும் புகழ்பெற்றது!

விநாயகர்

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

18. அண்ணா பிள்ளை தெரு, சென்னை.1.

பத்திரிகைக் காட்சி: விமரிசனம்:

மதுரை வீரன்

'மதுரை வீரன்' தமிழ்நாட்டில் இரண்டாம் முறையாகப் பவனி வருகிறான். அவன் உருவில் மூன்று நான்கு மாறுதல்கள். முதுமையின் விளைவல்ல; இளமையின் துடிப்பு அவை.

சக்கிலியக்குடிலுக்கும் அரண்மனைக்கும் காதல் பாலம் சமைக்கப்படுகிறது. இடையிலோ, அல்லது முடிவிலோ கணிகை ஒருத்தி. ஆக, காதல் இங்கே மூன்று வட்டப் புள்ளிகளில் அமைந்து ஒரு முக்கோணமாக்கப் படுகிறது.

கிருஷ்ணா பிக்சர்ஸார் பொது ஜனங்களின் ஆசைகளை நன்ருகப் புரிந்தவர்கள். அவர்களது பெரும்பாலான படங்கள் ஜனரஞ்சகமாகவே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வகையில் 'மதுரை வீர'னுக்கும் இடம் உண்டு.

திரு எம். ஜி. ராமச்சந்திரனுக்கும் திருமதி பானுமதிக்கும் ஜோடிப் பொருத்தம் (படத்தில்) உண்டென்று பொதுஜன வாக்கெடுப்புக் கூறியது, 'மலைக்கள்ளன்' திரையிடப்பட்டதும். படத் தயாரிப்பாளர்கள் இவ்விருவரையும் குறித்து வைத்துக்கொண்டார்கள். எம். ஜி. ஆர். ஏகப்பட்ட சண்டைகள் செய்கிருர்; பானுமதியும் பத்மினியுங்கூட வாள் பிடிக்கின்றனர். பத்மினிக்கு மட்டும் இது புதிது. அதிகப்படியான நடனங்கள்; ஆடவேண்டியவர்கள் ஆடியிருக்கிருர்கள். எம். ஜி. ஆர். ஆடியிருப்பதுகூட 'தமாஷாக'த் தான் இருக்கிறது.

'சதார'த்தைக் காட்டிலும் இதில் பானுமதிக்குப் பொறுப்பு அதிகம். மதுரை வீரன் மாறுகால் மாறுகை வாங்கப்பட்டுத் துடிக்கும் கட்டத்தில் பானுமதியின் பேச்சு இன்னும் எடுப்பாக அமைந்திருக்கவேண்டும். பத்மினி இந்தக் கட்டத்தில் வழக்கம் போல் சிறப்பாக விளங்குகிருர். ஈ.வி.சரோஜா உபபாத்திரம். தன் எதிர்காலத்தில் கவலை கொண்டிருக்கிருர். பாலையாவிடம் பழைய முத்திரைகள் தாம் காணப்படுகின்றன. கலைவாணர் தம்பதிகள் இல்லையென்ருல், நமக்குச் சிரிப்பதற்கு வாய்ப்பே கிடைக்காது.

'வாங்க மச்சான் வாங்க'; 'அவர்க்கும் எனக்கும்' என்ற இரண்டு பாட்டுக்கள் கேட்க இனிமையாக இருக்கின்றன. ஆனுலும், செல்லப்பா ராஜலக்ஷ்மி பாடிய 'ஆசை வச்சேன்' என்ற அந்தப் ஒரு பாட்டு இன்னும் நம் காதுகளில் ரீங்காரமிடுகின்றனவே!.... கவிஞர் திரு கண்ணதாசனின்

வசனங்கள் சிறப்பாக அமைக்கப் பட்டிருக்கிறன.

அந்த 'மதுரை வீரனை'விட இந்த 'மதுரை வீரன்' சிறந்ததா, இல்லையா என்பதைப் பற்றி எண்ணும்போது, இந்த 'மதுரை வீரனு'க்குக் கூடியிருக்கும் மக்கள் சமுத்திரத்தைப் பார்க்கிறோம். ஆமாம்; பொது மக்களின் தீர்ப்பு தான் ஒரு படத்தின் வெற்றி – தோல்விக்கு உரைகல்!

—'பைரவி'

சந்திப்பு: 'தாரா'

ஈ. வி. சரோஜா

'என் தங்கை' அறிமுகப்படுத்திய சிறுமி சரோஜாவை 'குலேபகாவலி' அழகுக் கன்னியாக விளம்பரப் படுத்தியது. பிறந்தது காவிரி சூழ் தஞ்சை மண்ணில். எட்டாவது வகுப்புவரைப் படித்திருக்கிறார். தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகள் பேசத் தெரியும். ஆறாவது வயதில் தன் பெரியப்பா மருதூர் கோவிந்தராஜப் பிள்ளையிடமும், பின்னர் வழுவூராரிடமும் நடனம் பயின்றார். திரைப்படங்களில் அறிமுகப்படுத்திய பெருமை வழுவூராருக்கே உரியது. 'விளையாட்டுப் பொம்மை', 'பெண்ணரசி', 'நாகதேவதை' (தெலுங்கு, கன்னடம்), 'நல்லதங்காள்', 'மதுரை வீரன்', 'எது நிஜம்?' (தெலுங்கு) 'டாக்டர்' (சிங்களம்) முதலிய படங்களில் நடித்திருக்கிறார். இனி திருமதி சரோஜா பதில் சொல்லுவார்:

"இப்பொழுது நீங்கள் நடித்துக் கொண்டிருக்கும் படங்கள் எவை?"

"காத்தவராயன் கதை', 'புதுமைப் பித்தன்', 'மறுமலர்ச்சி', 'பூலோக ரம்பை', 'சம்பூர்ண ராமாயணம்', 'அமர தீபம்', 'கண்ணின் மணிகள்', 'குடும்ப விளக்கு', 'பாய்பாய்' (இந்தி), 'அரிச்சந்திரா' (தமிழ், தெலுங்கு) ஏ. வி. எம். சதாரம் (தெலுங்கு, கன்னடம்)"

"இப்போது நடிக்கும் படங்களில் எதிலாவது கதாநாயகியாக நடிக்கிறீர்களா?"

"இதுவரை எதிலும் கதா நாயகியாக நடிக்கவில்லை. கதா நாயகி பாகம் கொடுத்தால் என்னால் திறமையாக நடிக்க முடியும்".

"தங்களுக்கு நாடக அனுபவம் உண்டா?"

"இல்லை. நாட்டியம்தான் ஆடி வருகிறேன்."

"நீங்கள் இதுவரை நடித்த படங்களில் சொந்தக் குரலில் பாடியிருக்கிறீர்களா?"

"இதுவரைப் பாடியது இல்லை. ஆனால் என்னால் சொந்தக் குரலில் பாட முடியும் என்பதைக் கூற ஆசைப்படுகிறேன். எங்களுடைய பரம்பரையே சங்கீத பரம்பரை தான்...பிடில் வித்வான் மாயவரம் கோவிந்தராஜப் பிள்ளை, பிரபல

பாடகர் சிதம்பரம் ஜெயராமன், டி. ஆர். ராஜகுமாரி முதலியவர்களெல்லாம் என்னுடைய உறவினர்கள்தாம்.''

"எந்த மாதிரியான பாகம் கொடுத்தாலும் நீங்கள் திறம்பட நடிப்பீர்களா?''

''நிச்சயமாக என்ஞல் நடிக்க முடியும். 'என் தங்கை'யில் சோக பாத்திரத்திலும், 'குலேபகாவலி'யில் நகைச்சுவைப் பாகத்திலும், 'மறுமலர்ச்சி'யில் சாக ஸக்காரியாகவும் நடித்திருக்கிறேனே!''

''நீங்கள் இதுவரை நடித்த படங்களில் உங்களுக்குப் பிடித்தமான படம் எது?''

''குலேபகாவலி.''

"உங்களுக்குப் பிடித்தமான நடிகைகள் யார்?''

''டி. ஆர். ராஜகுமாரி, பத்மினி.''

''சமீப காலத்தில் வெளிவந்த தமிழ்ப் படங்களில் உங்களுக்கு மிகவும் பிடித்தமான படம் எது?''

''எதிர்பாராதது.''

"தங்களுக்குக் கடவுள் பக்தி உண்டா?''

''ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கை உடையவள் நான்!''

"ரசிகர்கள் எழுதும் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதுண்டா?''

'நல்லமுறையில் ரசிகர்கள் கடிதம் எழுதிஞல் நிச்சயம் அவர்களுக்குப் பதில் எழுதுவேன்.''

''இன்றையத் தமிழ்ப்பட உலகைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

''முன்னைவிட இப்போது எவ்வளவோ முன்னேறியிருக்கிறது. நன்ருக நடிப்பவர்களுக்கு நடிக்கப் போதிய சந்தர்ப்பம் கொடுக்கப் படுவதில்லை என்பதை வருத்தத்துடன் கூறிக் கொள்ளுகிறேன்.'' ★

உள்ளது உள்ளபடி

இவர்களுக்குப் புகழ் இவற்றிஞலே..!

சிவாஜி	பராசக்தி
ஜெமினி	க. க. க. தெய்வம்
எம். ஜி. ஆர்.	மலைக்கள்ளன்
நாகேஸ்வர ராவ்	தேவதாஸ்
தங்கவேலு	பணம்
எஸ். ஏ. நடராஜன்	மந்திரிகுமாரி
நரசிம்ம பாரதி	பொன்முடி
சாவித்திரி	தேவதாஸ்
டி. ஆர். ராஜகுமாரி	கச்சதேவயானி
கண்ணும்பா	கண்ணகி
ராஜசுலோசஞ	நல்ல தங்கை
பானுமதி	லைலாமஜ்னு
ஈ. வி. சரோஜா	குலேபகாவலி
வி. என். ஜானகி	ஆயிரந்தலை வாங்கி அபூர்வ சிந்தாமணி
எம். என். ராஜம்	ரத்தக்கண்ணீர்

○○○

சொல்லுங்கள்—கேட்போம்:

நாடகமேடை அனுபவம் இல்லாமல் திரை உலகின் புகழ் ஏணியில் இருப்பவர் யார்?

இரவல் குரல் வாங்காமல், சொந்தக் குரலில் பாடுபவர் யார்?

தமிழ் நாட்டிலே பரத நாட்டியத்தில் தேர்ந்த ஞானம் உடையவர் யார்?

தென்ஞட்டின் முதல் பெண் டைரக்டர் யார்?

என். எஸ். கே இல்லாமல் மதுரம் மாத்திரம் நடித்த படம் எது? ★

எமது சிறந்த
தயாரிப்பான
நான்கு நன்மணிகள்
ZAMA INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA RUB
ஜாமா றப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ் பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
கபால் பெட்டி 518 - - - சென்னை-3
போன் 2182
தந்தி: "ஜாமா"

அழகுக்கு அழகு செய்யும்

அசோகா ராயல் டால்க் பௌடர் டீலக்ஸ்

சர்மத்தை மிருதுவாகவும் பிரகாசமாகவும் செய்யக் கூடிய வஸ்துக்கள், வாசனைத் திரவியங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அழகுள்ள 2 சைஸுகளுள்ள டப்பிகளில் கிடைக்கும்.

உங்கள் வியாபாரிகளிடம் விசாரிக்கவும்.

விஜயா கெமிகல்ஸ், மதராஸ்-7

ஆஸ்த்மாவா?

ஒரு நொடியில் அதை ஒழிப்பது

மல்டிமிக்ஸ்

தாராளமாக மூச்சு வரச் செய்து, தொண்டைக்கு இதமாக இருந்து, மூச்சடைப்பையும் இருமலையும் போக்குகிறது.

இந்தோ-ப்ரெஞ்ச் பார்மஸூடிகல் கோ.
காதோலிக் ஸென்டர், மதராஸ்-1

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு)

எல்லா வலி, நோவுகளையும்
மாயமாய்ப் போக்கடிக்கும்
ORIENTAL BALM
இதில் மாயாஜாலம் ஒன்றும் கிடையாது. 70 ஆண்டுகளின் அனுபவ அடிப்படையில் அமைந்த சரியான செய்முறைதான் தடவியதும் வலி, நோவுகளை போக்கடித்து இதமளிக்கச் செய்கிறது. தலைவலி, சீதளம், முடக்கு வாதம் மற்றும் எல்லா தலை-வலிகளுக்கும் இன்றியமையாத நிவாரணி.
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்

Regd. No. M 6309. UMA May 1956
Registered as a Newspaper in Ceylon

Edited, Printed and Published by G. Umapathy, at Uma Printers, 'Uma House' 4/32, Thathamuthiappan Street, Madras-1. Phone : 2200